GITIZED

போதவை மித்திரன்

புஸ்தகம்   எண் 3-5

அக்டோபர் - நவம்பர் 1937

N37.6.3-5
208169

Regd. No. M. 2419



மாத்வமித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 10 புஸ்தகம் 10	ஈசுவர ஸம்வத்ஸரம். ஆச்வீஜ மாஸம் (19-10-1937) மங்களவாரம்.	**No. 3** நெ. 3

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1.	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	65
2.	ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	68
3.	ஸ்ரீமஹாபாரத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)	73
4.	லக்ஷ்மணன் பரதனுக்குத்தமையனே	78
5.	பிரம்ம ஸூத்ரம் (ஸ்ரீமான் M. ராமராவ்)	84
6.	ஸ்திரீ வித்யை	88
7.	ஜனனக்கிரமம்	92
	மதிப்புரை	94
	விசேஷ தினங்கள்	96

...ரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,
ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 — ஈசுவர ஸம்வத்ஸரம். ஆசுவீஜ மாஸம். — NO. 3

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 44ம் பக்கம் தொடர்ச்சி)

171. வீரஹா (ஓம் வீரக்னே நம:) வாயு பகவானை த்வேஷிப்பவர்களை கொல்பவர். அஸுரவீரர்களை ஸம்ஹரிப்பவர். முக்யப்ராணர்களைக்கொண்டு அஸுரர்களைக்கொல்பவர். முக்யப்ராணர்களுடன் செல்பவர்.

172. மாதவ: (ஓம் மாதவாய நம:) லக்ஷ்மீபதி. வித்யைக்கு அதிபதி. மாலட்சுமியையும் நடுங்கச்செய்பவர். நடுக்கமில்லாதவர்.

173. மது: (ஓம் மதவே நம:) ஸுகரூபியானவர். தேனைப்போல் மிருந்த விருப்பத்தை உண்டாக்குபவர்.

174. அதீந்திரிய: (ஓம் அதீந்திரியாய நம:) இந்திரியங்களைத் தாண்டியவர். இந்திரியர்களுக்கு ஸம்பூர்ணமாய் எட்டாதவர். அநேக இந்திரியங்களுடையவர்.

175. மகாமாய: (ஓம் மகாமாயாய நம:) மஹத்வம் பொருந்திய லக்ஷ்மியின் லாபத்தைக் கொடுப்பவர். மகான்களான ஞானிகளின் லாபம் ஏற்படும்படிச் செய்பவர். வஞ்சனை இல்லாதவன். மிக்க மாயையுடையவர். மகத்தான ஸங்கல்பம் உடையவர். ஸாது ஜனங்களுக்கு உசிதமான விருப்பமுடையவர்.

176. மகோத்ஸாஹ: (ஓம் மஹோத்ஸாஹாய நம:) ஜகத் சிருஷ்டி முதலிய காரியங்களின் மகத்தான உத்ஸாகமுள்ளவர். யக்ஞம் முதலான உத்ஸவங்களில் உற்சாகமுள்ளவர். மிகுந்த ஊக்கமுள்ளவர்.

177. மகாபல: (ஓம் மகாபலாய நம:) மகாபலமுள்ளவர். பெரியதான லக்ஷ்மி ரூபமுள்ள ஸ்திரீயைக்கொண்டவர். பலாஸுரனைக்கொன்ற இந்திரனை மகானாய்ச் செய்தவர்.

178. மகாபுத்தீ: (ஓம் மகாபுத்தயே நம:) மகத்தான ஞானமுள்ளவர். மகத்தான புத்தியுள்ளவர்.

179. மகாவீர்ய: (ஓம் மகாவீர்யாய நம:) மகத்தான பராக்கிரமமுள்ளவர்.

180. மகாசக்தி: (ஓம் மகாசக்தயே நம:) மகத்தான வல்லமையுடையவர். பெரிய சாமர்த்திய முள்ளவர்.

181. மகாத்யுதீ: (ஓம் மகாத்யுதயே நம:) மிகுந்த ப்ரகாசமுள்ளவர். சூரியனுக்கு மிகுந்த ப்ரகாசத்தைக் கொடுப்பவர். சூரியனுடைய ப்ரகாசத்தைக்கொண்டவர்.

182. அநிர்தேச்ய வபு: (ஓம் அநிர்தேச்ய வபுஷே நம:) குறிப்பிடமுடியாத தேகமுள்ளவர். குறிப்பிடமுடியாத தேஜஸ் முள்ளவர். குறிப்பிடமுடியாத சரீர காந்தியுள்ளவர். உபமானம் சொல்லக்கூடாதவர். உபமானம் சொல்லமுடியாதபடி மன்மதனை விட மிகவும் அழகர்.

183. ஸ்ரீமான் (ஓம் ஸ்ரீமதே நம:) ஐசுவரியமுடையவர்.

184. அமேயாத்மா (ஓம் அமேயாத்மனே நம:) சர்பூர்ணமாய் அறியமுடியாத ஸ்வரூபமுள்ளவர்.

185. மகாத்ரித்ருத் (ஓம் மகாத்ரித்ருதே நம:) பெரியதான மந்தர பர்வதம் கோவர்த்தன பர்வதம் முதலியவைகளைத் தாங்கியவர். மகானான வாயுபகவானைத் தரிப்பவர்.

186. மகேஷ்வாஸ: (ஓம் மகேஷ்வாஸாய நம:) மகத்தான தனுஸ்ஸையுடையவர். மகத்தான விருப்பமுடையவர். மகத்தான பாணமுடையவர். மகத்தான தனுர்பாண் பாணியாய் எல்லா இடத்திலேயுமிருப்பவர்.

187. மஹீபர்த்தா (ஓம் மஹீபர்த்ரே நம:) பூதேவியின் கணவன். உற்சவமுள்ளவரும் லக்ஷ்மீபதியுமானவர். உற்சாகமுள்ள

208169
சென்னை-600 008

வரும் மன்மதனுக்கு அதிபதியுமானவர். வராகாவதாரத்தில் பூமியைத் தாங்கியவர். கூர்மாவதாரமெடுத்து பூமியைத்தாங்குபவர்.

188. ஸ்ரீனிவாஸ: (ஓம் ஸ்ரீனிவாஸாய நம:) லக்ஷ்மிதேவி தன்னிடம் வசிக்கப்பெற்றவர். லக்ஷ்மி தன்னிடம் தங்கியிருக்கப் பெற்றவர். லக்ஷ்மியை நடத்துகிறவரும் எல்லா உலகத்திலும் வசிப்பவருமானவர். ஐசுவரியத்தை பக்தர்களுக்கு கொடுத்து எல்லோரையும் வாழச்செய்கிறவர்.

189. ஸதாம் கதி: (ஓம் ஸதாம் கதயே நம:) ஸ்வரூபாவிர்பாவமாகி ஆனந்தத்துடன் கூடிய பக்தர்களுக்கு கதியானவர். கஷ்டப்படும் க்ஞானிகளுக்கு கதியைத்தருபவர்.

190. அநிருத்த: (ஓம் அநிருத்தாய நம:) யாராலும் தடுக்கப் படாதவர். க்ஞானிகள் விஷயத்தில் யாதொரு தடையுமில்லாதவர். முக்யப்ராணனை குருவாய் கொண்டவர்களால் தம் ஹிருதய கமலத்தில் தடுக்கப்படுபவர். வேதாதி சப்தங்களைக்கொள்ளாமல் அவைகளில் சொல்லப்பட்டவைகளுக்கு விருத்தமான ஆசாரங்களைக்கொண்டவர்களைக் கொல்பவர்.

191. ஸுராநந்த: (ஓம் ஸுராநந்தாய நம:) நல்ல க்ஞானத்தைக்கொடுத்து ஆனந்திப்பவர். தேவர்களை ஆனந்திக்கச்செய்பவர்.

192. கோவிந்த: (ஓம் கோவிந்தாய நம:) பூமியை அடைகிறவர். பானத்தை அடையப்பெறுபவர். பசுவை அடைகிறவர். ஸ்வர்கத்தை அடைகிறவர். வேதத்தை அடைகிறவர்.

193. கோவிதாம்பதி: (ஓம் கோவிதாம்பதயே நம:) வேதவித்துக்களுக்கு அதிபதி. நீரில்வாழும் ப்ராணிகளுக்கு அதிபதி.

194. மரீசி: (ஓம் மரீசயே நம:) தம்மால் தமஸ் இல்லாமல் செய்பவர். ஜலத்தைக்கொண்ட மேகம் முதலானவைகளை சலிக்கச்செய்பவர். காந்தியுள்ளவர்களுக்கும் காந்தியாயிருப்பவர் கிரணங்களைக்கொண்டவர்.

195. தமன: (ஓம் தமனாய நம:) தமனுஸுரனைக்கொல்பவர் தவனத்தில் பிரியமுள்ளவர். உள் இந்திரிய நிக்ரஹமுள்ளவர்களை நடத்துகிறவர். ஸம்ஸார தாபத்தை சமனம் செய்பவர். அடக்குபவர். தண்டிப்பவர். அபீஷ்டத்தை அளிக்கும் மனமுடையவர்.

196. ஹம்ஸ: (ஓம் ஹம்ஸாய நம:) எப்போதும் ஸமஸ்த தோஷமில்லாதவரும் ஸாரரூபியுமானவர். ஹம்ஸரூபியானவர். பற்றுதலைப்போக்குபவர். அழகாய் நடப்பவர். அழகான மந்த ஹாஸமுள்ளவர்.

197. ஸுபர்ண: (ஓம் ஸுபர்ணாய நம:) நன்கு உத்தமமான ஆனந்த ரூபியானவர். கருட ரூபியானவர். ஹம்ஸாதி அவதாரங்களில் அழகிய சிறகுகளையுடையவர்.

198. புஜகோத்தம: (ஓம் புஜகோத்தமாய நம:) ஸர்பங்களில் உத்தமமானவர். சேஷரூபியானவர். ஆதிசேஷனை சமானமாகக் கொண்டவர். கோணல் நடத்தையுள்ள தமோயோக்யர்களுக்கு உத்தமமான அந்தம் தமஸ்ஸைக் கொடுப்பவர்

199. ஹிரண்யநாப: (ஓம் ஹிரண்யநாபாய நம:) ஹிரண்யனைக்கொன்றவர். ஸுவர்ணம்போன்ற அழகிய நாபியை உடையவர். ஸுவர்ணத்தை நாபியில் கொண்டவர்.

200. ஸுதபா: (ஓம் ஸுதபஸே நம:) சிறந்த ஞானமுடையவர். சதுர்முகனை ஸம்ரக்ஷிப்பவர். ஸோமரஸத்தைப்பானம் செய்கிறவர். நாராயணாதி ரிஷிகளின் ரூபத்தைக்கொண்டு சிறந்த தபம் புரிகிறவர்.

(தொடரும்)

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீமத்வ விஜயம்.

(முன் 18ம் பக்கம் தொடர்ச்சி)

50. இந்த வனக்ரீடையைச் செய்தபின் ஜாடைகளைக்காட்டுபவர்களான அந்த முக்திஸ்திரீ ஜனங்கள் அழகிய நடைகளுடன் நடந்துவருகையில், கால்களிலணிந்திருக்கும் பாதஸரங்கள் சப்திக்கவும், அதைக்கண்டு நீரில் வசிக்கும் ஸாரஸபக்ஷிகள் சப்தித்துக் கொண்டு அந்த ஸ்திரீகளைப்போல் நடந்து காட்டி பின் பற்றி வரவும், அந்த பக்ஷி கூட்டங்களுள்ளவர்களாய் தம் பர்த்தாக்களுடன் அமிர்தமே ஜலமாகக் கொண்ட நீர் ஓடைகளில்

புகுந்து நீந்தி நீராடி இருகைகளால் ஜலத்தை அடித்து சப்தப்படுத்தி அதைக்கண்டு நகைக்கும் முகமுள்ளவர்களாய் ஜலக்ரீடையைச் செய்கின்றனர்.

51. இவ்வாறு ஜலத்தில் விசித்ரமான க்ரீடைகளைச் செய்து அழகான பவழமயமான கரையைச் சேர்ந்தவர்களாய் அந்த முக்திஸ்திரீகள் நல்ல பரிமளமுள்ளதாயும் அழகான வர்ணமுள்ளதாயுமுள்ள சந்தனப் பூச்சை தம் சகிமார்களின் கைகளிலிருந்து பெற்று தம் சரீரங்களில் பூசிக்கொள்கின்றனர்.

52. தாமரைக் கண்களுள்ள அந்த முக்த ஸ்திரீகளின் ஜகனமாகிய இடையின் முன் பக்கமும் அதன் மேலுள்ள வஸ்திரமும் வெகு அழகாய் பொருந்தி, ஜகனத்தால் வஸ்திரமும் வஸ்திரத்தால் ஜகனமும், இவ்வாறு ஒன்றுக்கொன்று அலங்காரமாய் இருந்து வந்தது. இப்படியே இவர்களின் குசங்களால் அவைகளின் மீது எழுதப்பட்டிருக்கும் குங்கும பத்ரமும், குங்குமத்தால் குசங்களும், கூந்தல்களால் அவைகளின்மீது தரித்திருக்கும் புஷ்பமாலையும், புஷ்பமாலைகளால் கூந்தல்களும், கண்களால் மையும் மையால் கண்களும், சரீர அவயவங்களால் ஆபரணங்களும் ஆபரணங்களால் அங்கங்களும் இவ்வாறு பரஸ்பரம் அலங்காரமாய் இருந்துவந்தது.

53. பிறகு இடை சிறுத்தவர்களான அந்த முக்தஸ்திரீகள் தம் தம் வீடுகளுக்கு திரும்பி வந்தவர்களாய் அவர்களின் உத்தமர்களாயும் ப்ராணப்ரியர்களாயுமுள்ள கணவர்களுடன் தங்கமும் இரத்தினங்களும் இழைத்த பான பாத்ரங்களைக் கொண்டு, ஸம்ஸாரிகளுக்கு கிடைக்க முடியாததான அமிர்தத்தை பானம் செய்கின்றனர்.

54. மையிட்டிய கண்களுள்ள அந்த முக்தஸ்திரீகள், சம்போகத்தில் விருப்பங்கொண்ட தம் கணவர்களின் மெத்தென்றுள்ள மனோஹரமான படுக்கை விரித்திருக்கும் மாணிக்யமான மஞ்சத்தை, கணவனால் வற்புறுத்தப்பட்டும் அடக்கத்துடன் மெதுவாகவே ஏறுகின்றனர். சிருங்காராதி ஸமஸ்தரஸங்களுக்கும் அடக்கம் தான் அழகை அளிப்பதன்றோ?

55. அங்கு ஓர் முக்தஸ்திரீ தன் ப்ரியனான கணவனின் எதிரில், மலர் மாலையுடன் தலை கூந்தலை முடித்துக் கொள்ளும்

வியாஜமாய் உயரத்தூக்கிய மனோஹரமான குசங்களுள்ளவளாயும் பர்த்தாவால் நன்றாய்க் கண்டு கொண்ட அழகிய கட்கங்களின் ரேகைகளுள்ளவளாயும், காமமோகம் மேலிட்டு கணவனால் இறுக அணைக்கப்படுகிறாள்.

56. பெருத்ததாயும் வட்டமானதாயும் உயர்ந்ததாயும் கடினமானதாயுமுள்ள இருஸ்தனங்களால் தடுக்கப்படும் அகண்ட இடைவெளியுள்ளதான இருபுஜங்களால் ஆனந்தியான எந்த முக்த புருஷன், தன் சொந்த எந்த முக்தஸ்திரீயை ஆலிங்கனம் செய்து இவ்வுலகில் ஆனந்தமடையாமல் இருப்பான்.

57. புன்சிரிப்பால் மலர்ந்ததும் மினுமினுக்கும் கன்னங்களுள்ளதும் ஜொலிக்கும் மாணிக்ய குண்டலங்களுள்ளதும் குளிர்ந்த கடைக்கண் பார்வையால் சுறுசுறுப்புள்ளதுமான தன் பாரியாளின் முகத்தை நெடுநேரம் ஆழ்ந்து கண்ணாரக் கண்டு அவளிடம் மிக்கப்ரியமடைந்த அவளுடைய முக்த புருஷன் முத்தமிடுகிறான்.

58. அழகிய கண்களுள்ள அந்த நாயகியை அணைத்து தழுவியதால் உண்டான பூர்ண சுகங்கொண்ட அந்த முக்த புருஷன் நாணத்தால் சிறிது குனிந்த அவளுடைய மதிமுகத்தை தன் கரங்களால் நிமிர்த்து அவளுடைய மதுரமான உதட்டிலுள்ள அமிர்த ரஸத்தை வெகுநேரம் பானம் செய்தும் போதுமென்று நிறுத்துவதில்லை.

59. பிறகு மிகவும் பிரியனான அந்த முக்த புருஷன் ஸம்போக கோலாகலத்தில் உற்சாகங்கொண்டு தன் நாயகியின் இடுப்பு வஸ்திரத்தை அகற்ற தன் தளிர் கையை வேகமாய் முயற்சிக்கவும், விசாலமான கண்களுள்ள அந்த நாயகி தன் கையால் அதைத் தடுக்கவும், பலமாய் முன்னைவிட இரண்டு மடங்கு வேகத்துடன் தன் கையை ஏவுகிறான்.

60. பிறகு இதற்கு இணங்கி அந்த நாயகிகள் தம் நாயகர்களால் ஆனந்தத்தின் ஆதிக்கத்தால் கிளேதமுறச்செய்த பெருத்த ஸ்தனங்களுள்ளவர்களாய், அவர்களை இறுகத்தழுவி, அக்ஷணமே மிகுந்த துணிச்சல் கொண்டு, ஸம்போக காலத்தில் ஏற்படும் குரலோசை முதலிய காமலீலைகளை விரிவாக்குவதில் சுறுசுறுப்பு கொண்டு, தன் நாயகர்களை ஆனந்தப்படுத்துகின்றனர்.

61. வேறு எந்த லோகத்திலுமில்லாத குணங்களைக் கொண்ட அந்த நாயகிகள், வேறு எந்த லோகத்திலும் காணப்படாதவர்களாய், தங்களை சுகப்படுத்தும் அந்த முக்த புருஷர்களை ஆனந்தப்படுத்துகின்றனர். இவ்வாறு அந்த முக்த புருஷர்களும் முக்த ஸ்திரீகளும் பரஸ்பரம் ரமணம் செய்கின்றனர். இந்த வைகுண்டத்தை தவிர்த்து வேறு எந்த லோகத்திலுமில்லாத லோகவிலக்ஷணமான இந்த காமலீலை இங்குமிகவும் சோபிக்கிறது.

62. எல்லாவகை தோஷமுமில்லாத ஸ்தானமாகிய அந்த வைகுண்டலோகத்தில், சரீரசோர்வை, வேர்வை நீர், துர்நாற்றம் முதலிய தோஷங்களைக்கொண்ட ஸம்போகம் என்பது எக்காலத்திலும் இல்லை. தம்பதிகள் விட்டுப்பிரிதலின் துக்கத்தை அனுபவிக்கிறார்கள் என்பதும் இல்லை. வேறு பத்னியிடம் ரமிப்பதால் கோபங்கொண்டு கலகம் உண்டாவதும் இல்லை.

63 வைகுண்டத்தில் க்ஞானானந்த ஸ்வரூபமாய் இருப்பதால் தம்பதிகளின் கும்பல்களின் சரீரம் வெளிப்புறமும் உட்புறமும் நல்ல வாசனையுடன்தான் கூடியிருந்தது. ஆகவே அந்த வைகுண்டத்தில் நடக்கும் முக்தர்களின் ரமணம் ப்ரம்மஞானிகளாலும் சிலாகிக்கப்படுகிறது.

பகவத் ரூபத்தின் வர்ணனை.

64. இதர லோகங்களுக்கு புலப்படாததாயும் ஸமஸ்தமான முக்தர்களின் கும்பலின் கண்களுக்கு புலப்படுவதாயிருக்கும் விஷயத்தைக்கேளுங்கள். அந்த வைகுண்டத்தில் லக்ஷ்மீபதியான நாராயணர் பரிபூர்ணமான சிருங்காரம் பலம் வீரியம் முதலான அனந்த குணங்களின் சமுதாயமுள்ளதும் ஸுந்தரமானதுமான தன் சரீரத்தை எப்போதும் கண்ணில்படும்படி வெளிப்படுத்தியிருக்கிறார்.

65. பகவானுடைய அந்த ரூபம் எவ்வாறு இருக்கிறதென்றால் மாணிக்ய வரிசையால் சோபிக்கும் அமூல்யமான கிரீடங்கொண்டிருக்கிறது. நீலவர்ணங்கொண்டதால் மனோஹரமாயுள்ள ஆயிரக்கணக்கான சுருண்டமயிர்களைக்கொண்டது. அர்த்தசந்திரன்போன்ற நெற்றியில் துலங்கும் திலகமுள்ளது. காதில் பிரகாசிக்கும் மகரகுண்டலங்களுடன் கூடியது.

66. பதினாறு கலைகள் பூர்ணமாயுள்ள சந்திரனை பரிகசிக்கும் முகங்கொண்டிருக்கிறது. தாமரை போன்ற விசாலமான

கண்களைக்கொண்டிருக்கிறது. சிவந்த உதடுகளைக்கொண்டிருக்கிறது. இணையற்றதான புன்சிரிப்புடன் சேர்ந்த கடாக்ஷத்தின் விலாஸத்தால் தன்னை வணங்கும் பக்த ஜனங்களை ஆனந்தப் படுத்துவதாய் இருக்கிறது.

67. நவீனமான சங்கம் போல் மும்மடிப்புகளுள்ள கழுத்துடனிருக்கிறது. சூரியனின் காந்தி போன்ற காந்தி பொருந்திய ரத்ன சிரேஷ்டமாகிய கௌஸ்துபமணியின் சிலாக்யமான மாலையை தரித்திருக்கிறது. மிக்க மனோஹரமான ரத்ன ராசிகள் இழைத்த அழகிய காப்பு கொலுசுகள், மோதிரங்கள் பாஹுவலயங்களைக் கொண்டிருக்கிறது.

68. சூரிய ஸமூகங்களின் தேஜஸ்ஸின் ராசியுள்ள சக்ராயுதத்தை கையில் பிடித்ததாயும், சந்திர மண்டலம் போன்ற சங்கை பிடித்ததாயும், ஸுந்தரமான கமலத்தை தரித்ததாயும், அக்னியைப்போல் ஜொலிக்கும் கதாயுதத்துடன் இருப்பதாயும், பெரியதான தனுஸ்ஸை கையில் தரித்ததாயும், பெருத்த திரண்ட கைகள் கொண்டதாயும், மிகவும் சிறந்ததான உள்ளங்கையுடனுமிருக்கிறது.

69. சிலாக்யமான பெருத்த தோள்வளைகளைக் கொண்டது. சோபிக்கும் வக்ஷஸ்தலமாகிய உத்தமமான மணிமண்டபத்தில் பிரகாசித்து வரும் மகாலக்ஷ்மியைக் கொண்டது. பதினாங்கு லோகங்களையும் தரித்த மெல்லிய வயிருடனிருக்கிறது. அழகிய நாபிகமலத்தில் இருக்கும் சதுர்முகனுகிறவண்டால் துதிக்கப் படுகிறது.

70. மிக்க மனோஹரமாயுள்ள இடுப்பிலுள்ள ஒட்டியாணம் சேர்ந்த ஸுவர்ணகண்டம் போன்ற காந்தியுள்ள பீதாம்பரம் கொண்டதாயிருக்கிறது. உத்தமமான கஜத்தின் துதிக்கை போன்ற இருதுடைகளைக் கொண்டிருக்கிறது. கிரமமாய் திரண்ட வெகு அழகிய கணைக்கால்கள் கொண்டது.

71. சிலாக்யமான பாதஸாங்களுடையதும் உத்தம காந்தி பொருந்திய பாதநுனிகளுடையதும் நூதன பவழம் போன்ற காந்தியுள்ள நகவரிசைகளுடையதும் சக்ரம் சங்கம் பத்மம் த்வஜம் இவைகளின் ரேகைகளால் விளங்கும் சரணங்களின் தூளிகளால் மூவுலகத்தையும் பரிசுத்தம் செய்பவைகளாயும் இருந்து வருகிறது.

(தொடரும்)

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீமு, வே, பாகவத ரங்கனுதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

(முன் 38ம் பக்கம் தொடர்ச்சி.)

முப்பதாவது அத்யாயம்.

கலியின் நிக்ரஹம்

ஸ்ரீகிருஷ்ணருடன் கூடிய பாண்டவர்கள் பூமியை நன்றாய் ஸம்ரக்ஷணம்செய்யும்பொழுது கலி, பலி என்ற இரு மகாபலிஷ்டர்களான தைத்யர்கள் சில இடங்களில் தனது ராஜ்யத்திற்கு உபத்ரவம்செய்தார்கள். இந்த விருத்தாந்தத்தை பாண்டவர்கள் சீக்கிரமே கேட்டார்கள். தர்மபுத்திரராலும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாலும் நன்றாய் தூண்டப்பட்டவரான பீமசேனர் தம் கூட்டத்தார்களுடன் கூடிய கலியை கட்டி, அவனை தர்ம புத்திரருடையவும் ஸ்ரீகிருஷ்ணருடையவும் முன்னிலையில், கொண்டு வந்து நிறுத்தினார். மேலான புத்தியுள்ள தர்மபுத்திரர். ஸ்ரீகிருஷ்ணரின் முன்னிலையில் கலியை இவ்வாறு பிரசினம் செய்தார். துஷ்டபுத்தியுள்ள கலியே! என் ராஜ்யத்தை ஏன் நாசம்செய்தாய்? என்றார். இவ்வாறு கேட்கப்பட்ட கலி, தர்மபுத்திரா! ஸ்ரீயோதனன் யுத்தாங்கத்தில் இறந்தாய்ந்தமுதல், என்னுடைய காலம். இந்த என் காலத்திலும் நீ உன் பலத்தைக்கொண்டு ஆக்ரமித்து நிற்கிறாய். ராஜனே! அதனால்தான் நான் உம்முடைய ராஜ்யத்தை நாசம் செய்தேன், என்று சொன்னான். அதற்கு தர்மபுத்திரர் சொன்னதாவது—அரசர்களின் பலத்தால் தான் ராஜ்யம் நடக்கிறது. தேசமோ உன் ராஜ்யத்தில் இருந்தாலும் எனக்கு சமானமாயுள்ள பலிஷ்டர்களான அரசர்களால் அபகரிக்கப்படுகிறது. அந்த காலத்தில் உனக்கு அந்த ராஜ்யத்தின் ஆசை ஏது? அரசனுக்கு ராஜ்யப்ராப்தியால் காலம் காரணமா? கிருதயுகாதி காலத்திற்கு அரசன் காரணமா? என்று உனக்கு சந்தேகம் வேண்டாம். ராஜனேதான் காலத்திற்கு காரணம் என்றிவ்வாறு தர்மபுத்திரர்

சொல்லவும், கலி சொன்னதாவது—என் கலிகாலத்தில் உனக்கு சமானமாயுள்ள அரசன் எவன் இருக்கிறான். நான் அரசனைத்தான் முதலில் பிரவேசம்செய்து, பிறகு பிராம்மணர்களை பிரவேசம் செய்திருக்கிறேன். ராஜனே! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை சகாயமாய் கொண்டிருக்கும் உங்களிடம் என் சாமர்த்தியம் பலிக்கிறதில்லை. உங்களைத்தவிர என்னால் புத்திகெடாத அரசன் எவன்தான் பிராம்மணர்களுக்கும் தேவர்களுக்கும் விரோதியான என் காலத்தில் எங்குதான் இருக்கிறான். ராஜனே! என் கடைக்கண் பார்வை விழுந்தால் குணங்கள் எங்கு இருக்கப்போகின்றன. வேதங்கள் எங்கு இருக்கப்போகின்றன. நல்ல யுக்திகள் எங்கு இருக்கப் போகின்றன. என்று இவ்வாறு கலி சொல்லவும், தர்மபுத்திரர் சொன்னதாவது—கலியே! நீ அஸத்யவாதியாயிருப்பினும் ஸத்யத்தைச் சொன்னாய். நீ ஸத்யம் பேசினதால் உன்னை விட்டு விடுகிறேன். எனது புத்ரபௌத்ராதி வம்சம் முடிந்தபின் எல்லா தர்மங்களையும் நீ நாசம் செய்யும்பொழுது அச்சமயமும் நீ எங்களுக்கு கப்பத்தைக்கட்டவேண்டும். அந்த கப்பம் யாதெனில் கிராமங்களில் நிலங்களின் வரப்பு, கடன் ஈடு, பல ஜனங்களின் சொல், படி, தராசு முதலிய அளவுகள் இவைகளை மட்டில், எங்கும் கபடமே நிறைந்திருந்தாலும் நீ கெடுத்துவிடாதே. இதுதான் நீ எனக்கு கட்டவேண்டிய கப்பம் என்று சொன்னார். பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கலியைப்பார்த்து சொன்னதாவது—கலியே! நீ பூமியில் பிரவிருத்தித்திருப்பினும் பாண்டவர்களின் வம்சம் பூமியில் இருக்குமளவும், உனக்கு சாமர்த்தியம் இருக்கவேண்டாம். பாண்டவர்களின் காலத்தின்பின் க்ஷேமகராஜன் இருக்குமளவும், நீ கிரமமாய் விருத்தியடையப் போகிறாய். க்ஷேமக ராஜனுக்கு பிற்பாடு உனக்குச் சந்ததி கட்டாயமாய்ப் பூரணமாய் ஆகப் போகிறது. பாண்டவர்களும் நானும் இருக்குமளவும் நீ இந்த பூமியை கண்ணெடுத்தும்பார்க்கலாகாது. அப்படியிருக்க நீ பூமியை ஸ்பரிசிக்கவும் ஆகாது என்று சொல்லவும் வேண்டுமோ? நானும் பாண்டவர்களும் இந்த பூமியை விட்டு விலகியபின் இந்த பூமியில் உன் காலடியை வை. என்றிவ்வாறு சொல்லப்பட்ட கலி தர்ம புத்திரரால் அவிழ்த்துவிடப்பட்டவனாய், ஸ்ரீ கிருஷ்ணரையும் தர்ம புத்திரரையும் நமஸ்கரித்து சமுத்திரத்தின் அக்கரையிலுள்ள

ஒரு குகையை ஆசிரயித்தான். பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்தவர்களாய் பூமியை ஸம்ரக்ஷித்துக்கொண்டு சந்தோஷம் கொண்டிருந்தனர்.

மீண்டும் கீதையின் உபதேசம்.

ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு பாண்டவர்களை ராஜ்யத்தில் ஸ்தாபனம் செய்து அர்ஜுனனுடன் கூடி இந்திரப்ரஸ்தத்தில் க்ரீடித்துக் கொண்டு அபிமன்யு முதலான புத்ரர்கள் இறந்த துக்கம் நீங்க திவ்யமான கதைகளைச் சொன்னார். அர்ஜுனனுக்கு அவன் மறந்துபோயிருந்த பகவத் கீதையில் சொன்ன ப்ரமேயங்களை மீண்டும் அனுகீதை என்று முப்பத்தி ஆறு அத்யாயங்களால் உபதேசம் செய்தார்.

சித்த கீதா, காச்யப கீதா, பிராம்மண பிராம்மணி கீதா, குரு சிஷ்ய கீதா, தாத்பர்யம்

பாரதி தேவி, முக்யப்ராணர், நாராயணர் இந்த மூவர்களால் எல்லா ஜகத்தும் வியாபிக்கப்பட்டிருக்கிறது. இம்மூவர்களும் ஸர்வோத்தமர்கள். எல்லா ஜகத்தும் இவர்களின் அதீனமானது. இம்மூவர்களும் ஒருவரைவிட மற்றொருவர் குணங்களில் உத்தமர்கள். இவர்களின் அதீனர்கள் கருட சேஷாதிகள். இந்த ரீதிப்படி எல்லாம் ஹரியின் ஆதீனர்கள். ஹரியோ குணங்களால் பூர்ணர். ப்ரபுவானவர் இவர் ஒருவரே. மற்றவர்கள் இல்லை. லக்ஷ்மி தேவி முக்ய ப்ராணருக்கு உத்தமி. ஆனால் விஷ்ணுவுக்கு குறைந்தவள். அந்த ஹரிக்கு ஹுதாசன் என்று பெயர். அவர் ஹோமம் செய்த எல்லா வஸ்துக்களையும் பக்ஷணம் செய்வதால் அந்த பெயர் உண்டு. பாரதி தேவி முக்ய ப்ராணர் இவர்களின் ஹ்ருதய கமலத்தில் இருந்துகொண்டு எல்லா ஜகத்தையும் எப்பொழுதும் போஷித்து வருவதால் அந்த ஸ்ரீஹரி ஈசனாவார். இவ்வாறு அவர் எல்லா நாமங்களாலும் சொல்லப்படுபவர். பிரம்மா ருத்திரன் முதலானவர்கள் ஜீவர்கள் தான் என்று சொல்லப்பட்டிருக்கின்றனர். இவர்கள் விஷ்ணுவுக்கு அநாதிகாலமாய் பக்தர்கள். இவர்கள் முக்திக்கு அருகமானவர்கள். விஷ்ணுவிடம் அநாதிகாலமாய் த்வேஷம் கொண்டிருப்பவர்களான மகா பாபிகள் தமஸ்ஸுக்கு அருகமானவர்கள். பக்தியும் த்வேஷமும் சேர்ந்திருக்கும் ஜீவர்கள் மத்யம ஜீவர்கள்.

இவர்கள் சம்சாரத்திலேயே சுற்றுபவர்கள். இவ்வாறு ஜீவர்கள் மூவகையார்கள். இவர்கள் தம்தம் யோக்யதைக்குமீறி வேறுவிதமாய் ஆவதில்லை. சங்கசக்ராதிகளை தரிப்பதாகிய சரீர அங்க அடையாளத்தாலும், க்ஞானம் பக்தி முதலான மானஸ சின்ஹத்தாலும், ஜீவர்களின் தாரதம்மியத்தை அறியவேண்டும். விஷ்ணு பக்த்யாதிகளின் தாரதம்மியத்தால் ஜீவர்களின் தாரதம்மியத்தை கண்டுகொள்ளவேண்டும். விஷ்ணுவுக்கும் விஷ்ணுபக்தர்களுக்கும் ப்ரியம் செய்வது தர்மம். இவர்களுக்கு அப்ரியம் செய்வது அதர்மம். இதுதான் சாஸ்திரங்களின் அர்த்தத்தின் நிர்ணயம். இறந்துபோன பிள்ளையின் விஷயமாய் அழுவது நிஷ்ப்ரயோஜனம். என்று இது முதலான தத்துவத்தை உபதேசம் செய்து, பிரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் பாண்டவர்களால் பூஜை செய்யப்பட்டவராய், தன்னுடன் தனக்கு வழி காட்டியாய் வந்த பாண்டவர்களை சிரமப்பட்டு பின்னடி நிற்கச்செய்து, ஸுபத்திரையை அழைத்துக்கொண்டு ரதத்திலேறி துவாரகைக்கு புறப்பட்டுப் போனார்.

உதங்கருக்கு அனுக்ரஹம்.

ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர், சமாதியினின்றும் எழுந்த உதங்க முனிவரால் வழியில் ப்ரச்னம்செய்யப்பட்டவராய் தம்பிகள், பிள்ளைகள், ஸேனையிலுள்ளவர்கள் இவர்களுடன் சேர்ந்து துரியோதனன் பாண்டவர்களால் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்டார். அவருடைய சிஷ்யனான துரியோதனன் இறந்தான் என்று கோபத்தால் தனக்குச் சாபம் கொடுக்க எத்தனப்பட்ட அந்த உதங்க முனிவரை, அவருக்கு ஸ்ரீ கிருஷ்ணர் தன் விச்வ ரூபத்தைக்காட்டி, தன் ஸ்வரூபத்தை போதிக்கும் வார்த்தைகளால் சமாதானம் செய்தார்' "இந்த உதங்கர் என் விசேஷ பக்தர். என்னை ஆராதிப்பதில் ஈடுபட்டவர். எனக்குச் சாபம் கொடுப்பதாகிய அவமானத்தைச் செய்து மீண்டுதல் திரும்புதல் இல்லாத தமஸ்ஸை அடையவேண்டாம்." என்ற கருணையால் ஸ்ரீ கிருஷ்ணரால் போதிக்கப்பட்ட உதங்க ரிஷி மனச்சமாதானமடைந்தவராய் பஸ்சாத்தாபம் அடைந்து ஸ்ரீ கிருஷ்ணரையே சரணமடைந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் உதங்க முனிவருக்கு அபயப்ரதானம் செய்து "உமக்கு அமிர்தத்தைக் கொடுக்க இந்திரனை அனுப்புகி-

றேன்" என்று சொல்லி துவாரகைக்குச் சென்றார். பிறகு ப்ரபுவான ஸ்ரீ கிருஷ்ணர் உதங்க முனிக்கு அமிர்தத்தைக்கொடுக்க மகேந்திரனை ஆக்ஞையிட்டார். இந்திரன் ஸ்ரீ கிருஷ்ணரை க்ஷமிக்கக் கேட்டுக்கொண்டு, உதங்கரை தான் வஞ்சிக்கப்போவதாய்ச் சொன்னார். இந்திரனிடமுள்ள சிநேகத்தால் ஸ்ரீ கிருஷ்ணர் நீ அப்படியே செய் என்று சொன்னார். பிறகு இந்திரன் மிகவும் வெறுக்கப்படுவதான சண்டாளரூபத்தை எடுத்துக்கொண்டு உதங்க ரிஷியிடம் வந்தான், இந்திரிய ஜயமுள்ள மகேந்திரன் அமிர்த கலசத்தை மூத்ர த்வாரத்தின் கீழே வைத்துக்கொண்டு அதில் மூத்ரோத்ஸர்ஜனம் செய்பவன்போல் நடித்து உதங்கரைப் பார்த்துச் சொன்னான். மகரிஷியே! ஸ்ரீ கிருஷ்ணர் உமக்காக அமிர்தத்தை அனுப்பியிருக்கிறார். இதை பானம்செய்யும் என்றான். இந்த வார்த்தையைக்கேட்டு உதங்க முனிவர், இது சண்டாளனுடைய மூத்ரம் என்று எண்ணி, இந்திரனை அதட்டி தூரச்செல் என்றார். இந்திரன் இவ்வாறு உதங்க முனியை வஞ்சித்து ஸந்தோஷமடைந்து தன் லோகம் சென்றான். தேவர்களுக்கு அமிர்தம் எப்பொழுதுமே முக்யமான அன்னம். ஆதலால் அமிர்தத்தை இதரர்கள் பானம் செய்வது தேவர்களுக்கு முக்யமாய் அப்ரியகரமானது. ஆகவே இந்திரன் வஞ்சித்தான். உதங்க முனிவர் தன் அக்ஞானத்தால் தான் கிருஷ்ணர் அருளிய அமிர்தபான ரூபமான ப்ரஸாதத்தினின்றும் தவறி விடவும் ஸ்ரீ கிருஷ்ணர் இது உசிதமே என்று நிச்சயித்தார்.

ஸ்ரீ கிருஷ்ணர் துவாரகைக்கு வந்து யாதவர்களால் பூஜிக்கப்பட்டவராய், யாதவர்களின் சபையில் வஸுதேவருக்கு யுத்த விருத்தாந்தத்தைச் சொன்னார். யாதவர்களின் அதிபதியான ஸ்ரீ கிருஷ்ணர் அபிமன்யுவின் ஸம்ஹார கதையைச் சொல்லாமல் மறைக்கவும், ஸுபத்ரை நமஸ்காரம் செய்து, என் பிள்ளை சம்ஹாரம் செய்யப்பட்ட கதையைச் சொல்லும் என்று கேட்டுக்கொண்டாள். பிறகு ஸ்ரீ கிருஷ்ணர் அபிமன்யு வதத்தைச் சொன்னார். பிறகு வஸுதேவாதிகள் மகாதுக்கமுள்ளவர்களாய் ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்து அபிமன்யுவின் உத்தேசமாய் ஏராளமாக ச்ரத்தையுடன் தானம் முதலியவற்றைச் செய்தனர்.

(தொடரும்)

லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே.

(முன் 51ம் பக்கம் தொடர்ச்சி.)

ஆதலால் இந்த பாயஸதான க்ரமத்தை அனுஸரித்து, ஜனனப்ரகரணத்தை பரிசீலனைசெய்து, முதலில் பாதிபாகம் பாயஸத்தை ப்ராசனம்செய்த கௌசல்யைக்கு முதலில் கர்பம் உண்டாய் கர்பம் வளர்ந்து முதலில் ராமனும், அடுத்தபடி கால்பாகம்பாயஸத்தை ப்ராசனம் செய்த ஸுமித்ரைக்கு, அடுத்தபடி கர்பம்உண்டாய் கர்பம் வளர்ந்து அடுத்தபடி லக்ஷ்மணனும், அடுத்தபடி அரைக்கால்பாகம் பாயஸத்தை ப்ராசனம் செய்த கைகேயிக்கு, அடுத்தபடி கர்பம் உண்டாய் கர்பம் வளர்ந்து அடுத்தபடி பரதனும், அடுத்தபடி மீண்டும் அரைக்கால்பாகம் பாயஸத்தை ப்ராசனம்செய்த சுமித்ரைக்கு, அடுத்தபடி கர்பம் உண்டாய் கர்பம் வளர்ந்து அடுத்தபடி சத்ருக்னனும், பிறந்ததாய் சொல்வது மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. அப்படிச்சொல்லாமல் முதலில் கைகேயிக்கு பரதனும், அடுத்தாற்போல்தான் சுமித்ரைக்கு லக்ஷ்மண சத்ருக்னர்களும் பிறந்ததாய் இதற்கு விரோதமாய்ச்சொல்வது முன் ப்ரகரணத்திற்கு ஒவ்வாது என்றும், பின்னடி சொல்லப்பட்டிருக்கும் பல சம்பவங்களுக்கும் ப்ரகரணங்களுக்கும் பொருத்தமாய் இல்லை என்றும், இந்த ப்ரகரணத்தில் பரதனின் பிறப்பைமுன்னடியும் லக்ஷ்மண சத்ருக்னர்களின் பிறப்பை பின்னடியும் சொல்லப்பட்டிருப்பது உக்தி சௌகரியத்துக்காகவென்றும், ஸ்ரீபகவத்பாதாளால் நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஜனனப்ரகரணம் பரதன் லக்ஷ்மணனுக்கு ஜ்யேஷ்டன் என்பதை நிரூபிக்கப்போதுமானதாய் இல்லை; இப்படியேத்தான் நக்ஷத்திர க்ரமமும் பரதன் ஜ்யேஷ்டன் என்று நிரூபிக்கத்தகுந்தவைகள் ஆகமாட்டாதென்பது நிரூபிக்கப்படுகிறது.

ஒரே மாஸத்தில் அடுத்தடுத்துவந்த புஷ்யம் ஆச்லேஷா இந்த நக்ஷத்திரங்களில் பரதனும் லக்ஷ்மண சத்ருக்னர்களும் பிறந்ததாய் ஸ்ரீ வால்மீகி ஸ்பஷ்டமாய் அறிவிக்கவில்லை. ஸ்ரீராமர்தான் சைத்ரமாஸத்தில் பிறந்ததாய் சொல்லியிருக்கிறாரேயன்றி இதரர்கள் பிறந்தமாதத்தை ஸ்பஷ்டமாயசொன்னதாய் இதரவ்யாக்யாதாக்களாலும் சொல்லப்படுவதில்லை. அல்லது ஸ்ரீராமர் பிறந்தமாதத்திலேயே இவர்கள்பிறந்தனரென்றும் ஸ்பஷ்டமாய் இந்த வால்மீகி ராமாயணத்திலேயும் அல்லது வேறு எந்த க்ரந்தங்களிலேயும் சொல்லப்படவில்லை. ஸ்ரீராமர் பிறந்த மாஸத்தையே பரத லக்ஷ்மண சத்ருக்னர்களின் ஜனன விஷயத்திலும் தொடர்பாகவைத்துக்கொள்ளலாமென்றாலோ, ஆரம்பத்தில் துவக்கப்பட்டிருக்கும் ஸ்ரீராமர் பிறந்த காலத்தின் விவரம் பூரா சொல்லப்படவில்லை. ஸ்ரீ ராமாதிகளின் ஜனன ப்ரகரணத்தை ஸ்ரீ வால்மீகி அறிவித்திருப்பதாவது:—

“ததஸ்சத்வாதசே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ। நக்ஷத்ரே அதிதி தைவத்யே ஸ்வோச்சஸம் ஸ்தேஷு பஞ்சஸு। க்ரஹேஷு கர்கடேலக்னே வாக்பதா விந்துனாஸஹ। ப்ரோத்யமானம் ஜகந்நாதம் ஸர்வலோக நமஸ்க்ருதம்। கௌசல்யா ஜனயத் ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம்॥ ... ... புஷ்யே ஜாதஸ்து பரத: மீனலக்னே ப்ரஸன்னதீ:। ஸார்ப்பே ஜாதௌ ச ஸௌமித்ரீ குலீரேப்யுதிதே ரவௌ॥”

ஸ்ரீராமர் பிறந்தது சைத்ரமாஸம் நவமிதிதி. புனர்வஸு நக்ஷத்திரம், கடக லக்னம், அச்சமயம் சந்திரனும் குருவும் சேர்ந்திருந்தனர். அங்காரகன் புதன் குரு சுக்ரன் சனி இவர்கள் முறையே மகரம் கன்யா கடகம் மீனம் துலா இந்த ராசிகளில் இருந்து உச்சமாய் இருந்தனர். பரதன் பிறந்தது, புஷ்ய நக்ஷத்திரம். மீனலக்னம். லக்ஷ்மண சத்ருக்னர்கள் பிறந்தது ஆச்லேஷா நக்ஷத்திரம், என்று இம்மட்டில்தான் ராமாதிகளின் ஜனனகாலத்தின் விவரத்தை வால்மீகிஅறிவித்திருக்கிறார். ஸ்ரீராமர் பிறந்த மாஸம் திதி நக்ஷத்திரம் லக்னம் மட்டில் சொல்லப் பட்டிருக்கிறதேயன்றி, இன்ன பக்ஷம் என்பது சொல்லப்படவில்லை. நவமி திதி என்றால் அது சுக்லபக்ஷத்தின் நவமியா க்ருஷ்ண பக்ஷத்தின் நவமியா என்று சம்சயம் வரகூடும். அது சுக்லபக்ஷத்து திதி என்றே நிச்சயம் செய்யவேண்டிய நியமும் இல்லை. திதி என்பதற்கு தினம் என்று அர்த்தம் தகாது. திதிவேறு தினம்வேறு, ஆகவே ராமரின் ஜனன காலத்தின் பூரா விபரமும் வால்மீகியால் சொல்லப்படவில்லை என்று நன்கு விளங்குகிறது. அப்படியே பரதனுடைய ஜனனகால விபரமும் பூரா சொல்லப்படவில்லை, நக்ஷத்திரமும் லக்னமும் மட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. லக்ஷ்மண சத்ருக்னர்களின் விஷயத்திலோ இன்னமும் சொல்ப விபரம்தான் சொல்லப்பட்டிருக்கிறது. நக்ஷத்திரம் மட்டில் சொல்லப்பட்டிருப்பதாய் இதர வ்யாக்யாதாக்களனைவரும் அறிவித்திருக்கின்றனர். ஆதலால் ஆரம்பத்தில் அதாவது உபக்ரமத்தில் கூறப்பட்டுள்ள பாயஸதானம் முதலான க்ரமத்துக்கும், பின்னடி உபஸம்ஹாரத்தில் பரதன் லக்ஷ்மணனுக்கு செய்த நமஸ்காரம், சத்ருக்னன் வரிசைக்ரமமாய் ராமலக்ஷ்மண பரதனுக்கு செய்த நமஸ்காரம் முதலான கதா சந்தர்ப்பங்களுக்கும், ஒத்து இருக்கும்படி இவர்கள் பிறந்த நக்ஷத்திர க்ரமத்தை வரிசைப்படுத்தவேண்டியது முற்றிலும்

அவசியம். ஸ்ரீராமர் பிறந்தது சைத்ரமாஸம் புனர்வஸு என்பதும். அவர் ஸர்வஜேஷ்டர் என்பதும் நிர்விவாதமானது, இனி லக்ஷ்மணன் பரதனுக்கு ஜேஷ்டனாகவும் சத்ருக்னன் பரதனுக்கு கனிஷ்டனாகவும் மேலே நிரூபித்திருக்கிறபடி இருக்கவேண்டுமானால், லக்ஷ்மணன் பிறந்த நக்ஷத்திரமாகிய ஆச்லேஷா, பரதனின் நக்ஷத்திரமாகிய புஷ்யத்திற்கு முன்னாடி வரும்படியும், சத்ருக்னனின் நக்ஷத்திரமாகிய ஆச்லேஷா அதற்கடுத்து பின்னாடியும் வரும்படியும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும், புஷ்யத்திற்கு அடுத்து பின்னாடிவரும் ஆச்லேஷா, புஷ்யத்திற்கு முன்னாடி வரும்படி ஏற்படுத்திக்கொண்டால் ஆச்லேஷா கழிந்த சுமார் 26வது நாளில் வரும் புஷ்யத்தில் பரதன் பிறந்ததாயும் பரதன் பிறந்ததற்கு சுமார் 26 நாளுக்கு முன்னே உள்ளே ஆச்லேஷாவில் லக்ஷ்மணன் பிறந்ததாயும், பரதன் பிறந்த புஷ்யத்திற்கு அடுத்து பின்னாடி வரும் ஆச்லேஷாவில் சத்ருக்னன் பிறந்ததாயும், நிச்சயம் செய்யவேண்டிய தவசியம். இவ்வாறு நிர்ணயம் செய்ய வால்மீகியின் எந்த வாக்யமும் பாதகமாய் இல்லை. பாதகமாய் இல்லாததோடு வால்மீகியின் ஓர் வாக்யமும் சாதகமாய் இருக்கிறது. அந்த வாக்யம் பரத லக்ஷ்மண சத்ருக்னர்களின் ஜனன காலத்தை அறிவிக்கும் அந்த சுலோகத்திலேயே காணப்படுகிறது. "புஷ்யேஜாதஸ்து பரத: மீனலக்னே ப்ரஸன்னதீ:] ஸார்ப்பே ஜாதௌ சஸௌமித்ரீ குலீரேப்யுதிதேரவௌ" என்றார் வால்மீகி. புஷ்யத்தில் மீனலக்னத்தில் பரதன் பிறந்தான். லக்ஷ்மண சத்ருக்னர்கள் ஆச்லேஷாவில் பிறந்தனர். எப்போது என்றால் குலீரேப்யுதிதே ரவௌ என்றார். குலீரே கடகத்தில் ரவௌ சூரியன் அப்யுதிதே உதயமாகும்பொழுது, அதாவது கடகமாஸம் (ஆஷாடமாஸம்) என்றார். இதனால் ராமர் பிறந்தது சைத்ரமாஸம் என்றும் லக்ஷ்மண பரத சத்ருக்னர்கள் பிறந்தது கடகமாஸம் ஆஷாட மாஸம் என்றும் நன்கு புலப்படுகிறது. குலீரே அப்யுதிதே ரவௌ என்று இவர்கள் பிறந்தது கடகமாஸம் என்று வால்மீகி ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்க, இதை அறியாத கிஞ்சித்க்ஞர்களான இதர மதத்திய வ்யாக்யாதாக்கள் அக்ஞானத்தினால் ராமருக்குப் பின்னாடியுள்ள புஷ்யத்தில் பரதனும், அதற்கடுத்த ஆச்லேஷாவில் லக்ஷ்லண சத்ருக்னர்களும், பிறந்ததாய் வியாக்யானம் செய்து, முடிவில் அந்த சுலோகத்திலேயுள்ள குலீரே அப்யுதிதே ரவௌ என்பதற்கு வெகு ஸ்பஷ்டமான அர்த்தமாகிய கடக மாஸத்தில் என்ற அர்த்தத்தை வெளியாக்க முடியாமல், திகைத்து அர்த்தாந்தரம் செய்ய முயற்சித்து, சிரமப்பட்டு, அப்யுதிதே என்பதற்கு ப்ரவிருத்தே என்று அர்த்தம் கொடுத்து மத்யான்ஹத்தில்

பிறந்தது என்று துண்டாய்ச்சொல்லிவிட்டு மெதுவாய் இந்த வாக்ய வ்யாக்யான கண்டத்தினின்றும் வெளியேறிவிட்டனர். ஸர்வக்ஞரான ஸ்ரீ பகவத்பாதாள் உலகின் போக்கை நன்கு அறிந்தவராதலால் இந்த ஸூக்ஷ்மத்தைக் கண்டுகொண்டு நேரான மார்க்கத்தையே கடைப்பிடித்து முக்யார்த்தத்தையே கொடுத்து லக்ஷ்மணன் பரதனுக்கு முன்னாடியே பிறந்தான் என்று அழுத்தமாய்ச் சொல்லி நிர்ணயம் செய்தார். அவருடைய சாக்ஷாத் சிஷ்யரான ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியாரும் அந்த வழியையே பின்பற்றி தமது ஸங்கிரஹ ராமாயணத்திலும் குலீரே அப்யுதிதே ரவௌ என்ற வால்மீகியின் வாக்யத்தையே யாதொரு மாறுதல் இல்லாமல் அப்படியே எல்லா வாசகர்களின் கவனத்திற்கு கொண்டுவரும் உத்தேசத்துடன் திருப்பிச்சொல்லி தன்னுடைய சுலோகங்களிலேயே சேர்த்து லக்ஷ்மணன் தான் பரதனுக்கு முன்னாடியிருந்தவனென்றும் ஸ்பஷ்டமாய் நிரூபித்துக் காட்டினார். ஸங்கிரஹராமாயணத்திற்கு வ்யாக்யானம் செய்த நம்மவர்களனைவரும் ஏகோபித்து குலீரேஅப்யுதிதே ரவௌ என்பதற்கு சூரியன் கடகத்தில் உதயமாகும் மாஸம் கடக மாஸம் ஆஷாட மாஸம் என்றே வ்யாக்யானம் செய்திருக்கிறார்கள். ஆகவே சைத்ரத்தில் ஸ்ரீராமர் பிறந்தார் என்றும் ஸ்ரீ வால்மீகியின் வாக்யத்தால் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது என்றும் அதனால் லக்ஷ்மணனுக்கு பரதனுக்கு தமையனே என்றும் ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

இவ்வாறு அர்த்தம் செய்வதால் இரட்டைப் பிள்ளைகளான லக்ஷ்மண சத்ருக்னர்களில் லக்ஷ்மணன் மட்டில் ஆச்லேஷாவில் பிறந்து, பரதன் புஷ்யத்தில் பிறந்ததாய் ஏற்படுவதின் நிமித்தம் அதற்கடுத்த ஆச்லேஷாவில் தான் சத்ருக்னன் பிறந்ததாய்ச் சொல்வதால், சுமார் 27 நாள் வ்யவதானத்தில் லக்ஷ்மண சத்ருக்னர்கள் பிறந்ததாய்ச் சொல்வது லோகானுபவத்திற்கு ஒத்ததாய் இல்லை என்றும் வேறு யாரும் இவ்வாறு கூறத்துணியமாட்டார் என்றும் எதிர்வாதம் செய்யக்கூடும்; ஆகவே இதற்கும் சரியான சமாதானம்கூற நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

லக்ஷ்மண சத்ருக்னர்கள் இரட்டைபிள்ளைகள் என்பதை வால்மீகி ஸ்ரீமத் ராமாயணத்தில் கூறவில்லை. "ராக்ஞ; புத்ரா: மகாத்மானச் சத்வாரோ ஜக்ஞிரே பிரத்க்" என்று இந்நால்வர்கள் தனித்தனியே பிறந்தார்கள் என்றுதான் கூறியுள்ளார். இதர கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பதை ஆதாரமாய்க்கொண்டு இங்கு பரிசீலனை செய்தாலும் எந்த பாதகமும் ஏற்படுவதில்லை. இவ்வாறு வேறு யாவரும் கூறத்துணிய

மாட்டார்கள் என்று எதிர்வாதம் செய்வதும் பெருந்தவறு. இதர மதத்தைச்சேர்ந்த மிகுந்த க்யாதியுள்ள தர்க்க சாஸ்திர கிரந்தங்களின் ஆசிரியரான கதாதரபட்டர் தமது வ்யுத்பத்திவாதம் என்னும் பிரசித்த நூலில் த்ருதியா விபக்தியின் அர்த்த விசாரம் செய்யும்பொழுது "ப்ராஸோஷ்ட சத்ருக்ன முதார சேஷ்டம் ஏகா சுமித்ரா ஸஹ லக்ஷ்மணேன" என்னும் சுலோகத்தில் ஸமமான காலத்தில் ஏற்படாத லக்ஷ்மண சத்ருக்னர்களின் பிறப்பில், ஸஹ சப்தம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது சரிதானென்பதை விமரிசனம் செய்துகொண்டுவரு ஸ்தூல காலம் சேர்ந்த ஸமான காலமிருப்பதால் ஸஹ சப்தம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது சரிதான் என்று நிர்ணயம் செய்துள்ளார். இங்கு ஸ்தூலகாலமென்பது ஒரு மாஸமாகும் என்று கிருஷ்ண பட்டர் முதலிய வ்யாக்யாதாக்கள் தர்க்க சாஸ்திரத்தில் கூறியிருக்கின்றனர். இதனால் லக்ஷ்மண சத்ருக்னர்கள் சுமார் ஒரு மாதம் வியவதானத்தில் பிறந்தவர்கள் என்பதை இதர சாஸ்திரத்தில் இதரர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாய் நன்கு தெரியவருகிறது. ஆகவே வேறு யாரும் இவ்வாறு கூறத் துணிய மாட்டார்கள் என்பது பெருந்தவறாகும். இதரர்களும் இதை ஒப்புக்கொண்டிருக்கின்றரென்றே நாம் சொல்லத்துணிவோம். இனி லோகானுபவத்திற்கு இது சரியா என்பதை யோசிப்போம். லோகானுபவம் எவ்வாறிருக்கிறதென்றால் இரட்டைப் பிள்ளைகளில் முதலில் பிறந்த குழந்தை இளைய குழந்தை என்றும், இரண்டாவதாய்ப் பிறந்தது மூத்த குழந்தை என்றும் பிரசித்தி இருந்துவருகிறது. அந்த லோகானுபவத்தைக்கொண்டு பார்த்தால் இரட்டைப் பிள்ளைகளான லக்ஷ்மண சத்ருக்னர்களில் மூத்தவனான லக்ஷ்மணன் சத்ருக்னனுக்கு பின்னாடி இரண்டாவதாய் பிறந்திருக்கவேண்டும் என்றும் சத்ருக்னன்தான் லக்ஷ்மணனுக்கு முன்னாடி முதலில் பிறந்திருக்கவேண்டும் என்றும் ஏற்படுகிறது. ஆனால் எதிர்வாதம் செய்பவர்களும் கூட சத்ருக்னன் லக்ஷ்மணனுக்கு பின்னாடி பிறந்தவன் என்பதைத்தான் நிர்விவாதமாய் ஒப்புக்கொள்கின்றனர். ஆதலால் லோகானுபவம் இந்த லக்ஷ்மண சத்ருக்னர்களின் பிறப்பு விஷயத்தில் ஒத்திருக்கவில்லையென்று நன்கு புலப்படுகிறது. அப்படியிருக்க 27 நாள் வியவதானத்தில் லக்ஷ்மண சத்ருக்னர்கள் பிறந்தது மட்டில் லோகானுபவத்திற்கு ஒத்ததாய் இல்லை என்று சொல்வது ஒரு தலைப்பக்ஷமாகும். இரு கக்ஷியிலும் லோகானுபவம் பிரமாணமாய் இல்லை என்று சொல்வது மிகையாகாது.

ஆயினும் 27 நாள் வ்யவ்தானத்தில் இரட்டைப் பிள்ளைகள் பிறந்து வளர்ந்து பெருத்த பலசாலிகளாய் இருந்தனர் என்று சொல்வதை

எதிர் கக்ஷியினர் தாக்குவார்களோ என்று சிறிது பயப்பட்டோம். ஸர்வக்ஞாசாரியாளான எமது ஸ்ரீ பகவத்பாதாள் சொல்வது உலக ரீதிக்கு சிறிதும் விரோதமாய் ஒருக்காலும் இருக்காதென்றே திடம்கொண்டோம். இந்த விஷயத்தில் அவருடைய நிர்ணயம் லோகானுபவத்திற்கும் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரத்துக்கும் விருத்தமாய் இல்லை என்பதை நிரூபிக்க ஆவல் கொண்டோம். இதற்காக எமது நண்பர்களாயும் Health ஆரோக்கிய தீபிகை முதலான வைத்திய பத்திரிகைகளுக்கும் அநேக வைத்திய நூல்களுக்கும் ஆசிரியர்களாயும் வைத்திய சாஸ்திரத்தில் மிகுந்த ஆராய்ச்சி செய்தவர்களென்றும் மகா நிபுணர்களென்றும் பிரசித்தமடைந்தவர்களாயுமுள்ள சென்னை அரசாங்கத்தில் மிகவும் கௌரவம் வாய்ந்த உயர்தர ஸ்தானமாகிய சென்னை மேல் சபையின் (Upper House of Legislature) பிரசிடெண்டாயுமுள்ள ஸ்ரீமான் ஆனரபிள் டாக்டர் யூ. ராமராவ் எம். எல். ஸி. அவர்களுக்கும் ஸ்ரீமான் டாக்டர் யூ கிருஷ்ணராவ் எம். பி. பி. எஸ். அவர்களுக்கும் கடிதம் எழுதிக்கேட்டோம். அவர்கள் இவ்வாறு இரட்டைப்பிள்ளைகள் பிறப்பது மிகவும் சம்பாவிதம் என்றும் அப்படியே இக்காலத்திலும் கூட பலசம்பவங்கள் உண்டாயிருப்பது பிரசித்தமாயிருக்கிறதென்றும் அறிவித்திருக்கின்றனர். அவர்கள் அறிவித்திருப்பதாவது:—

Letter No. 3670/37 dated 4th May 1937.

With regard to your enquiry, as to whether it is possible in the case of twin births, for the second child to be born about 27 days after the first, I have to say that it is quite possible, scientifically, for such a birth. There are cases on record when the 2nd child was born even two or three months after. In all these cases there are different placentas in the womb.

இரட்டைப் பிள்ளைகளின் ஜனன விஷயத்தில் முதல் குழந்தை பிறந்து 27 நாளுக்குப் பின் இரண்டாவது குழந்தை பிறக்குமா என்று நீங்கள் கேட்டதற்கு அவ்வாறு பிறப்பதும் விக்ஞான சாஸ்திரப்படி முற்றிலும் சம்பாவிதந்தான் என்று நான் சொல்வேன். முதல் குழந்தை பிறந்து இரண்டு மாஸம் அல்லது மூன்று மாஸம் கழிந்துங்கூட இரண்டாவது பிள்ளை பிறந்திருக்கும் பல கேசுகள் பதிவில் இருக்கின்றன. இம்மாதிரியான எல்லா சம்பவங்களிலும் தாயின் வயிற்றில் தனித்தனியாய் தொப்புள் கொடிகள் இருக்கின்றன.

இவ்வாறு தற்கால வைத்திய சாஸ்திர நிபுணர்களின் சம்மதப்படிக்கும் கதாதர பட்டர் போன்ற மகாதார்க்கிகர்களின் சம்மதப்படிக்கும் ஸர்வக்ஞரான ஸ்ரீ பகவத் பாதாள் ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் போன்ற மகா வேதாந்திகளின் சம்மதப்படிக்கும் லக்ஷ்மணனும் சத்ருக்னனும் 27 நாள் வியவதானத்தில் பிறந்ததாய்ச் சொல்வது அசம்பாவிதமல்லவென்றும் ஏற்பட்டு பரதனுக்கு முன்னாடி லக்ஷ்மணன் பிறந்தான் என்று நிரூபிக்கப்பட்டு, லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே என்று ஸ்பஷ்டமாய் சித்தமாகிறது.

(தொடரும்)

பிரம்ம ஸூத்திரம்.

கும்பகோணம் M. ராமராவ் எழுதுவதாவது—

(முன் 60ம் பக்கத் தொடர்ச்சி)

12வது அதிகரணம்—ஐத்ரேயப் பிராணாதிகரணம்.

இதுதான் முதல் அத்யாயத்தின் முதல் பாதத்தின் கடைசி அதிகரணம். இதில் 28 முதல் 31 வரையிலுள்ள சூத்திரங்கள் அடங்கியுள்ளன. முன் 9வது அதிகரணத்தில் ப்ராணன் என்றால் விஷ்ணு என நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதே ப்ராணன் ஐதரேய உபநிஷத்தில் கண், காது முதலிய இந்திரியங்களுடன் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வாக்யமாவது;—தா வா ஏதா: சிர்ஷன் ச்ரிய: ச்ரிதா சக்ஷுஸ் ச்ரோத்ரம் மனோவாக் ப்ராண: பிரஸித்தமான இந்த கண், காது, மனஸ், வாக் ப்ராணன் என்ற எல்லாம் சிரஸ்ஸை ஆசிரயித்திருக்கின்றன என்று. ஆகவே இந்த பிராணன் யார் என்று நிச்சயிக்கவேண்டியதாயிற்று. இந்த அதிகரணத்தில் அந்த ப்ராணன் விஷ்ணுவென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் இதற்கு பிராணாதிகரணம் என்று பெயர். -இந்த அதிகரணத்துக்கு ஐதரேய உபநிஷத்திலுள்ள ப்ராணன் விஷயம். விஷ்ணுவா அல்லது வாயு முதலியவர்களா என்பது சந்தேகம். அந்த ப்ராணன் விஷ்ணுவைத்தவிர வேறானவர் என்பது பூர்வ பக்ஷம். விஷ்ணுதான் என்பது ஸித்தாந்தம்.

28. ஓம் ப்ராணஸ்ததானுகமாத் ஓம்

(ப்ராண: ததா, அனுகமாத்) ப்ராண: என்பவன் ததா அவ்வாறே (அதாவது 9வது அதிகரணத்து பிராணனைப்போலவே) தத்து விஷ்ணுதான். ஏனெனில் அனுகமாத் அந்த ஐதரேய சுருதியில் விஷ்ணுவைக் குறிக்கும் பிரம்மம் என்ற சப்தமும், ஸமஸ்த தேவர்களாலும் உபாஸிக்கப்படும் தன்மையும், அடிக்கடி வற்புறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. இதற்கேற்ப அங்கு "ஏதத் ப்ரம்ஹ ப்ரம்மணோ லோக: பிரம்மேமம் புருஷம், உதரம் ப்ரம்மேத் யாசக்ஷதே, அ இதி ப்ரம்ம" என்ற பல ப்ரம்ம சப்தங்களிருந்து வருவது கவனிக்கத்தக்கது.

29. ஓம் நவக்துராத்மோபதேசாத் இதிசேத் அத்யாத்ம ஸம்பந்த பூமா ஹ்யஸ்மின் ஓம்

இந்த சூத்திரத்தின் அர்த்தத்தை நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமானால் ஐத்ரேய உபநிஷத்தில் கூறப்பட்ட கதைச் சுருக்கத்தை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது இந்திரன் முன்பு ஒரு சமயம் விருத்ராசுரனைக்கொன்று மகேந்திரன் என்ற பட்டத்தைப் பெறுவதற்கு மகா விரதம் என்ற ஒரு யக்ஞத்தைச் செய்தான். அதில் விசுவாமித்திரர் ஹௌத்ரம் என்ற ரித்விக் ஸ்தானத்தைவகித்து, பிருஹதீ என்ற 36 எழுத்துக்களைக்கொண்ட சந்தஸ்ஸில் அமைந்துள்ள ஆயிரம் ரிக்குகளைக் கானம் செய்தார். அதனால் ப்ரீதியை அடைந்த பகவான் நாராயணன் வாயு பகவானோடுகூட இந்திரனிடம் பிரவேசித்தார். பகவானுடைய ஆவேசம் பெற்ற இந்திரன் அவருடைய ப்ருஹதீ ஸஹஸ்ரத்தால் சந்தோஷமடைந்ததாயும் வேண்டிய வரனைத் தருவதாயும் தெரிவித்தான். விசுவாமித்திரர் எல்லாம் அறிந்தவரானதால் வேறு வரன்களைக் கேட்காமல் த்வாமேவ ஜானியாம் உன்னையே அதாவது உன்னிடம் பிரவேசித்திருக்கும் பகவானின் ஸ்வரூபத்தையே அறிய விரும்புகிறேன் என்று சொன்னார். அதற்கு இந்திரன் ப்ராணோ வா அஹமஸ்மி ரிஷே ஏ ரிஷியே! நான் பிராணனாகிருக்கிறேன். அதாவது என்னிடம் பிரவேசித்திருக்கும் பகவான் ப்ர சிறந்த ண: ஆனந்தத்தை உடையவராயிருத்தலால் ப்ராணன் என்று

அழைக்கப்படுகிறார் என்று பதில் கூறினான் என்றுதான் கதைச் சுருக்கம். பூர்வபக்ஷிகளோ இதை முன்பின் கவனியாமல் 'த்வா மேவ ஜானியாம்'' என்ற வாக்யத்திற்கு உன்னையே நான் அறிவே னென்றும் ப்ராணோ வாஹமஸ்மி ரிஷே என்ற வாக்யத்திற்கு நானே (அதாவது இந்திரனே) ப்ராணனாக இருக்கிறேன் (நானும் பிராணனும் ஒன்று) என்றும் அர்த்தம் செய்துகொண்டு ஆக்ஷேபம் செய்வதால் இந்த சூத்திரத்தில் அதற்கு சமாதானம் கூறப்படுகிறது. (ந, வக்து:, ஆத்மோபதேசாத், இதிசேத் அத்யாத்மஸம்பந்த பூமாஹி அஸ்மின்) வக்து: பிருஹதீ சஹஸ்ரத்தைக் கானம் செய்த விசுவாமித்திரரிடம் ஆத்மோபதேசாத் இந்திரன் தன்னையே பிராணன் என்று சொல்லிக்கொண்டிருப்பதால் ந பிராணன் விஷ்ணுவல்ல. இந்திரன் தான் இதிசேத் என்று சொன்னால் (ந இல்லை) ஹி ஏனென்றால் அஸ்மின் இந்த ஸந்தர்ப்பத்தில் அத்யாத்ம ஸம்பந்த பூமா இந்திரன் தன்னிடமுள்ள பகவான்தான் பிராணன் என்று சொல்லி, அதே பகவான் தன்னிடமும் சரியே விசுவாமித்திரரிடமும் சரியே எல்லாவிடங்களிலும் இருப்பவர் என்று கூறுகிறான். (அல்லது அஸ்மின் இந்த இந்திரனிடம் அத்யாத்ம ஸம்பந்த பூமா பரமாத்மாவின் விசேஷ ஸந்நித்யத்தின் பெருக்கானது கூறப்படுகிறது, ஆகவே முன் சூத்திரத்தில் கூறப்பட்ட யுக்தியினால் பிராணன் விஷ்ணுதான் என்று அறியவேண்டும். மேலும் தாத்பர்ய நிர்ணயத்தில் இந்திரனைத் தவிர்த்த லக்ஷ்மி, பிரம்மா, ருத்திரன், சேஷன், கருடன் முதலியோரும் பகவானுடைய விசேஷ ஆவேசத்தைப் பெற்றவர்களென்று கூறியிருக்க, இங்கு இந்திரனிடம் மாத்திரம் விசேஷ ஸான்னித்யம் இருந்ததாக எப்படிக் கூற முடியும் என்றால் மகாவிரத யக்ஞத்தில் இந்திரன் பெற்ற விசேஷ ஆவேசம் தாத்காலிகமானது, அதாவது அச்சமயத்தில் மாத்திரம் ஏற்பட்டது என்று அறியத்தகுந்தது.

30. ஓம் சாஸ்திர த்ருஷ்ட்யா தூபதேசோ வாமதேவவத் ஓம்

இந்திரன் தன்னிடமும் மற்ற எல்லோரிடத்திலும் விஷ்ணு தான் இருக்கிறார் என்று சொல்லவேண்டுமாயின் மயி ப்ராண: என்னிடம் பிராணன் இருக்கிறான் என்றும் ஏழாம் வேற்றுமையிலல்லவோ உபயோகித்திருக்கவேண்டும். ஆனால் அவன் அஹம் பிராண: நான் பிராணன் என்ற முதல் வேற்றுமையை உபயோகித்திருக்கிறானே என்ற கேள்வி பிறக்கக்கூடும். இதற்கு சமாதானம் இந்த சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. (சாஸ்த்ரத்ருஷ்ட்யா, து, உபதேச:, வாமதேவவத்) உபதேச:=இந்திரன் 'நான் பிராணன்' என்று சொன்னது, சாஸ்திரதிருஷ்ட்யா = (சாஸ்தி ஸர்வம்) எல்லாவற்றையும் ஆண்டுவருவதால் சாஸ்திரம் எனப்படும் அந்தர்யாமியான பகவானை உத்தேசித்துச்சொன்னது, து= தான். வாமதேவவத்=வாமதேவர் போன்ற மகரிஷிகள் தம்தம் அந்தர்யாமியான பகவானைக்குறிக்க, அஹம் நான் என்று உபயோகித்திருக்கிறார்களே தவிர, மயி என்னிடம் என்று உபயோகிக்கவில்லை.

குறிப்பு:—இச்சூத்திரத்திலுள்ள சாஸ்திரம் என்ற பதம் வேதாந்த சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலியவைகளைப்போல் அறிவு நூல்களைக் குறிப்பதில்லை. ஸ்ரீமத் பாகவதம் பிரதம ஸ்கந்தத்தில் ஸ்ரீவியாஸ நாரத ஸம்வாதத்தில் கண்டபடி எல்லோருக்கும் நியந்தாவான அந்தர்யாமியான பகவானையே குறிக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

31. ஓம் ஜீவ முக்ய ப்ராணலிங்கான்நேதி சேன்ன உபாஸாத்ரைவித்யாத் ஆசிரிதத்வாதிஹ தத் யோகாத் ஓம்

இன்னும் சில ஆக்ஷேபங்களுக்குச் சமாதானம் இந்த சூத்திரத்தில் சொல்லப்படுகிறது, (ஜீவ முக்ய ப்ராணலிங்காத், ந, இதிசேத், ந, உபாஸாத்ரைவித்யாத், ஆசிரிதத்வாத், இஹ, தத் யோகாத்) ஜீவ முக்யப்ராணலிங்காத்=மேற்கண்ட உபநிஷத்தில் சதாயு: புருஷ: என்று பிரசித்தமான ஜீவனுடைய வாழ்நாளாகிய நூறுவருஷம்தான் பிராணன் தேஹத்திலிருக்கிறான் என்று கூறப்பட்டிருப்பதால், பிராணன் ஜீவனாவான், முக்யப்ராணனை வாயு பகவானுக்கும் மற்ற இந்திரியாபிமானி தேவதைகளுக்கும் நடந்த விவாதம் அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் பிராணன் என்

பது முக்ய பிராணனைக்குறிக்கிறது ஆகையால் ந=விஷ்ணுவல்ல இதிசேத்=என்று சொன்னால் ந=அது சரியல்ல. ஏனென்றால் தத்யோகாத்=அந்தந்த அதிகாரிகளுக்கேற்றவாறு இஹ=இந்த கட்டத்தில் ஆசிரிதத்வாத்=சொல்லப்பட்டிருக்கும் உபாஸாத்ரைவித்யாத் ஆந்தர உபாஸனை, பஹிரோபாஸனை ஸர்வத்ரோபாஸனை என்ற மூன்றுவித உபாஸனைகளினால் மேற்சொன்ன ஜீவதர்மமும் முக்யப்ராணனின் தர்மமும் அந்தர்யாமியான பகவானையே குறிப்பதால் பிராணன் ஜீவனும் அல்ல முக்யப்ராணனுமல்ல விஷ்ணு தான் என்பது ஸித்தம். பிரம்மபுராணத்தில்,

கேஷாம் சித்ஸர்வகத்வேன கேஷாம்சித் ஹ்ருதயே ஹரி:|
கேஷாம்சித் பஹிரேவாஸௌ உபாஸ்ய: புருஷோத்தம:||

பகவானை உபாஸிக்கும் அதிகாரிகளிடையே சில தேவதைகள் பகவான் எங்கும் இருக்கிறார் என்ற பாவனையுடன் உபாஸிக்க வேண்டும். மற்றும் சிலர் ரிஷிகந்தர்வர்கள் தத்தம் ஹ்ருதயத்தில் விளங்கும் பகவானையே உபாஸிக்கவேண்டும். இன்னும் சிலரான மனுஷ்யோத்தமர்கள் வெளியேயுள்ள ராமகிருஷ்ணாதி பிரதிமைகளில் ஸாந்நித்யம்பெற்ற பகவானை உபாஸிக்கவேண்டும் என்றபடி மூன்றுவித உபாஸனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீகிருஷ்ணத்வைபாயனர் என்கிற ஸ்ரீவேதவியாஸ பகவான் அருளிச் செய்த பிரம்மமீமாம்ஸா சாஸ்திரம் எனப்படும் பிரம்ம ஸூத்திரத்தில் முதல் அத்யாயம் முதல் பாதம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஸ்திரீ வித்யை.

ஸத்யபாமையின் வீரச்செயல்.

ஒரு சமயம் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையிலிருக்கும் பொழுது இந்திரன் ப்ரத்யக்ஷமாய் வந்து தேவர்களுக்கு பலவகையில் தீங்கிழைத்துவரும் பூதேவியின் மகனான நரகாஸுரனை ஸம்ஹரிக்கவேண்டினான். பகவான் அதற்கிணங்கி ஸத்யபாமையுடன்

கருடனின் மீதேறி ஆகாயமார்க்கமாய் ஸப்த வாயுமார்க்கங்களையும் தாண்டி நரகாஸுரனுடைய ப்ராக்ஜோதிஷபுரத்திற்கு வந்தவுடன், அந்நகருக்கு பந்தோபஸ்தாய் சுற்றிலும் வெகு கூர்மையான ஆறாயிரம் பாசங்களை வீசி ஏராளமான சைனியத்துடன் முராஸுரன் நின்றிருப்பதைக்கண்டார். அவனுடன் மகாயுத்தம் செய்து அவனை ஸம்ஹரித்து முராரி என்னும் திவ்யநாமம் பெற்றார். அந்த பாசக்கோட்டையைத்தாண்டி உள்ளே சென்றால் மலைக்கோட்டை இருந்தது. அதைத்தகர்த்து உட்செல்லவும் ஜலக்கோட்டை இருந்தது. அதை சோஷித்து உட்செல்லவும் ஏகாகியாய் தேவர்களுடன் ஆயிரம் வருஷம் யுத்தம்செய்த நிசுந்தாசுரனும் ஹயக்ரீவாசுரனும் பஞ்சநதாசுரனும் எட்டு லக்ஷம் தானவஸைனியங்களுடன் யுத்தத்திற்கு வந்துசேர்ந்தனர். அவர்களை எல்லாம் விசித்ரயுத்தம்செய்து ஸம்ஹாரம்செய்து, கோட்டைவாசலில் நின்று, பாஞ்சஜன்ய சங்கத்தைப் பூரணம் செய்யவும், ஆயிரம் குதிரைகள் கட்டிய தங்க ரதத்திலேறி, அபாரமான முப்பது அக்ஷௌஹிணி சைனியத்துடன் நரகாசுரன் வந்துசேர, மகாயுத்தம்செய்து அவனை சக்ராயுதத்தால் ஸம்ஹரித்தார். வராகாவதாரத்தில் தனக்கு பாரியாளான அந்த பூதேவியின் பிரார்த்தனைக்கிணங்கி அந்த நரகனுடைய பிள்ளையான பகதத்தனுக்கு முடிசூட்டி அவனுடைய பொக்கிஷத்திலிருந்த இணையற்ற ஐசுவரியத்தையும் நவரத்னக் குவியல்கள், தங்க பாரங்கள், நாற்பதினாயிரம் யானைகள், பதினொன்றாயிரம் உத்தம அசுவங்கள் முதலியவைகளையும் கைப்பற்றினார். நரகன் தான் விவாகம் செய்துகொள்ளக் கருதி மணிபர்வதத்தில் அடைத்துவைத்திருந்த 16100 பலஜாதி உத்தம ஸ்திரீ ரத்தினங்களை ஸ்ரீகிருஷ்ணர்தான் விவாகம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டு த்வாரகைக்கு அனுப்பினார். அமிர்தம் சொட்டும் வருணனின் சுவேதச்சத்ரத்தை வருணனுக்கு திருப்பி அனுப்பினார். இந்திரனின் தாயான அதிதிதேவியின் அமூல்யமான குண்டலங்களை திருப்பிக்கொடுக்க இந்திரலோகம் வந்து, ஸத்தியபாமையுடன் அதிதிதேவிக்கு நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்று, துவாரகைக்கு திரும்பும் பொழுது, வழியில் இந்திரனின் நந்தனவனத்தில் அதியற்புதமான பாரிஜாத விருக்ஷத்தை ஸத்தியபாமை

கண்டு, அதை துவாரகைக்கு கொண்டு போக ஆசைப்பட்டாள். அதற்கு பகவான் "பாமே! முன் அமிர்தமதன காலத்தில் க்ஷீராப்தியிலிருந்து உதித்த இந்த பாரிஜாதம் இந்திரனுக்கென்றே கொடுக்கப் பட்டுள்ளது. நாம் இதைக் கொண்டுபோனால் முப்பத்திமுக்கோடி தேவர்களும் கட்டாயம் யுத்தம் செய்வார்கள். மகா யுத்தம் நடக்கும். இது வேண்டாம். இதில் ஆசைப்படாதே" என்றார். ஸத்யபாமை சிறிதும் மனதைத் தளரவிடாமல் "ப்ராஹ்மீஷபணேகிம்மாம் வ்யலீகை: கம்ஸமர்த்தன" ப்ரபுவே! யுத்தம் செய்ய நேரிடுமே என்று சொல்லி என்னை பயமுறுத்தி இதைக் கொண்டு போகாதிருக்கச் சொல்லுகிறீர். கம்ஸனை ஸம்ஹரித்த உமக்கு இது ப்ரமாதமல்ல, ஆயினும் நீர் சிரமப்படவேண்டாம். நானே யுத்தம் செய்கிறேன். கட்டாயம் இந்த மரத்தைக் கொண்டு போகத்தான் வேண்டும். இந்திரனின் பாரியாளான சசீ மமதை கொண்டிருக்கிறாள். தன் புருஷனின் பராக்கிரமத்தை அதிகமாய் எண்ணியிருக்கிறாள். அவனுடைய வீட்டிற்கு தானாக வந்த என்னை இவள் சரியாய் மதிக்கவில்லை. உபசரிக்கவில்லை. அவனுடைய அகந்தையை அடக்க இந்த மரம் அவசியம் கொண்டு போகப்படவேண்டும்" என்று ஸத்யபாமை அடம் பிடிக்க, பகவான் வேருடன் அம்மரத்தைப் பிடுங்கி கருடனின் மீது வைத்துக் கொண்டு பிரயாணமானார். காவலாளிகளின் வார்த்தையின் பேரில் சசியின் எதிரில், இந்த அவமானத்தை சகிக்க முடியாதவனாய், இந்திரன், எல்லா லோக பாலர்களுடன் ஸ்ரீகிருஷ்ணருடன் யுத்தம் செய்ய வந்து சேர்ந்தான். புங்கானு புங்கமாய் தேவசைனியங்கள் பாணங்களை வர்ஷிக்கவும் ஸ்ரீகிருஷ்ணர் "பாமே! திரும்பிப்பார். கடல் கரை பிரண்டு வந்தாற்போல் தேவசைனியம் யுத்தத்திற்கு வந்து விட்டது" என்று சொல்ல, ஸத்யபாமை உடனே பகவானின் கையிலிருந்த சாரங்கமென்னும் தனுஸ்ஸை தான் கையில் எடுத்துக்கொண்டு, சைனியங்களின் முன்னடி யுத்தம் செய்யவந்த பணக்காரனான குபேரனின் விசாலமான நெற்றியில் ஐந்து பாணங்களால் அடித்தாள். குபேரன் மூன்று பல்லம் என்னும் பாணத்தால் பாமையை அடிக்கவும் அவைகள் வந்து சேருவதற்கு முன்பே மூன்று அர்த்த சந்திர பாணங்களால் அவைகளை சேதித்தாள். எட்டு வத்ஸதந்தம்

பாணங்களால் அவனுடைய நெற்றியில் அடித்தாள். குபேரன் மகாகோபங்கொண்டு 21 க்ரூரமான பாணங்களைத் தொடுக்கவும் பாமை அரை க்ஷணத்தில் 7 பாணங்களால் அவைகளை ஒவ்வொன்றையும் மூன்று துண்டுகளாக்கி அவனுடைய தனுஸ்ஸையும் பிடித்த இடத்தில் அர்த்த சந்திர பாணம் போட்டு இரண்டு துண்டாக்கினாள். வேறொரு தனுஸ்ஸைக் கொண்டு குபேரன் பாணவர்ஷம் செய்யவும் வெகு ஆச்சரியகரமாய் ஸத்யபாமை எல்லாவற்றையும் சேதித்து தன்னிடம் ஓர் பாணமும் எய்யாதபடி தடுத்து வந்தாள். குபேரன் இதைக் கண்டு அடங்காக்கோபம் கொண்டு மிக்க நீண்டதொரு தனுஸ்ஸை எடுத்து "ஸத்யபாமையே! உன்னைக் கொல்கிறேன். பார்" என்று சொல்லி ஓர் க்ரூரமான அர்த்த சந்திர பாணத்தைத் தொடுக்கவும், ஸத்யபாமை வெகுலாகவமாய் அந்த தனுஸ்ஸையும் க்ஷுரப்ரம் என்னும் பாணத்தால் சேதித்து அந்தப் பாணத்தைப் போடமுடியாமல் செய்து விட்டாள். இனி தனுர் பாணங்கொண்டு யுத்தம் செய்யமுடியாதென்று எண்ணி குபேரன் முத்கராயுதம் தூக்கி நூறு தடவை மேலே சுழற்றி மிக்க பலமாய் வீசினான். ஸ்ரீகிருஷ்ணர் சிரித்துக்கொண்டே தாவி இடது கையால் அதைப்பிடித்து கீழே போட்டார். குபேரன் வெட்கிப்போய் ஓடிவிட்டான். இவ்வாறே எல்லா திக்பாலகர்களும் தோற்றுப்போய் ஓடிவிடவும், முடிவில் இந்திரனும் யுத்தம்செய்து வஜ்ஜிராயுதம் போட்டும், ஸ்ரீகிருஷ்ணர் அதைப் பிடித்துவிடவும் மிகுந்த அவமானமடைந்து யுத்தத்திலிருந்து ஓடினான். ஸத்யபாமை சிரித்துக்கொண்டு "ஸர்வவல்லமை படைத்த இந்திரா! நீ இவ்வாறு ஓடலாமா? மமதைகொண்ட உன்பாரியாள் இனி உன்னை மதியாள். உன்னை மகாபௌருஷமுள்ளவனென்று எண்ணி கர்வங்கொண்டிருக்கிறாள். உன் வல்லமை எங்கே போயிற்று" என்று சொல்ல, மகேந்திரன் ஸத்யபாமா ஸமேத ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை சாஷ்டாங்கம் நமஸ்கரித்து க்ஷமாபனம் செய்துகொண்டு ஆனந்தமாய் பாரிஜாத விருக்ஷத்தை அனுப்பி வைத்தான். ஸத்யபாமையும் பாரிஜாதத்தை த்வாரகைக்கு கொணர்ந்து தன் வீட்டு அங்கணத்தில் ஸ்தாபித்து, பார்வதி அதிதி முதலிய உத்தமஸ்திரீகள் ஆசரித்தபடி தன் பர்த்தாவான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை இந்த விருக்ஷத்தில் சேர்த்துக்கட்டி, நாரதருக்கு தானம்செய்து மகாவிரதத்தை செய்துமுடித்தாள். இச்சரிதை ஸ்ரீமத் பாகவதம் ஹரிவம்சம் முதலானவைகளில் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனனக் கிரமம்.

வைகுண்ட படம் என்னும் ஒரு சித்திர நூல் மகாக்ஞானியான ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளால் இயற்றப்பட்டதென்று மாத்வர்களில் பலமான பிரசாரத்திலிருக்கிறது. அநேக முக்ய ப்ரமேயங்களை விளக்கும் இச்சித்திரப்படத்தின் விஷயம் நம்மவர்களால் அறியப்படவேண்டியது அவசியமெனக் கருதி இதன் சாராம்சம் இங்கு விவரிக்கப்படுகிறது.

1 மகா பாபங்களைச் செய்ததின் நிமித்தம் அதன் பலன்களை அனுபவிக்க ஜீவன் தமஸ்ஸில் வீழ்த்தப்படுகிறான். அங்கு பகவத் ஸங்கல்பத்தின்படி கர்ம பலனை அனுபவித்த பின் அடுத்து 2வதாக நெளிக்கும் புழு ஜன்மம் உண்டாகிறது. பிறகு 3வது பிசாசு ஜன்மம். 4வது ராக்ஷஸ ஜன்மம். பிறகு 5வது நாய் ஜன்மம். பிறகு 6வது பன்றி பிறப்பு. பிறகு 7வது கழுதையின் பிறப்பு. பிறகு 8வது ஒட்டகை ஜன்மம். பிறகு 9வது ப்ரம்ம ராக்ஷஸனாக பிறக்கிறான். பிறகு 10வது விருக்ஷ ஜன்மத்தை அடைகிறான். பிறகு 11வது கொடியாக பிறக்கிறான். பிறகு 12வது சப்பாத்தியாக பிறக்கிறான். பிறகு 13வது சுவனாக பிறப்படைகிறான். பிறகு 14வது கோட்டானாக பிறக்கிறான். பிறகு 15வது ஜன்மம் காக்காய். பிறகு 16வது குரங்கு. பிறகு 17வது குதிரை. பிறகு 18வது ஓநாய், பிறகு 19வது பாம்பு. பிறகு 20வது தவளையாக பிறக்கிறான். பிறகு 21வது பிறப்பு உண்ணி. பிறகு 22வது நரியாக பிறக்கிறான். பிறகு 23வது ஆடு. பிறகு 24வது பூனை. பிறகு 25வது வேங்கை. பிறகு 26வது கொக்கு. பிறகு 27வது வண்டு. பிறகு 28வது யானை. பிறகு 29வது தேள். பின்பு 30வது புஷ்பம். பின்பு 31வது ஜன்மம் பசுமாடு. பின்பு 32வது மனுஷ்ய ஜன்மம்.

2. (a) அந்த மனுஷ்ய ஜன்மத்தில் அந்த ஜீவன் உலகத்திற்கு ஹிம்சை விளைவிப்பவனாய் இருந்தால் அடுத்த பிறப்பில் அவன் தற்போது அடைந்திருந்த 32வது ஸ்தானத்திலிருந்து கீழே இறங்கி 10வது ஸ்தானமாகிய விருக்ஷ ஜன்மத்தையே அடைவான்.

(b) அறிவு பெருமலேயே வெகு காலம் பிழைத்திருந்தால் மேல் பதவிக்கு போகாமல் கீழே 14வது ஸ்தானமாகிய கோட்டானாக பிறப்பான்.

(c) ஈசுவரன் அந்த மனுஷ்யனுக்குக் கொடுத்திருந்தும் பிராம்மணாதி ஸத் பாத்ரங்களுக்கு அன்னம் கொடாமலிருந்தால் அவன் மேல் பதவியை அடையாமல் தன் 32வது ஸ்தானத்திலிருந்து கீழே விழுந்து 6வது ஸ்தானமாகிய பன்றியாகவே பிறப்பான்.

(d) கடின சித்தமுள்ளவனாயின் 19வதாகிய பாம்பு ஜன்மம்.

(e) தர்மத்திற்கு துரோகம் செய்பவனாயின் 18வதாகிய ஓநாய் ஜன்மம்.

(f) பேராசை பிடித்தவனாயின் 3வது ஸ்தானமாகிய பிசாசு ஜன்மம்.

3 மனுஷ்ய ஜன்மத்தில் முதல் ஜன்மம் சண்டாளனாய்ப் பிறப்பான், அது 39வது ஸ்தானமாக கருதப்பட்டிருக்கிறது. பிறகு 40வது அம்பட்டனாக பிறப்பான். பிறகு 41வது வேசி (தேவடியாள்) ஜன்மம். பிறகுதான் 42வது சூத்ரன்.

4 (a) சூத்ரனாய் பிறந்து தர்ம மார்க்கத்தில் வியாபாரம் செய்து வந்தால் அடுத்த ஜன்மத்தில் அவனுடைய 42வது ஸ்தானத்திலிருந்து 54வது ஸ்தானமாகிய வைசிய ஜன்மத்திற்கு மேலேறிப் போவான்.

(b) க்ருஸ்தாச்ரமத்தை விட்டு ஸாது ஸஹவாஸம் அடைந்தால் 76வது ஸ்தானமாகிய அவதூத மார்க்கத்தை அடைவான்.

(c) ஏராளமாய் பிராம்மணாதி ஸத் பாத்ரங்களுக்கு தானம் செய்பவனாயின் 58வது ஸ்தானமாகிய ராஜ பதவியை அடைவான்.

(d) பரம ஸாத்விகனாய் இருந்தால் அடுத்த பிறப்பில் 56வது ஸ்தானமாகிய பிராம்மணனாகவே பிறப்பான்.

(e) விரக்தியடைந்தால் அடுத்த ஜன்மத்தில் 85வது ஸ்தானமாகிய கைலாஸ மார்க்கத்தை அடைவான்.

(f) க்ஞானியானால் மறு பிறப்பில் 84வது ஸ்தானமாகிய ஸ்வர்க்க லோகத்தையே அடைவான்.

(g) கோபிஷ்டனாயிருந்தால் மறுபிறப்பில் ஹீனஜன்மமான 17வது ஸ்தானமாகிய குதிரையாக பிறப்பான்.

(h) பணக்காரனாயிருந்து தானம் செய்யாதவனாய் இருந்தால் 34வது ஸ்தானமாகிய பூனையாக பிறப்பான்.

(i) சுத்தமான அந்தக்கரணமில்லாமலிருந்தால் கீழே தவறி விழுந்து 12வது ஸ்தானமாகிய சப்பாத்தியாக பிறப்பான்.

(j) க்ஞானமுள்ளவனாயிருந்து அவனுடைய சுற்றத்தார்களுக்கு புத்தி புகட்டாமல் இருந்தால் 13வது ஸ்தானமாகிய சுவருக பிறப்பான்.

(k) மூர்க்கனாயிருந்தால் 8வது ஜன்மமாகிய ஒட்டகையாக பிறப்பான்.

(தொடரும்)

மதிப்புரை.

ஓர் செய்தி.

பண்டர்புரத்திலிருந்து தற்காலம் இந்நகர் வந்திருக்கும் ஸ்ரீமதி அம்மாளு அம்மாள் திருச்சி ஸ்ரீரங்கம் மதுரையில் ஒன்றிரண்டு நாட்கள் தங்கி பஜனைகள் நடத்தி மானாமதுரை நவபாஷாணம் தனுஷ்கோடி தர்பசயனம் அளகிரி பழனி போய் அந்தந்த மூர்த்திகளைக் குறித்து புதிய புதிய பாட்டுகளைப் பாடி ஊர் வந்து 19—9—37 அநந்த விரதன்று இரவு பூராவும் பஜனை செய்து அநந்தபத்ம நாபனைக் குறித்து இரண்டு புதிய பாட்டுகளைப்பாடி 7—10—37ல யன்று வெகு விமரிசையாய் கங்கா ஸமாராதனை நடத்தி வழக்கப்படி நவராத்திரியில் ஒவ்வொரு நாளும் மற்ற காலங்களில் குறிப்பிட்ட நாட்களிலும் பஜனை செய்து வருகிறுள் என்றும் நூற்றுக்கணக்கான ஜனங்கள் சேருகிறார்களென்றும் இந்நகரில் இன்னமும் சில்காலம் வசிப்பாள் என்றும் ஓர் நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீமத்வ ஸஹஸ்ர நாமாவளி.

ஸ்ரீநாராயண பண்டிதாசாரியாரால் இயற்றப்பட்டதாயும் ஸ்ரீபகவத் பாதாளின் அனுக்ரஹத்தை வெகு சீக்கிரமே சம்பாதித்துத் தருவதாயும் 16 ஸர்க்கங்கள் கொண்டதாயும் இம் மித்திரனில் தொடர்ந்து மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டு வருவதாயுமுள்ள ஸ்ரீமத்வ விஜயத்தில் தொகுக்கப்பட்டுள்ள ஸ்ரீமத் வாசாரியாரின் அழகிய ஆயிரம் நாமம் ஸ்ரீ மத்வநவமி ஹனுமஜ்ஜயந்தி ஜயதீர்த்தாதிகளின் புண்யதினேற்சவங்கள் முதலிய மதசம்பந்தமான விசேஷ தினங்களில் முக்ய ப்ராணரின் அர்ச்சனைக்கு உபயோகப்படும்படி, நாமாவளியாக தொடுக்கப்பட்டு, பிரசுரிக்கப் பட்டிருப்பதைக்காண மிகவும் மகிழ்கிறோம். இது வெகு அபூர்வமான நூலென்றும் மாத்வர்களுக்கு இன்றியமையாததென்றும் நாம் சொல்லாமலேயே எல்லோருக்கும் விளங்கும். மாத்வ சமூகத்திற்கு இவ்வாறு பேருதவியை அளித்த இதன் ஆசிரியர் ஸ்ரீம, வே. குத்தி நாகேசாசாரியாருக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைபட்டிருக்கிறோம். இது திருப்பதி தாளசிமிட்டா ஸ்ரீமாத்வா லைப்ரெரியின் உதவிக்காக ஸ்ரீமான் K ராஜாராவால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு 4. இப்புஸ்தகம் கிடைக்கும் விலாஸம்:—

K. Raja Rao. 28, Big Street Triplicane, Madras.

பூர்ணபோததர்சினி.

வடகோதாவரி ஜில்லாவைச் சேர்ந்த ராமசந்திர புரத்தில் ஸ்ரீ ஆனந்த தீர்த்த அச்சாபீஸிலிருந்து பூர்ணபோத தர்சினி என்னும் நற்பெயர் கொண்ட ஓர் மாதப் பத்திரிகையை வரப்பெற்றோம். ஸ்ரீமான்களான பள்ளே சேது நாராயணராவ் அவர்கள் மானேஜிங் எடிடர் என்றும் டாக்டர் M. ராமராவ் M.A, P.H.D., B.Ed., அஸோஸியேட் எடிடர் என்றும் தெரியவருகிறது. இப்பத்திரிகையின் சிறிது பாகம் ஆங்கிலத்திலும் மற்றபாகம் பூராவும் தெலுங்கிலும் பிரசுரமாயிருக்கிறது. வெகு சிலாக்யமான கட்டுரைகளும் நிரூபங்களும் ஆந்தர தேசத்து பிரபலஸ்தர்களால் எழுதப்பட்டு வருகின்றன. பம்பாய் மத்வமுனிதாஸா பத்திரிகை பிரசாரம் செய்து வந்த வழியில் இப்பத்திரிகை பிரசுரிக்கப் பட்டு வருவதைக்காண மகிழ்கிறோம். தமிழ் நாட்டு மாத்வர்களுக்கு எமது மாத்வமித்திரன் ஊழியம் செய்து வருவதுபோல், ஆந்திர தேசத்

தில் இப்பத்திரிகை எவ்வகை இடுக்கண் வந்த போதிலும் ஸ்ரீபகவத் பாதாளின் கைங்கரியமே இஹத்திற்கும் பரத்திற்கும் மேலான சாதனம் என்னும் திடமான நம்பிக்கையுடன் நீடூழி உழைத்துவர, ஸர்வேசன் எல்லாவகை அனுக்ரஹத்தைப் புரிய பிரார்த்திக்கிறோம். நாளது அக்டோபர் மீ 15உ வெளியான இதழ் இப்பத்திரிகையின் 3வது மலராகிறது. வருட சந்தா ரூ 3. மேற்கண்ட விலாஸத்துக்கு எழுதி பத்திரிகையைப் பெறலாம்.

ஸந்தியாவந்தன மந்திரம்.

தேவ நாகர எழுத்து தெரியாதவர்களுக்கு உபயோகப்படும்படி தமிழில் ரிக்வேதஸந்தியாவந்தன மந்திரங்களை இந்நகர் டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமான் M. ராமராவ் மீண்டும் பதிப்பித்துள்ளார். இப்பதிப்பில் போஜன மந்திரமும் யக்ஞோபவீதமந்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பதிப்பிலும் ஸங்கல்பாதிகளின் விபரங்களும் மந்திரங்களின் பதச்சேதாதிகளும் கண்டிருப்பது குறிப்பிடத் தகுந்ததேயாகும். இதன் விலை அணா 2½. தபாற் சிலவு வேறு. காபிகள் இதன் ஆசிரியரிடம் கிடைக்கும்.

விசேஷ தினங்கள்.

30—10—37	சனிவாரம்	ஏகாதசி உப.
31—10—37	பானுவாரம்	த்வாதசி, ஸாதனி, காலை மணி 6-14க்குள் பாரணை
1—11—37	சோமவாரம்	தீபாவளி, இரவு பண்டிகை. சந்திரோதய காலத்தில் விதவைகளுக்கும் ஸந்யாஸிகளுக்கும் கூட அப்யங்கம் அவசியம்.
2—11—37	மங்களவாரம்	தீபாவளி பகல் பண்டிகை. திலதர்ப்பணம்
3—11—37	புதவாரம்	விஷ்ணு ப உப.
20—11—73	புதவாரம்	சிரவண உப. இல்லை. விஷ்ணுப. உப இல்லை.
11—11—37	குருவாரம்	சிரவண உப. இல்லை. விஷ்ணுப உப இல்லை.
14—11—37	பானுவார	ஏகாதசி உப.
15—11—37	சோமவாரம்	உத்தானத்வாதசி. மாலையில் ஞீ ராப்தி பூஜை. துளசி விவாகம்
18—11—37	குருவாரம்	ஆகாமாவை பௌர்ணமி. விஷ்ணுபஉப.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் மிஞ்சி வமாறு திருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஸ்ரீவத்யம் பாகவதரங்காசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்துகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்பட வேண்டும். Certificate of Posting பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

டி. எஸ். ஆர். அண்டு கம்பெனி, கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909 | தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

- வாஸனைப்பாக்கு
- வாஸனைச்சுண்ணும்பு
- வாஸனைப் புகையிலை
- ஸ்னானப்பவுடர்
- கேஸர் பவுடர்
- அம்பர், அரகஜா
- தசாங்கம்
- பலகாய்கறி ஊர்காய்கள்
- ரோஜாப்பூ குல்கந்து
- ஷர்பத் தினுசுகள்
- கொப்பரைச்சீவல்
- கோகுல் கூந்தல் தைலம்
- பற்பொடி
- ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம், அரைக்கீரைவிதைத் தைலம், மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.



மாத்வமித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 10	ஈசுவர ஸம்வத்ஸரம்.	No. 4
புஸ்தகம் 10	கார்த்திக மாஸம். (18-11-1937) குருவாரம்	நெ. 4

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1.	ஸ்ரீமகாபாரத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)	97
2.	ஜனனக்கிரமம்	104
3.	ஸ்திரீ வித்யை (இரு உத்தம ஸ்திரீகளின் சம்பாஷணை)	107
4.	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	112
5.	ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	116
6.	லக்ஷ்மணன் பரதனுக்குத் தமையனே	119
7.	ஸ்ரீ ஸத்யஸந்த ஸ்வாமிகளின் சரித்திரம்	122
8.	செய்தித்திரட்டு	125
9.	பிரம்ம ஸூத்திரம் (ஸ்ரீமான் M. ராமராவ்)	126
10.	விசேஷ தினங்கள்	128

ஆசிரியர்:—ஆத்யம் ப்ாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்,

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வால்யங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

22 NOV 1937

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 } ஈசுவர ஸம்வத்ஸரம். கார்த்திக மாஸம். { NO. 4

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீம. வே. பாகலத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

முப்பதாவது அத்யாயம்.

(முன் 77ம் பக்கம் தொடர்ச்சி.)

அசுவமேதத்திற்கு பொருள் வந்தது.

ஸ்ரீகிருஷ்ணர் த்வாரகையில் வாசம் செய்யும் பொழுது தர்மபுத்திரர் உத்தமரீதியில் அசுவமேதம் யக்ஞம்செய்ய திரவ்யத்தை அடையவில்லை. கருணையுடன் கூடியவரான தர்மபுத்திரர் மகாபாரதயுத்தத்தில் சண்டையாடி தப்பிப் பிழைத்த க்ஷத்திரிய ஸமூகத்தினின்றும் கப்பத்தை வாங்க விரும்பவில்லை. மத்யம கல்பத்தில் யக்ஞம் செய்யவும் இச்சிக்கவில்லை. ஸர்வக்ஞரான ஸ்ரீவேதவியாஸர் தர்மராஜனின் மனதிலுள்ள அபிப்பிராயத்தை அறிந்து அவனிடம் வந்து, இமயமலையின் கொடுமுடி எங்கு மேரு பர்வதத்துடன் சேருகிறதோ, எந்த இடத்தில் மகாவிஷ்ணு கர்மபந்தமில்லாதவராயினும் ஜனங்களின் மெப்புக்காக, நாசமற்ற

வரான தன்னுடைய உத்தேசமாய் யக்ஞத்தைச் செய்தாரோ, எந்த இடத்தில் ருத்திராதி தேவர்களும் மருத்தராஜனும் தைத்யனான விருஷபர்வராஜனும் விஷ்ணுவின் உத்தேசமாய் யக்ஞம் செய்தனரோ அந்த இடத்தில் அக்ஷயமான பொருள் இருக்கிறது. ருத்திரனின் அந்தர்கதராயுள்ள பரசுராமரின் ரூபம் தரித்த ஸ்ரீஹரியை நீ ஆராதித்து, அந்த ஹரியின் ஆக்ஞையால் அந்த பொருளை எடுத்துக்கொண்டு அதைக்கொண்டு யக்ஞம்செய் என்று சொன்னார். ஸ்ரீ வேதவியாஸரின் இந்த வாக்யத்தை அனுஸரித்து பீமஸேனர் தர்மபுத்திரரைப்பார்த்து இவ்வாறு சொன்னார். ஸகலேசுவரனாயும் விஷ்ணுவாயுமுள்ள பரசுராமர் ருத்திரனுடைய தேகத்தில் அந்தர்யாமியாயிருப்பவர். அவர் யக்ஞத்தில் மீந்த பணத்திற்கு அதிபதி. அந்த விஷ்ணுதான் அர்ஜுனனுக்கு பாசுபதாஸ்திரம் கொடுத்தவர். அந்த விஷ்ணுதான் எங்கள் விஷயத்தில் மற்ற காரியங்களைச்செய்தவர். ஜகதீசுவரனான விஷ்ணுதான் பிரம்மபதவி ருத்திரபதவி இந்திரபதவி முதலான ஸ்தானங்களைக்கொடுப்பவர். அவர் ஸ்வதந்திரர். பரதந்திரர்களான பிரம்மாதிகளை தன் இச்சையால் தான் ஆட்டிவைக்கிறார். ராஜனே! நாம் அவருக்கு ப்ரியமானவர்கள். நாங்கள் அவருக்கு எப்பொழுதும் ப்ரியமானவர்கள். ஆகவே அவரால் ஆக்ஞை யிடப்பட்டிருக்கும் பணத்தைக்கொண்டு யக்ஞத்தைச்செய்வோம். அந்த பரசுராமர்தான் எங்கள் பாட்டனாரான ஸ்ரீ வேதவியாஸராய் இருந்து அந்த பணத்தைத்தருகிறார். என்றிவ்வாறுசொல்லி ஸ்ரீ வேதவியாஸரை முன்னிட்டுக்கொண்டு பாண்டவர்கள் பிரயாணமானார்கள். ஸ்ரீவேதவியாஸர் நூறுயோசனை தூரம் நாலுபக்கமும் நிரம்பியிருந்த தனத்தை, தான் எடுத்து பாண்டவர்களுக்கு கொடுத்தார். தர்மபுத்திரரைத்தவிர பீமஸேனாதிகள் எல்லோரும் உதயசூரியனைப்போல் காந்தியுள்ள அநேக தங்கங்களை யானை குதிரை ஒட்டகை காளை மனுஷ்யர்கள் முதலான வாகனங்களுடன் சேர்த்து யக்ஞத்தின்பொருட்டு தூக்கி வந்தார்கள்.

அப்பொழுதுதான் ஸ்ரீகிருஷ்ணர் பத்னிமார்களுடன்சேர்ந்து ஸுபத்ரையை அழைத்துக்கொண்டு ஹஸ்தினுபுரத்திற்கு புறப்பட்டார். வழியில் உதங்கமுனிவரால் பூஜிக்கப்பட்டவராய்

ஜலத்தை விரும்பிய அந்த உதங்கமுனிவருக்கு அவருடைய இஷ்டப்படியே மழைபெய்யும் மேகங்களைக்கொடுத்து தான் முன்பு கொடுத்திருந்த வரனை பலனுள்ளதாய்ச்செய்து ஹஸ்தினுபுரம் சென்றார். பாண்டவர்களும் புருஷோத்தமனான ஸ்ரீவேதவியாஸரும் ஹஸ்தினுபுரம் சமீபம் வரும்பொழுது ஸ்ரீகிருஷ்ணர் ஹஸ்தினுவதி நகரத்தை ப்ரவேசம் செய்தார்.

பரிக்ஷித்ராஜனை ஸ்ரீகிருஷ்ணர் உயிர்ப்பித்தல்.

அச்சமயம் இறந்துபோயிருந்த குழந்தையை உத்தராதேவி பிரஸவித்தாள். அசுவத்தாமாவின் பிரம்மாஸ்திரத்தால் இறந்துபோன குழந்தையைப்பார்த்து குந்தி த்ரௌபதி முதலான ஸ்திரீகள், சரணத்தை அளிப்பவரும் ஜகத்பதியுமான ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை சரணமடைந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணர் தன்னால் கர்பத்தில் ஸம்ரக்ஷிக்கப்பட்டதும் ப்ரஸவகாலத்தில் தான் பிரம்மாஸ்திரத்தால் இறந்துபோனதுமான குழந்தையை பாண்டவர்களின் வம்சத்துக்காக எல்லோர்முன் மீண்டும் உயிர்ப்பித்தார். அந்த குழந்தையை உயிர்ப்பித்த காலத்தில் தான் ஸ்ரீவேதவியாஸருடன் கூடிய பாண்டவர்கள் பணக்குவியல்களுடன் ஹஸ்தினுபுரத்தை பிரவேசித்தனர். ஸ்ரீகிருஷ்ணரால் ஸம்ரக்ஷிக்கப்பட்ட பேரக்குழந்தையைப்பார்த்து எல்லா பாண்டவர்களும் ஆனந்தமுள்ளவர்களாயினர். தர்மபுத்திரர் பேரக்குழந்தை பிறந்ததற்காக சந்தோஷமடைந்து அநேக தானங்களைச்செய்தார். ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நமஸ்காரம் செய்தார். குந்தி த்ரௌபதி ஸுபத்ரை உத்தராதேவி மற்றும் பல ஸ்திரீ ஜனங்களென்ன பாண்டவர்கள் என்ன மற்ற புருஷர்கள் என்ன இவர்களால், ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்தோத்திரம் செய்யப்பட்டார். நமஸ்காரம் செய்யப்பட்டார்.

தர்ம புத்திரரின் அசுவமேதம்.

பிறகு ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து ஆக்ஞையைப்பெற்று பாண்டவர்கள், ஸ்ரீவேதவியாஸரை ஸபாதிபதியாகச் செய்துகொண்டு பிரம்மக்ஞானிகளான ரிஷிகளைக்கொண்டு அசுவமேத யக்ஞத்தை ஆரம்பித்தார். ஜகத்பதியான பகவான் ஸ்ரீ வேதவியாஸர் ஸமஸ்த

யக்ஞங்களின் ஸ்வரூபமான அசுவமேதயக்ஞத்தை பாண்டவர்களைக்கொண்டு சுயம் செய்தார். ஸ்ரீ வேதவியாஸரால் பிரேரிபிக்கப்பட்டவரான பீமசேனர் எல்லா யக்ஞபாத்திரங்களையும் யக்ஞசாலையையும் தங்கத்தாலேயே நிர்மாணம் செய்தார். பிறகு அர்ஜுனன் புரோஹிதனை முன்னிட்டுக்கொண்டதும் மந்திர பூர்வகமாய் பூமியை ப்ரதக்ஷிணம் செய்துவர விடப்பட்டதும் அதன் சரீரம் பெரும்பாலும் கருப்பாயும் மற்றவிடங்களில் அநேக வர்ணங்களை உடையதாயுமுள்ள அச்வமேதாச்வத்தின் பின்காவலாய் புறப்பட்டான். அந்த அர்ஜுனன் அந்த குதிரையைத்தடுக்கும் எல்லா அரசர்களையும் ஆயுதசாமர்த்தியத்தைக்கொண்டு ஜயித்து, சத்ருக்களால் தோல்வியடையாதவனாய் எல்லா இடங்களிலேயும் குதிரையை சஞ்சரிக்கச்செய்தான். இந்த திக்விஜய காலத்தில் தர்மபுத்திரரின் ஆக்ஞையின்பேரில் அர்ஜுனனால் ஓர் அரசனும் கூட கொல்லப்படவில்லை. ப்ரீதிகொண்ட அர்ஜுனனால் எல்லா அரசர்களும் அசுவமேத யக்ஞத்திற்கு வரும்படி அழைக்கப்பட்டனர்.

பப்ருவாகனின் யுத்தம்.

அர்ஜுனன் க்ரமமாய் மணலூருக்கு வந்துசேர்ந்தான். அங்கு பப்ருவாகனன் அர்க்யம் பாத்யம் முதலியவைகளை எடுத்துக்கொண்டுவந்து தந்தையான அர்ஜுனனை எதிர்கொண்டு அழைத்தான். அர்ஜுனன் பிள்ளையான பப்ருவாஹனனைப் பார்த்து இவ்வாறு சொன்னான். மகனே! யுத்தத்தில் ஆசையுள்ள நான் உன்னால் அர்க்ய பாத்யாதிகளால் எதிர்கொண்டு அழைக்கப்பெற்றேன். அதனால் உன்னிடம் எனக்கு விசுவாசம் போய்விட்டது. என்னுடைய யக்ஞக்குதிரையை நீ தடுக்காமலிருந்ததால் உன்னுடைய பராக்ரமத்தை சுடு. என்றிவ்வாறு அர்ஜுனன் சொன்னாலும், தந்தையிடமுள்ள பக்தியால் யுத்தம் செய்யாமல் இருக்கும் பப்ருவாகனனைப்பார்த்து ஸர்ப்ப கன்னிகையான உலூபி இவ்வாறு சொன்னாள். பப்ருவாகனா! அர்ஜுனனுடன் யுத்தம் செய். குருவின் ப்ரீதிக்காக எது செய்யப்படவேண்டுமோ அது சிறிதும் சம்சயமின்றி செய்யப்படவேண்டும். உன் தந்தையான அர்ஜுனனுக்கு உன் பலத்தைக் காண்பித்துக்கொண்டு

அவருடைய சந்தோஷத்திற்காகத்தான் நீ யுத்தம் செய் என்று உலூபியால் சொல்லப்பட்ட பப்ருவாகனன் தன் முழுபலத்தையும் காண்பித்துக்கொண்டு தந்தையான அர்ஜுனனுடன் யுத்தம் செய்தான். அர்ஜுனன் மகனிடம் ஸ்நேகத்தால் சிரித்துக்கொண்டு மெதுவாகவே யுத்தம் செய்தான். அந்த பப்ருவாகனன் எல்லா ஆயுதங்களை ப்ரயோகம்செய்த போதிலும், காயம் முதலான விகாரமடையாமல் உள்ள அர்ஜுனனைக் கண்டு, பால்ய புத்தியால் பரீக்ஷைக்காக, இதரர்களுக்கு மோகத்தைத்தரும் தேவாஸ்திரங்களால் மந்திரிக்கப்பட்ட ஓர் பெரிய பாணத்தை அர்ஜுனனிடம் ப்ரயோகம் செய்தான். தேவதாப்ரவேசமடைந்த அந்த பாணத்தால் அர்ஜுனனுக்கு மூர்ச்சை ஏற்பட்டது. மூர்ச்சையடைந்த குருவான அர்ஜுனனைக் கண்டு குருபக்தியால் மிகவும் துக்கப்பட்டவனாய் பப்ருவாகனன் தன் பிராணனை விட்டுவிட பட்டினி செய்ய உட்கார்ந்தான். பப்ருவாகனின் தாயான சித்ராங்கதை மிக்க துக்கமடைந்தவளாய் புலம்பினாள். அச்சமயம் உலூபியை நிந்தித்தாள். கலகத்தில் பிரியங்கொண்ட உலூபியே! மூவுலகிலும் பூஜை அடைந்துவரும் என் புருஷனை, அவிவேகியான என் மகனால் நீ கொல்ல வைத்ததால் உன்னைச்சுடு. லோக வீரனான என் புருஷனை விட்டு என் மகனால் ஆகவேண்டியதில்லை, நான் பதிலோகம் செல்கிறேன். நீ திருப்தியடைந்து இரு. என்று சொல்லி மரிக்க நிச்சயம் கொண்ட மனதுள்ளவளாய், தரையில் பிரண்டு அழுது வந்த அந்த சித்ராங்கதையைப் பார்த்து, ஸர்ப்பகன்னிகையான அந்த உலூபி நாகலோகம் போய், அக்ஷணமே விசல்யகரிணீ என்ற மூலிகையைக் கொணர்ந்து வந்து, அதனால் மூவுலகிலும் அதிரதனாயுள்ள தன் புருஷனான அர்ஜுனனை மூர்ச்சை இல்லாமல் செய்து எழுப்பினாள். அப்பொழுது உலூபி சிரித்துக் கொண்டு இவ்வாறு பேசினாள். முன்னொரு காலத்தில் தேவலோகத்தில் தேவர்கள் சொன்ன வார்த்தையை நான் கேட்டேன். அர்ஜுனன் பீஷ்மாசாரியார் துரோணாசாரியார் முதலானவர்களை மிக்க தர்ம மார்க்கத்தாலேயே கொல்லவில்லை. சிறிது கபடமாகவே அவர்கள் கொல்லப்பட்டனர். அந்த தோஷத்தால் அர்ஜுனன் யுத்தத்தில் மி[illegible]யை அடையட்டும். ஆனால் அந்த துக்கம் அவருக்கு இ[illegible]ல் ஏற்படவேண்டும்.

208169

அவருடைய மகனாலேயே ஏற்படட்டும் என்று சொன்னார்கள். இவ்வாறு தேவர்கள் சொன்ன வார்த்தையாலேதான் நான் பப்ருவாஹனனை யுத்தம் செய்யச் சொன்னேன். தேவர்களின் சங்கல்பத்தால் தான் அர்ஜுனன் மூர்ச்சையடைந்தார். கோஷத்தின் பலனை அனுபவித்ததால் அர்ஜுனன் மறுபடியும் மகனைத் தவிர்த்துள்ள இதரர்களால் சந்தோஷபலனை அனுபவிக்கப் போவதில்லை. மற்றவர்களால் அர்ஜுனன் கீழே விழுந்தால் மூவுலகிலும் வியாப்தமான சூர்யபோன்ற அவருடைய கீர்த்தி போய் விடும். அர்ஜுனனின் கீர்த்தி நாசமாகக்கூடாது என்று தான் தேவர்கள் இந்த காரியம் செய்தனர்.

(தொடரும்)

குறிப்பு.

இம்மாத்வமித்திரன் 8வது வாலியம் 192வது பக்கத்தில் ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் "அனந்தமான ஆனந்த க்ஞானமுள்ள ஸ்ரீ கிருஷ்ணர் பலராமருடன் சேர்ந்து அபிமன்யுவையும் அழைத்துக்கொண்டு விராடனின் நகரம் வந்துசேர்ந்தார்" என்று 23வது அத்யாயத்தின் 51வது சுலோகத்தின் மொழிபெயர்ப்புடன் பிரசுரமாகி அடுத்த வெளியீட்டில் அதாவது 232வது பக்கத்தில் 24வது அத்யாயம் 1வது சுலோகம் துவக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு 23வது அத்யாயத்தின் பாக்கியுள்ள 52 முதல் 60 வரையிலுள்ள சுலோகங்களின் மொழிபெயர்ப்பு பிரசுரிக்கப்பட அச்சாபீசில் தவறிப்போனதை அறிய மிகவும் வருந்துகிறோம். இந்தத் தவறுதலை எமது கவனத்திற்கு கொண்டுவந்த கோயமுத்தூர் வக்கீல் ஸ்ரீமான் D. R. ஸ்ரீனிவாஸாசாரியாருக்கு எமது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறோம். இவ்வாறு சதுர்தச புவனங்களுக்கும் பரமகுருவான சதுர்முகனின் பதவியை வகிக்கப்போகும் ஸ்ரீபகவத்பாதாளின் மகா கம்பீரமான மூலகிரந்தங்களை படித்தறியும் ஸத்வைஷ்ணவ வோத்தமர்களுக்கு எமது மாத்வமித்திரன் பரமமித்திரனாயிருந்து தக்க உதவி புரிவதை நாம் பலவகையில் அறிவதால்தான் எவ்வித சங்கடங்கள் ஏற்பட்ட போதிலும் இம்மித்திரனை கைவிடாது

நடத்த பேராற்றல் கொண்டிருக்கிறோம். ஸ்ரீஹரி குருமார்கள் துணைபுரிவார்களாக.

8வது வாலியம் 192வது பக்கத்தின் கடைசி வரியுடன் சேர்த்துக்கொள்ள வேண்டியதாவது:—

உத்தரா கல்யாணம்

பிறகு பாண்டவர்கள் அபிமன்யுவுக்கு உத்தராதேவியைக் கொடுத்து விவாகத்தை நடத்தினார்கள். விராட ராஜாவின் நகரத்தில் யாதவச்ரேஷ்டர்களுடனும் துருபதன் முதலான பாஞ்சாலர்களுடனும் சேர்ந்தவர்களும் அக்ஞாதவாஸத்தை முடித்து சந்தோஷமுள்ளவர்களுமான பாண்டவர்களுக்கு தம் கிருஷ்ணருடன் அந்த விவாக சந்தர்ப்பத்தில் மகோற்சவம் ஏற்பட்டது.

கர்ணனுடனும் சகுனியுடனும் சேர்ந்த துரியோதனாதிகள் யுத்தத்தில் அர்ஜுனனால் ஹிம்ஸிக்கப்பட்டவர்களாய் பீஷ்மாசாரியார் முதலானவர்களுடன் சேர்ந்து ஹஸ்தினாபுரம் வந்து பாண்டவர்கள் வனவாசம் செய்யும் விஷயத்தில் இவ்வாறு ஆலோசித்தனர். அக்ஞாதவாஸ காலத்தில் நாம் அர்ஜுனனை இப்பொழுது பார்த்துவிட்டோம். ஆகவே பாண்டவர்கள் எல்லோரும் மறுபடியும் வனவாஸத்திற்கு போகட்டும். என்று சொன்ன துரியோதனாதிகளைப்பார்த்து பீஷ்மாசாரியார் பாண்டவர்களுக்கு அக்ஞாதவாஸம் ஸம்பூர்ணமாய் முடிந்துவிட்டது என்றார். துரோணாசாரியாரும் பீஷ்மாசாரியார் சொன்னபடியே சொன்னார். பாபிஷ்டர்களான துரியோதனாதிகள் பீஷ்மாசாரியாருடையவும் துரோணாசாரியாருடையவும் வார்த்தைகளை நிராகரித்து மறுபடியும் பாண்டவர்கள் வனவாஸத்திற்கு செல்லவேண்டும் என்றுசொல்லி ஓர் தூதனை பாண்டவர்களிடம் அனுப்பினார்கள். அதற்கு தர்மபுத்திரர் இந்த அக்ஞாதவாஸம் சம்பூர்த்தியடைந்த விஷயத்தை பிராம்மணர் அறிந்துகொண்டிருக்கின்றனர் என்று பதில் சொல்லியனுப்பித்தார்.

சாந்த்ரமாஸத்தின் பிரமாணம்.

சூரியன் ஓர் ராசியை விட்டு மற்றொரு ராசியில் ஸங்கிரமணமடையும் காலமாகிய ஸௌரமாஸத்தை கணக்கிட்டுக்கொண்டு ஒருவருஷமாகவில்லை என்றும், அதனால் அக்ஞாதவாஸம் பூர்த்தி

யடையவில்லை என்றும் துரியோதனாதிகள் சொன்னார்கள். ஆனால் சாந்திரமாஸத்தின்படி ஒரு வருஷம் முடிந்து பாண்டவர்களுக்கு அக்ஞாதவாஸம் பூர்த்தியாயிற்று. நாட்களுக்கு சூரியன் அதிபதியாவான். பக்ஷங்களுக்கும் மாஸங்களுக்கும் சந்திரன் அதிபதியாவான். அதனால்தான் ஞானிகள் சாந்திரமான வருஷத்தை ப்ரதிக்ஞை முதலானவைகளின் விஷயத்தில் ப்ரதானமாய்க்கொள்கிறார்கள். ஆகவே தான் யக்ஞம் செய்வதில் சாந்திரமானத்தால் வஸந்தாதி ருதுக்களை ஏற்றுக்கொள்கின்றனரேயன்றி ஸௌரமானத்தின்படிக்குள்ள ருதுக்களை ஏற்றுக்கொள்வதில்லை. இவ்வாறு எந்த மாஸம் முக்யமானது, எந்த மாஸம் அமுக்யமானது என்பதை விசாரம்செய்யாமல், துரியோதனாதிகள் லோபபுத்தியால் பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்கவில்லை. பாண்டவர்களோ அக்ஞாதவாஸத்தின் காலம் ஸம்பூர்த்தியடைந்துவிட்டது என்று உத்தம பிராம்மணர்கள் மூலம் துரியோதனாதிகளுக்கு அறிவித்துக்கொண்டு உபப்லாவ்யம் என்னும் நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியுடனும் பத்னிமார்களுடனும் கூடிய பாண்டவர்கள் எல்லா யாதவர்களோடும் பாஞ்சால ராஜர்களோடும் மத்ஸ்ய ராஜர்களோடும் சேர்ந்து ஸ்ரீகிருஷ்ணரால் ப்ரீதிபூர்வமாய் உபதேசிக்கப்பட்ட ராஜ்யத்தை சம்பாதிக்கும் உபாயத்தைத் தேடுபவர்களாய் உபப்லாவ்ய நகரில் சில நாட்கள் வாசம் செய்தனர்.

ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத்பாதாள் இயற்றிய ஸ்ரீமஹாபாரத
தாத்பர்ய நிர்ணயத்தில் இருபத்தி மூன்றாவது
அத்யாயம் ஸம்பூர்ணம்.
ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஜனனக் கிரமம்.

(முன் 94ம்பக்கம் தொடர்ச்சி.)

5. சூத்திரன் மேலே விவரித்தபடிக்குள்ள குண ஸம்பன்னனாய் இருக்கும் பக்ஷத்தில் வைசியனாய் பிறப்பான். இது 54வது ஸ்தானமாக லக்கமிடப்பட்டிருக்கிறது. தராசு படிக்கல் முதலிய அளவுகளில் அவன் மோசம் செய்தால் 3வது ஸ்தானமாகிய புழுவாய் பிறப்பான். ஸத்விருத்தியிலிருந்தால் 56வது ஸ்தானமாகிய பிராம்மணனாய்ப் பிறப்பான். அவன் தான் சாக வேண்டுமென்று மரணத்தை அபேக்ஷித்தால் மறுபிறப்பில் 23வது ஸ்தானமாகிய ஆடு ஜன்மத்தை அடைவான். ஸத்விருத்தியிலிருந்தால் 57வது ஸ்தானமாகிய ராஜனாய்ப் பிறப்பான்.

6. (a) பரஹிம்சை செய்தால் 5வதாகிய நாய் ஜன்மம்.

(b) தைரியம் இல்லாதிருந்தால் 22வதாகிய நரி ஜன்மம்.

(c) பராக்கிரமம் இல்லாதவனாயின் 20வதாகிய தவளை ஜன்மம்.

(d) ஜீவ ஹிம்சை செய்தால் 25வதாகிய வேங்கை ஜன்மம்.

(e) பேராசை கொண்டால் 41வதாகிய வேசி பிறப்பு.

(f) வேசியிடம் ஆசை கொண்டால் 11வதாகிய கொடியாய் பிறக்கவேண்டும்.

(g) மதத்தால் கர்வங்கொண்டால் 28வதாகிய யானை பிறப்பு.

(h) காரணமின்றி சிரித்தால் 26வதாகிய கொக்கு ஜன்மம்:

(i) பிறரை நிந்தித்தால் 29வதாகிய தேள் பிறப்பு.

(j) ஆசாரமில்லாமலிருந்தால் 42வதாகிய சூத்திர ஜன்மம்.

(k) தானம் செய்யாமல் புண்ய நதியில் ஸ்நானம் செய்தால் 39வதாகிய சண்டாளனாய்ப் பிறப்பான்.

(l) சரீர பலத்தில் மாத்சரியங்கொண்டால் 40வதாகிய க்ஷவரகனாய் (அம்பட்டனாய்) பிறப்பான்.

(m) குருத்ரோஹம் செய்தால் 1வதாகிய தமஸ்ஸு வந்து சேரும்.

(n) பக்தி இல்லாமல் ஆசார அனுஷ்டானத்தைச் செய்தால் 27வதாகிய வண்டாய் பிறக்க நேரிடும்.

(o) சுருதி லயமில்லாமல் அபஸ்வரமாய் பாடினால் மறு பிறப்பில் 15வதாகிய காக்காய் ஜன்மம் வந்துசேரும்.

(p) அறிவில்லாமல் சிராத்தம் செய்தால் மறு பிறப்பில் 7வதாகிய கழுதைப் பிறப்பு.

(q) பொய் பேசுபவனாயின் 9வது ஸ்தானமாகிய பிரம்ம ராக்ஷஸ ஜன்மம்.

(r) தம் தம் வர்ணுசிரம தர்மங்களை சரியாய்ச் செய்துவந்தால் பிறகு அவதூத மார்க்கம் வந்துசேரும். இது 76 வது ஸ்தான மாக கருதப்பட்டிருக்கிறது.

(s) தத்வாதிகாரியாய் போனல் மேலே 89வதாகிய தத்வ மார்க்கம் வந்துசேரும்.

(t) கன்னிகையிடம் அபேக்ஷை கொண்டால் 58வதாகிய ராஜ ஜன்மத்தில் வந்து இறங்குவான்.

(u) இதரர் புகழ வேண்டுமென்ற டம்ப புத்தியால் தானம் செய்தால் மறு பிறப்பில் 16வதாகிய குரங்கு ஜன்மம்.

(v) புத்தியில்லாமல் அகங்காரம் கொண்டால் 30வதாகிய புஷ்ப ஜன்மம்.

(w) ஞானமிருந்தும் அதை உபயோகிக்காமல் இருந்தால் மறு பிறப்பில் 31வதாகிய பசு மாடாய் பிறப்பான்.

(x) பக்தி இல்லாமல் தீர்த்த க்ஷேத்திர யாத்திரை செய்தால் மறு பிறப்பில் 21வது ஸ்தானமாகிய உண்ணியாய்ப் பிறப்பான்.

(y) ஸாதுக்களின் ஸங்கத்தை அடையாமல் இருந்தால் மேற் பதவியை அடைந்தும் மறு பிறப்பில் 32வதாகிய மனுஷ்ய ஜன்மத்தில் இறங்கிவிடுவான்.

7. மேலே விவரித்தபடி ஸத்குண ஸம்பன்னனுய் இருந்தால் பிறகு 84வது ஸ்தானமாகிய ஸ்வர்க்கம் வந்துசேரும். பிறகு 85வதாகிய கைலாஸம். ஸ்வர்க்கத்திலிருந்துகொண்டு ஸாத்விக அகங்காரம் செய்தால் 56வது ஸ்தானமாகிய பிராம்மண ஜன்மத்தில் விழுவான். ராஜஸாகங்காரம் செய்தால் 58வதாகிய ராஜ ஜன்மத்தில் விழுவான். தாமஸாகங்காரம் செய்தால் 14வதாகிய ராக்ஷஸ ஜன்மம் வந்துசேரும்.

8. பிறகு 89வதாகிய தத்வ மார்க்கம். பிறகு 90வது ஸ்தானமாகிய குருத்யானம் ஏற்படும். பிறகு ஸர்வ காலத்திலும் குருவின் கடாக்ஷம் நிலை நிற்கும் யோக்யதையாகிய 91வது பதவி வந்துசேரும். பிறகு 92வது ஸ்தானமாகிய ஆகார சக்ரத்தை த்யானம் செய்வது ஏற்படும். பிறகு 93வதாகிய ஸ்வாதிஷ்டான சக்ரத்யானம் ஏற்படும். பிறகு 94வதாகிய மணிபூர சக்ரத்யானம் ஏற்படும். பிறகு 95வதாகிய அனுஹத சக்ரத்யானம் ஏற்படும்.

பிறகு 96வதாகிய விசுத்த சக்ரத்யானம் ஏற்படும். பிறகு 97வதாகிய ஆக்ஞா சக்ரத்யானம் ஏற்படும். பிறகு 98வதாகிய யோகத்யானம் ஏற்படும். பிறகு 99வதாகிய ஆனந்தம் உண்டாகும். பிறகு 100வது பதவியாகிய ஸ்ரீ நாராயணனின் அனுஸந்தானம் ஏற்படும். பிறகு 101வது பதவியாகிய நாராயண குணங்களின் சிரவணம். பிறகு 102வது பதவியாகிய நாராயணரின் நாமஸ்மரணம். பிறகு 103வது ஸ்தானமாகிய நாராயணரின் தாஸ்யத்வம். பிறகு 104வது பதவியாகிய நாராயணரின் பாத ஸேவனம். பிறகு 105வதாகிய நாராயணரின் அர்ச்சனை. பிறகு 106வது பதவியாகிய வைகுண்ட மார்க்கத்தில் செல்வது. பிறகு 107வது பதவியாகிய தத்வ ஸ்வரூபத்தைக் காண்பது. பிறகு 108வது பதவியாகிய வைகுண்ட ஸ்தானம் வந்துசேரும். சுபமஸ்து.

ஸ்ரீ கிருஷ்ணர்ப்பணமஸ்து.

ஸ்திரீ வித்யை.

இரு உத்தம ஸ்திரீகளின் சம்பாஷணை.

மகாபாரதம் வன பர்வத்திலடங்கிய துரௌபதி ஸத்யபாமா ஸம்வாத பர்வத்தில் சொல்லப்படுவதாவது:—

காம்யக வனத்தில் வசிக்கும் பாண்டவர்களைப் பார்க்க ஸ்ரீ கிருஷ்ணருடன் வந்த ஸத்யபாமை, பாண்டவர்களும் மார்க்கண்டேயாதி முனிவர்களும் ஸ்ரீ கிருஷ்ணரும் சேர்ந்து விசித்ரமான ஸத் கதைகளை பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஒருபுறம் துரௌபதியை அழைத்து பேசி வந்தாள். அச்சமயம் ஸத்யபாமை இவ்வாறு துரௌபதியைக் கேட்டாள்.

யக்ஞ வேதிகையில் ப்ராதுர்பவித்த குமாரியே! எனக்கு ஒரு சந்தேகமிருக்கிறது. அதைச் சொல்லேன். எனக்கோ ஒரு புருஷன் தான் இருக்கிறார். அவருக்கு திருப்தியாக நான் நடந்துகொள்ள முடிவ

தில்லை. உனக்கு புருஷர்கள் ஐந்து பேர் இருக்கின்றனர். அவர்கள் சாமானியமானவர்களா? நல்ல திடமான சரீரமுள்ளவர்கள். திக்பாலகர்களைப் போலொத்தவர்கள். மகா பராக்கிரமசாலிகள். அவர்கள் எல்லோரும் உன் சுவாதீனத்தில் இருக்கின்றனரே. ஒருதரம்கூட உன்னை அதட்டிப் பேசுவதில்லை. அவர்கள் எல்லோரும் எப்பொழுதும் உன் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கின்றனர். இதற்கு நீ என்ன செய்தாய்? ஸோமவார வ்ரதாதி விருதங்களைச் செய்தாயா? அல்லது எதாவது விசேஷ நதிகளின் ஸங்கமத்தில் ஸ்நானம் செய்தாயா? உபவாஸாதிகளைச் செய்தாயா? வசியம் செய்யும் மந்திரங்களை ஜபித்து அபூர்வ மருந்து போட்டாயா? அவர்களை சுவாதீனப்படுத்தும் எதாவது மையை கண்ணில் தீட்டிக்கொண்டாயா? அல்லது காம சாஸ்திரத்தில் சொன்னபடி எகாந்தத்தில் உபாயம் செய்து அவர்களை சுவாதீனப்படுத்திக்கொண்டாயா? அல்லது எப்பவும் அழியாத உன் யௌவன ப்ரபாவத்தில், அவர்கள் மயங்கிக் கிடக்கிறார்களா? ஜபமோ ஹோமமோ என்ன செய்கிறாய்? உண்மையைச்சொல். எனக்கு என் புருஷர் ஸ்ரீகிருஷ்ணர் ஸ்வாதீனமாகவேண்டும். என்று பிரசினம் செய்தாள்.

இதைக்கேட்டு துரௌபதி சொன்னதாவது: "ஸத்யபாமே! என்ன வார்த்தை சொன்னாய்? அயோக்ய ஸ்திரீகள் செய்வதை எல்லாம் நீ என்னை கேட்கிறாயே. இவ்வாறு நீ கேட்பதோ சந்தேகப்படுவதோ உனக்கு பொருத்தமாய் இல்லை. நீ மகா புத்திசாலி. மிகவும் படித்தறிந்தவள், ஸ்ரீ கிருஷ்ணருடைய பட்ட மகிஷி. அவருடைய பூர்ணமான விசுவாசத்திற்கு பாத்திரமாயும் இருப்பவள். இப்படியிருக்க நீ இவ்வாறு பிரச்னம் செய்யவேண்டியதில்லை. ஆயினும் நீ பிரச்னம் செய்துவிட்டதால் நான் பதில் சொல்கிறேன் கேள். ஒரு ஸ்திரீ தன் புருஷனை மந்திரம்செய்து ஸ்வாதீனம் செய்துகொள்வாள் என்பது ஸாத்யமன்று. தன்னை மயக்கமந்திரம் பண்ணுகிறாள் என்பது சிறிது தெரிந்துகொண்டால் அந்த புருஷன் அந்த ஸ்திரீயை தன்னிடம் நெருங்க விடுவானா? வீட்டில் நுழைந்த பாம்பைக்கண்டு அஞ்சுவதுபோல் அஞ்சுவான். ஸதிபதிகளுக்குள் எப்போதும் சமாதானமே இருக்காது. மனம் சமாதானமில்லாவிடில் சுகமேது? வசியமேது? மருந்திட்டால் புருஷனுக்கு பைத்தியம் பிடிக்கும். மகோதரம் வந்துசேரும். அது விஷமாக மாறி அவனைக் கொன்றுவிடும். உடம்பில் வைத்துதேய்த்தால் குஷ்டம் வரும், நரை எற்படும், புருஷத்தன்மை போய்விடும். இதனால் இவர்கள் புருஷர்களை கண் காது நாவுபோய் அலையும்படி செய்துவிடுகின்றனரே அல்லாது அவர்கள் நினைத்தபடி சுகத்தை பெறுவதில்லை. மகா பாபிகளான இவர்கள் பர்த்தாவுக்கு அதிகமான கெடுதலைத்தான் விளைவிக்கின்றனர்.

நான் என் புருஷர்களான பாண்டவர்களை எப்படி ஸ்வாதீனம் செய்துகொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லுகிறேன் கேள். என் புருஷர்களையும் அவர்களுடைய இதர பத்னிமார்களையும்கூட காமம் க்ரோதம் அகங்காரம் விட்டு வெகு ஜாக்கிரதையாய் எப்போதும் உபசரித்து வருகிறேன். நான் என் ஸபத்னிகளைக்கண்டு பொச்சரிப்புப் படுவதில்லை. அகந்தையைக்கொள்வதில்லை. மனதை திடப்படுத்திக் கொள்ளுகிறேன். என் புருஷர்களின் மனம் ஒரு வகையிலும் கோணாமல் அவர்களை சேவிப்பதிலேயே என் கவனத்தை செலுத்துகிறேன். பேசுவதிலோ பார்ப்பதிலோ நிற்பதிலோ உட்காருவதிலோ போவதிலோ என்ன தவறுதல் எற்படுமோவென்று எப்போதும் பயந்திருப்பேன். கண் திறந்து பார்த்த மாத்திரத்தில் சத்ருக்களை கொளுத்தும் என து புருஷர்கள் அதனால்தான் என்னிடம் கோபம் கொள்வதில்லை. தேவதையோ மனுஷ்யனோ கந்தர்வனோ யாராய் இருந்தாலும், அவன் அதிகமான அழகுள்ளவனாகவோ யௌவனமுடையவனாகவோ அலங்காரம் செய்துகொண்டவனாகவோ பணக்காரனாகவோ இருந்தாலும், என் புருஷர்களைத்தவிர்த்த இதரர்களிடம் என் மனம் செல்வதில்லை. அவர்களிடம் எனக்கு மதிப்பு எற்படுவதில்லை. என் புருஷன் வயலிலிருந்தாவது வனத்திலிருந்தாவது ஊரிலிருந்தாவது திரும்பி வீட்டுக்குவந்தால், அவரைக்கண்ட மாத்திரத்தில் எழுந்து மரியாதை செய்து, வந்ததைப்பற்றி சந்தோஷித்து, காலலம்ப ஜலம் கொடுத்து ஆஸனம் போட்டு மிகவும் உபசரிப்பேன். அவர் சாப்பிடாமலிருந்தால் நான் சாப்பிடமாட்டேன். அவர் குளிக்காமல் இருந்தால் நான் குளிக்கமாட்டேன். அவர் உட்காராதிருந்தால் நான் உட்காரமாட்டேன். அவர் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தால் நானும் வருத்தப்படுவேன். வீட்டு பாத்திரங்களை சுத்தமாய் தேய்த்து வைத்திருப்பேன். பலவகை அன்ன ஆகாராதிகளை தயாரித்து சரியான காலத்தில் அவர்களுக்கு சுயம் பறமாறுவேன். அவர்களின் பசி தாகம் முதலியவைகளை நான் சுயம் கவனித்து இராப்பகல் அவர்களுக்கு சுசுருஷை செய்வேன். வீட்டில் குப்பைக்கூளமில்லாமல் வெகு சுத்தமாய் வைத்திருப்பேன். தானியங்களை மூடி பந்தோபஸ்து செய்வேன். வெறும் பேச்சைப் பேசமாட்டேன். அகாரணமாய் சிரிக்கமாட்டேன். வீட்டு வாசலிலோ பின் தோட்டத்திலோ அதிகநேரம் நிற்கமாட்டேன். அடங்காச் சிரிப்பையாவது அடங்காக்கோபத்தை யாவது நான் எப்பொழுதும் கொள்ளமாட்டேன். கோபம் வாராதிருக்கவே நான் பாடுபடுவேன். ஸத்யத்திலேயும் பர்த்தாக்களுக்கு பணிவிடை செய்வதிலேயும் தான் நான் ஈடுபட்டிருப்பேன். பர்த்தா ஊரிலில்லாதிருந்தால் எனக்கு எதும் பிரியமாய் இருக்காது. தேய்த்து குளிக்க

மாட்டேன்; நல்ல வஸ்திரம் உடுக்கமாட்டேன். புஷ்பாதிகளால் அலங்காரம் செய்துகொள்ளமாட்டேன். அவர் வந்தபிறகு தான் என்முகம் தெளியும். அவருக்கு ப்ரியமானதுதான் எனக்கு ப்ரியமானது. அவருக்கு வேண்டாதது எனக்கும் வேண்டாதது. குடும்பப்பெண்கள் எந்த விதமாய் நடந்துகொள்ளவேண்டுமென்று என் மாமியார் குந்தியம்மாள் சொல்லியிருக்கிறாளோ, அதை எல்லாம் நான் செய்துகொண்டிருக்கிறேன். ஸன்யாசிகள் முதலானவர்களுக்கு பிக்ஷையளிப்பதும், வைச்வதேவம், பலிஹரணம், பித்ருச்ராத்தம், ஸ்தாலீபாகம், பர்வ சிராத்தங்கள், பூஜ்யர்களுக்குசெய்யும் பூஜைகள், மரியாதைகள், முதலானபர்த்தாவின் வைதிகமானகாரியங்கள் யாவையும் நான் நன்றாய் அறிவேன். அந்த காரியங்களை எல்லாம் நான் சுயம் கவனிப்பேன். இராப்பகல் அதையெல்லாம் சிறிதும் ஆலஸ்யமின்றி நான் நடத்திவைப்பேன். இதனால் ஸத்யசீலர்களும், ஸத்யம் தர்மம் இவைகளை சம்ரக்ஷிப்பவர்களும், பரமசாதுக்களும், கோபம்வந்தால் நல்ல பாம்புபோல் சீறுபவர்களுமான, என்புருஷர்கள், இதனால் என்னிடம் சந்தோஷப்பட்டிருக்கிறார்கள். இப்படித்தான் ஸ்திரீகள் தம்புருஷர்களை ஸேவிக்கவேண்டும். பர்த்தாவை ஸேவிப்பதைத்தவிர ஸ்திரீக்கு வேறு ஸநாதனதர்மமேதும் இல்லை. பர்த்தா தான் ஸ்திரீகளுக்கு தெய்வம். அவருக்கு அப்ரியமான காரியத்தை எப்போதும் செய்யலாகாது. நான் என் புருஷனை வார்த்தையாலும் சரி, அலங்காரத்தாலும் சரி, போஜனத்தாலும் சரி, எப்போதும் மீறுவதில்லை. அப்படியேத்தான் என் மாமியாரையும் அன்னபான அலங்காரங்களால் மிஞ்சுவதில்லை. என் மாமியாரின் எல்லா வேலைகளையும் நான் சுயம் செய்துவருகிறேன். குடிக்கத்தண்ணீர் வேண்டினாலும் நான் சுயம் கொண்டுவந்துகொடுப்பேன். என் அரண்மனையில் வேலைக்காரிகளுக்கு குறைவு இல்லை. உனக்கு தெரிவதற்காக ஸ்தூலமாக நான் ஓர் கணக்கைச்சொல்கிறேன் கேள். தர்மபுத்திரருக்கு மட்டில் ஏகதேசமாய் ஒரு லக்ஷம் வேலைக்காரிகள் இருக்கின்றனர். அவர்கள் அதிதிகளுக்கு தங்க பாத்திரங்களைப்போட்டு போஜனம் செய்விப்பவர்கள். இதைத்தவிர நாட்டியம் கானம் இவைகளில் தேர்ச்சிபெற்ற விலையுயர்ந்த ஆபரணங்களைப் பூண்ட வேலைக்காரிகள் ஒரு லக்ஷம் பேர் இருக்கின்றனர். தினந்தோறும் தர்மபுத்திரரின் அரண்மனையில் மட்டில் எண்பதினாயிரம் கிருகஸ்தாசிரமிகள் போஜனம் செய்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் முப்பது வேலைக்காரிகள் வீதம் வேலை செய்பவர்கள் இருக்கின்றனர். இதைத்தவிர எண்ணாயிரம் பிரம்மசாரிகளும் பத்தாயிரம் ஸன்யாஸிகளும் சாப்பிடுகின்றனர். இவர்கள் எல்லோருக்கும் போஜனமும் வஸ்திரமும் மற்றும் பல சௌகரியங்களும்

சரியாய் நடைபெறுவதை நான்தான் கவனிக்கிறேன். தர்மபுத்திரருக்கு மட்டில் ஏகதேசமாய் அவருடைய பரிவாரமாய் ஒரு லக்ஷம் யானைகளும் ஒரு லக்ஷம் குதிரைகளும் இருக்கின்றன. கோபாலர்கள் முதல் ராஜஸேவகர்கள் வரையிலுள்ள எல்லா வேலைக்காரர்கள் எல்லா வேலைக்காரிகளின் பெயரையும் அடையாளத்தையும் நான்தான் அறிவேன். நான்தான் இவர்கள் எல்லோருக்கும் வேலையைக்கொடுத்து வாங்குகிறேன். இன்னார் இந்த வேலையைச்செய்தார்கள், இன்னார் இந்த வேலையைச் செய்யவில்லை என்பதையும் நான் ஒருவளே தான் அறிவேன்; அவர்களின் சௌக்யத்தை எல்லாம் நான்தான் கவனிக்கிறேன். இதுமட்டிலல்ல, பாண்டவர்களின் பொக்கிஷத்தில் இவ்வளவு சொத்து இருக்கிறதென்பது எனக்குத்தான் தெரியும். பாண்டவர்களின் வருமானம் இவ்வளவு, சிலவு இவ்வளவு, என்பதை விவரமாய் நான் ஒருவள் தான் அறிந்தவள். சிலவை குறைப்பதில் கவனத்தை செலுத்துவேன். ஒருக்காலும் வருமானத்திற்கு அதிகமாய் சிலவுசெய்யமாட்டேன். இவ்வாறு என்னிடம்தான் எல்லா குடும்பகாரியங்களையும் ஒப்படைத்து பாண்டவர்கள் ராஜ்ய பரிபாலனத்திலும் தர்ம பரிபாலனத்திலும் ஈடுபட்டிருக்கின்றனர். எனக்கு இந்த வேலையில் பகல் இரவு ஆவதோடு தெரிகிறதில்லை. எல்லோர் எழும் முன் நான் எழுந்திருக்கிறேன். எல்லோரும் தூங்கிய பிறகு நான் தூங்குகிறேன். இவ்வாறு என் புருஷர்களை ஸேவித்து அவருடைய ப்ரீதியை ஸம்பாதித்திருக்கிறேனல்லாது அயோக்ய ஸ்திரீகளின் காரியங்களை நான் ஒரு போதும் செய்வதில்லை. பர்த்தா ரகஸியமில்லாத வார்த்தைகளை சொன்னபோதிலும் நான் அவைகளை இதராளிடம் சொல்லமாட்டேன். இயற்கையாகவே அன்பு புருஷர்களிடம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் நான் அவர்களிடம் எனக்கு அன்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களும் நான் அவர்களிடம் அதிக விசுவாசம் கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொள்ளும்படி எல்லாவகையிலும் நான் நடந்து கொள்கிறேன். நீ இப்படியே இரு. ஸ்பத்னீ ஜனங்களிடம் உன் புருஷனிடமுள்ள விசுவாசத்தையே காட்டு. அவர்கள் உன்னை துவேஷித்தாலும், உன் பர்த்தாவை சந்தோஷப் படுத்த வேண்டுமென்ற ஒரே உறுதியால் நீ துவேஷிக்காதே. ப்ரத்யும்னன் ஸாம்பன் முதலான வயது வந்த உன் பிள்ளைகளோடும் கூட தனித்திருந்து பேசாதே. அயோக்ய ஸ்திரீகளை கண்ணெடுத்துப் பார்க்காதே என்று துரௌபதி பர்த்தாவை சுவாதீனப் படுத்தும் வழியை விஸ்தாரமாய் அறிவித்தாள். உலகில் இதை பிரசித்தப் படுத்தவே இவ்வாறு தான் பிரசினம் செய்ததாய் ஸத்யாபாமை சொல்லி, துரௌபதியின் வித்யா சாமர்த்தியத்தை மிகவும் புகழ்ந்து, கொண்டாடி அவளைப்ரதக்ஷிணம் செய்து அவளிடம் வைத்த தன் மதிப்பை வெளிக்காட்டி ஸ்ரீகிருஷ்ணனுடன் ரதமேறி துவாரகை சென்றாள்.

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 68ம் பக்கம் தொடர்ச்சி)

201. பத்மநாப: (ஓம் பத்மநாபாயநம:) சதுர் முகனை நாபியிற் கொண்டவர். பகவத் பக்தர்களை பிரகாசிக்கச் செய்கிறவர். பத்மம் போல் வர்த்துளமான நாபியுள்ளவர். நாபியில் பத்மத்தைக் கொண்டவர் ஹிருதய கமலத்தின் மத்தியில் பிரகாசிப்பவர்.

202. ப்ரஜாபதி: (ஓம் ப்ரஜாபதயே நம:) உத்தமமான ஸ்தோத்திரம் செய்பவர்களுக்கு ஆனந்தத்தை அளிப்பவர். மேலான த்யானம் செய்பவர்களுக்கு ஆனந்தத்தை அளிப்பவர். பிரம்மாதி ப்ரஜைகளுக்கு அதிபதி. ப்ரஜைகளுக்குத் தந்தை.

203. அம்ருத்யு: (ஓம் அம்ருத்யவே நம:) மரணமில்லாமல் செய்பவர். மிருத்யுவைத் தடுப்பவர். மிருத்யுவுக்கும் மிருத்யுவாய் இருப்பவர்.

204. ஸர்வத்ருக் (ஓம் ஸர்வத்ருசே நம:) ஸர்வத்தையும் காண்பவர். எல்லாவற்றையும் எப்போதும் நன்றாய்ப் பார்த்து அறிபவர்.

205. ஸிம்ஹ: (ஓம் ஸிம்ஹாய நம:) பாவங்களைப் போக்குபவர். பாபிகளை அழிப்பவர். நரஸிம்ஹாவதாரம் செய்தவர்.

206. ஸந்தாதா (ஓம் ஸந்தாத்ரே நம:) ஜகத்துக்கு தாரணம் போஷணம் செய்பவர். ஸ்ரீராமாவதாரகாலத்தில் கௌதமருக்கும் அகல்யைக்கும் ஸந்திப்பு செய்பவர். பகவத் பக்தர்களை தம்மிடம் சேர்ப்பிவிப்பவர். கர்மபலன்களை சேர்ப்பிவிப்பவர்.

207. ஸந்திமான் (ஓம் ஸந்திமதே நம:) ஸ்ரீராமாவதாரம் முதலிய காலங்களில் ஸுக்ரீவன் விபீஷணர் முதலியவர்களுடன் சந்திப்பை அடைந்தவர்.

208. ஸ்திர: (ஓம் ஸ்திராய நம:) அநாதிகாலமாய் ஒரே நிலையாய் இருப்பவர். விகாரமில்லாதவர்.

209. அஜ: (ஓம் அஜாய நம:) பிறப்பில்லாதவர். எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

210. துர்மர்ஷண: (ஓம் துர்மர்ஷணாய நம:) தாக்குதற்கு முடியாதவர்.

211. சாஸ்தா (ஓம் சாஸ்த்ரே நம:) ஜகத்தை ஆக்ஞாபித்து நடத்துகிறவர். விரோதிகளான தைத்யர்களை சிக்ஷிப்பவர்.

212. விச்ருதாத்மா (ஓம் விச்ருதாத்மனே நம:) ப்ரஸித்தமான ஸ்வரூபமுடையவர். வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஸத்யக்ஞானாதி ஸ்வரூபங் கொண்டவர்.

213. ஸுராரிஹா (ஓம் ஸுராரிக்னே நம:) தேவர்களுக்கு சத்ருக்களான அஸுரர்களை ஸம்ஹாரிப்பவர். ஸம்ஹாரிக்கப் போகிறவர்.

214. குரு: (ஓம் குரவே நம:) எல்லா வித்தைகளையும் உபதேசிப்பவர், லக்ஷ்மி பிரம்மாவுக்கு குருவானவர்.

215. குருதம: (ஓம் குருதமாய நம:) விசேஷமான குருவானவர். தேவர்களுடைய குருவுக்கும் குருவானவர். ஸமஸ்த ஜனங்களுக்கும் மூலபூதமான குருவானவர். பிரம்மாதி குருமார்களால் விரும்பப்படுகிறவர். குருவான பிருஹஸ்பதிக்கு விசாலமான க்ஞானத்தைக் கொடுத்தவர். குருவாயும் மிக்க வ்யாப்தராயுமுள்ளவர்.

216. தாம (ஓம் தாம்னே நம:) தேஜோரூபியானவர்.

217. ஸத்ய: (ஓம் ஸத்யாய நம:) ஜகத்தை ஸிருஷ்டிப்பவர். ஜகத்தின் ஜன்மாதிகளுக்கு காரணமாய் இருப்பவர். பிராணிகளுக்கு ஜீவனத்தை அளிப்பவர். பிராணிகளுக்கு இருப்பை அளிப்பவர். பிராணிகளுக்கு கதியை அளிப்பவர். துக்கமில்லாததாயும் நித்யமாயும் நிரதிசயமானதுமான ஆனந்தத்தை அநுபவிப்பவர். ஸர்வோத்தமராயும் பூர்ணராயும் ஸர்வக்ஞராயுமிருப்பவர். மரணமில்லாதவர்களான முக்தர்களை நியமனம் செய்பவர். நிலையைத் தருபவராயும் அடக்குபவராயுமிருப்பவர்.

218. ஸத்யபராக்ரம: (ஓம் ஸத்யபராக்ரமாய நம:) ஸத்யமான பராக்கிரம முள்ளவர். ஸத்தியத்தில் பரனான பலி சக்ரவர்த்தியின் தலையின் மீது த்ரிவிக்ரமாவதாரத்தில் நன்றாய் பாதத்தால் ஆக்ரமித்தவர். சத்யர்களெனப்படும் வாயு பகவான் சதுர் முகப்ரம்மா சூரியன் இவர்களுக்கு பராக்கிரமத்தை அளிப்பவர்.

219. நிமிஷ: (ஓம் நிமிஷாய நம:) நிமி சக்ரவர்த்திக்கு பலத்தை அளித்தவர். யோக நித்திரையில் கண்களை மூடியிருப்பவர். நியாமகராயிருப்பவர். நிமிஷமாகிற கால அளவைக் கொண்டவர். அதிகமாய் அஸுரர்களிடம் விரோதம் கொண்டவர்.

220. அநிமிஷ: (ஓம் அநிமிஷாய நம:) அநன் எனப்படும் வாயுபகவானை உபாஸிப்பவர்களுடன் நன்கு சேருபவர். எப்போதும் பக்தர்களை தயையுடன் பார்ப்பவர்.

221. ஸ்ரக்வீ (ஓம் ஸ்ரக்விணே நம:) வைஜயந்தி முதலான ஹாரங்களை மார்பில் தரித்தவர்.

222. வாசஸ்பதி: (ஓம் வாசஸ்பதயே நம:) வேதவாக்யங்களுக்கு அதிபதியானவர். வித்தைக்கு அதிபதி.

223. உதாரதீ: (ஓம் உதாரதியே நம:) உத்க்ருஷ்டமான பாரியாளான மகாலட்சுமிக்கு ஞானத்தை அளித்தவர். எல்லா விஷயத்திலும் உத்கிருஷ்டமான ஞானம் படைத்தவர். நிர்தோஷமான க்ஞானமுள்ளவர்.

224. அக்ரணீ: (ஓம் அக்ரண்யே நம:) பக்தர்களை முன்னூடி நடத்துகிறவர்: பக்தர்களை மோக்ஷத்திற்கு முன்னூடி கொண்டு போகிறவர்.

225. க்ராமணீ: (ஓம் க்ராமண்யே நம:) பிராணிகளின் சமூகத்தை நடத்துகிறவர்.

226. ஸ்ரீமான் (ஓம் ஸ்ரீமதே நம:) நித்யஐசுவரியம் படைத்தவர்.

227. ந்யாய: (ஓம் ந்யாய நம:) யுக்தத்தைச் செய்கிறவர். ஸம்பூர்ணமான லாபமுமடையவர்.

228. நேதா (ஓம் நேத்ரே நம:) அவர்வர்களுக்கு உகந்த பலனுக்கு நியாமகராயிருப்பவர்.

229 ஸமீரண: (ஓம் ஸமீரணாய நம:) வாயுபகவானுக்கு ஸுகத்தை அளிப்பவர். மகாலட்சுமியின் ஸ்தோத்திரத்தை நன்ருய்க் கொண்டவர். நன்ருய் பிரேமிப்பவர்.

230. ஸஹஸ்ரமூர்த்தா (ஓம் ஸஹஸ்ரமூர்த்னே நம:) ஆயிரம் தலைகளை யுடையவர். ஆயிரக்கணக்கான பாபங்களைக் கொண்டிருப்பினும் பக்தனுயிருப்பவனை தரிப்பவர்.

231. விச்வாத்மா (ஓம் விச்வாத்மனே நம:) ஸகல ஜகத்தையும் நியமிப்பவர்.

232. ஸஹஸ்ராக்ஷ: (ஓம் ஸஹஸ்ராக்ஷாய நம.) ஆயிரம் கண்களைக் கொண்டவர். ஆயிரம் இந்திரியங்களையுடையவர்.

233. ஸஹஸ்ரபாத் (ஓம் ஸஹஸ்ரபாதே நம:) ஆயிரம் கால்களையுடையவர்.

234. ஆவர்த்தன: (ஓம் ஆவர்த்தனாய நம:) நன்ருக உள்ள ப்ரவிருத்தியுடையவர். நதி முதலியவைகளிலுள்ள ஜலத்தின் சுழலை நடத்துகிறவர்.

235. நிவிருத்தாத்மா (ஓம் நிவிருத்தாத்மனே நம:) ப்ரளயகாலத்தில் ஜீவர்களைக் கொல்கிறவர்.

அநிவ்ருத்தாத்மா (அநிவிருத்தாத்மனே நம:) திரும்புதலில்லாத சரீரமுள்ளவர்.

236. ஸம்விருத: (ஓம் ஸம்விருதாய நம:) நன்ருய் குணங்களால் சூழப்பட்டவர்.

237. ஸம்ப்ரமர்த்தன: (ஓம் ஸம்ப்ரமர்த்தனாய நம:) அஸுரர்களை நன்ருய் ஸம்ஹரிப்பவர்.

238. அஹ: ஸம்வர்த்தக: (ஓம் அஹஸ்ஸம் வர்த்தகாய நம:) பகலை நன்ருய் நடத்துகிறவர். பக்தர்களை கைவிடாதவரும் ஜகத்தை நடத்துகிறவருமாயிருப்பவர். பகல் முதலிய கால சக்ரத்தை நடத்துகிறவர்.

239. வன்ஹி: (ஓம் வன்ஹயே நம:) ஜகத்தை வஹிப்பவர்.

240. அநில: (ஓம் அநிலாய நம:) ஜகத்தை ஜீவிக்கும்படி செய்பவர். ஒன்றையும் ஆதாரமாக இல்லாதவர். ஒன்றையும் சாசுவதமானஸ்தானமாக இல்லாதவர். அநாதியாய் இருப்பவர்.

(தொடரும்)

குறிப்பு.

முன் இதழ் **3**வது சஞ்சிகையின் **67**வது பக்கத்தில் கண்டுள்ள **192**வது நாமம் கோவிந்த என்பதின் பொருள்களோடு அடியிற் கண்டவைகளையும் சேர்த்துப் படிக்கவும். [ப-ர்]

கோவிந்த: (ஓம் கோவிந்தாய நம:) அடக்கியாள பூமியை அடைபவர். வேதத்தை அதனுல் நிரூபிக்கப்பட அடைபவர்.

உபேந்த்ரர் என்ற ரூபத்தால் ஸ்வர்கத்தை அடைபவர். கோக்களாகிய இந்திரியங்களால் அறியப்படாதவர். பசுவின் அதிபதி. பசுவைப்போல் தன் சுவாதீனமாயிருக்கும் ப்ரஜைகளை சதுர்முகனிடம் சேர்ப்பிப்பவர். ஸ்தோத்திரத்தை அடைபவர், பசுக்களைப் போலுள்ள சத்ருக்களை அதிகமாய் அடக்குபவர். திரவமாய் இருக்கும் ஸோமரஸத்தை பானம் செய்பவர். பக்தர்கள் அளிக்கும் அன்னத்தால் ஸந்தோஷமடைகிறவரும் சத்ரு நகரங்களை அதிகமாய் நாசம் செய்கிறவருமாயிருப்பவர். வேதங்களை மத்ஸ்யாவதாரகாலத்தில் ஹயக்ரீவாஸுரனை ஸம்ஹரித்து சதுர்முகனுக்கு சேர்ப்பிப்பவர். ஸ்வர்கத்தில் இச்சையுடன் காம்யகர்மங்களைச் செய்பவர்களுக்கு நச்வர பலமாயுள்ள ஸ்வர்கத்தை சேர்ப்பிப்பவர். சந்திரனிடமுள்ள அந்தர்யாமி ரூபமான ஹயக்ரீவ ரூபத்தையும் ஹம்ஸரூபத்தையும் தன்வந்தரி ரூபத்தையும் யாதொரு பேதமுமில்லாமல் சேருபவர். ஸ்ரீராமாவதார காலத்தில் கௌ: எனப்படும் முக்யப்ராணரான ஹனுமாரை சீதையைத் தேடச்சொல்ல அடைபவர். ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் முக்யப்ராணரான பீமசேனரை உத்தேசித்து கௌரவர்களின் ஸைனியத்தை நாசம் செய்பவர். ஸ்ரீவேதவியாஸாவதாரத்தில் முக்யப்ராணரான மத்வாசாரியாரை உத்தேசித்து அபசித்தாந்தங்களை எல்லாம் அதிகமாய் கண்டனம் செய்பவர். காயத்ரீ எனப்பெயர்கொண்ட நாராயணராய் சூரியனை ஜகத்தின் ஸம்ரக்ஷணைக்காக அடைபவர்.

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீமத்வ விஜயம்.

(முன் 72ம் பக்கம் தொடர்ச்சி)

72. பகவானுடைய ரூபம் எல்லா வேதங்கள் சாஸ்திரங்கள் முதலியவைகளால் நிரூபிக்கப்படும் கணக்கிடமுடியாதவைகளும் ஒவ்வொன்றும் அநந்தமானவைகளுமான க்ஞானம் ஆனந்தம் முதலான அவருடைய குணங்களுக்கும், கால் முதல் தலைவரையிலுள்ள அவருடைய எல்லா அவயவங்களுக்கும், மத்ஸ்யம் கூர்மம் முதலான எல்லா அவதாரங்களுக்கும் ஸம்பூர்ணமாய் ஐக்யமடைந்திருக்கிறது. அக்ஞானம் அஸ்வாதந்திரியம் முதலான தோஷங்களின் லேசமும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது.

73. இந்த பகவானுடைய ரூபத்தை உபாஸிக்க அருகமாயுள்ளவர்களான மனுஷ்யாள் முதற்கொண்டு பிரம்மா வரையிலுள்ளவர்களின் க்ஞானம் பக்தி முதலான யோக்யதையின் ஏற்றத்தாழ்வுக்குத் தகுந்தபடி இரண்டு கால்கள் முதற்கொண்டு கணக்கற்றதான அநந்தமான கால்கள் வரையிலுள்ள கால்களைக் கொண்டதாயும், அந்தந்த ரூபத்திற்கு தகுந்தபடி ஸௌந்தர்யமுள்ளதாயும் பரிபூர்ணமான க்ஞானம் ஆனந்தம் முதலான குணங்களுள்ளதாயுமுள்ள தலை, கை, கண், காது, மூக்கு, முதலான இதர அவயவங்களுடனும் காணப்படுவதாய் இருக்கிறது.

74. பகவானுடைய ஓர் ரூபம் உதிக்கும் சூரியனுடைய ஒளியைப் போலிருக்கிறது. ஓர் ரூபம் ஸுவர்ணம் போல் சிவந்திருக்கிறது. ஓர் ரூபம் உத்தம முத்துமாலையைப் போல் மனதைக் கவரும்படியான வெண்மையாயிருக்கிறது. ஓர் ரூபம் இந்திர நீலமாணிக்கம் போல் நீலவர்ணமாயிருக்கிறது. ஓர் ரூபம் நானு நிறங்களுடன் இருக்கிறது. ஓர் ரூபம் கோரோசனையைப் போன்ற வர்ணத்துடன் இருக்கிறது. மற்றொரு ரூபம் பச்சை நிறமாய் இருக்கிறது. க்ஞானாநந்தாத்மகமாகவும் நல்ல வாசனையுடன் கூடியிருப்பதாகவுமுள்ள அழகிய ரூபமும் அதன் காரியமும் கொண்டிருக்கிறது. இப்பேர்ப்பட்டதான தன் ரூபத்தை முக்தர்களுக்கு அந்த வைகுண்டத்தில் பகவான் காட்டுகிறார்.

75. மூவுலகிலும் அற்புதத்திலும் சிரேஷ்டமான அற்புதங்கள் எவை உண்டோ அவைகளை விட மிகவும் அதிகமான அற்புதமானதாயும் ஒவ்வொரு க்ஷணமும் புதிது புதிதாய் காணப்படுவதாயும் அழகின் ஸாரத்தை மட்டில் பிரதானமாய்க் கொண்டதுமான மேற்கண்ட லக்ஷ்மீபதியான நாராயணரின் மூலம் இந்த வைகுண்டத்தில் முக்தர்களை எப்போதும் ஆனந்தப் படுத்துகிறது.

76. முன்னாடி யாகயக்ஞாதிகளைச்செய்துவந்து அந்தபழக்கொண்ட சில முக்தர்கள் விதியினால் கட்டுப்படாதவர்களாயிருப்பினும், எப்போதும் பூர்ணமான ஆனந்தம் கொண்டவர்களாயிருப்பினும், ஆனந்தம் மேலிட்டு பகவானுடைய ப்ரீதிக்காக இந்த வைகுண்டத்தில் யாகயக்ஞாதிகளைச் செய்துகொண்டு, யக்ஞநாமகரான நாராயணனை ஆராதிக்கின்றனர். வைகுண்டம் வருவதற்கு முன்பு பாடப்ரவசனம் புராணம் ஹரிகதை முதலியவைகளைச் சொல்லி பழக்க மடைந்திருந்த முக்தர்கள், அந்த பழக்கத்தால் இங்கும் முக்தர்களான ஞானிகளின் நடுவில் மேற்கூறிய பாடப்ரவசனாதிகளைச் சொல்லிக் கொண்டு பகவானுடைய மாகாத்மியத்தைச் சொல்லுகின்றனர். அழகான பாட்டுகளைப் பாடிக்கொண்டு பகவானை துதித்துக்கொண்டிருந்தவர்கள் இந்த வைகுண்டத்திலேயும் நல்ல பாட்டுகளைபாடிக் கொண்டு பகவானை துதிக்கின்றனர்.

77. வைகுண்டத்தில் உள்ள முக்தர்களின் அழகின் சிறப்பும் செல்வத்தின் சிறப்பும் மிக ஆச்சரியானது. மனதால் எண்ணவும் வாயால் சொல்லவும் வொண்ணாதது. வைகுண்டரான நாராயணனை ப்ரத்யக்ஷமாய் காணப்பெறுவதாயும், மகாலட்சுமி என்ன, முக்த கருடன்கள் என்ன, முக்த சேஷன்கள் என்ன, முக்த சதுர்முக பிரம்மன்கள் என்ன, முதலான எண்ணிறந்த தேவர்களால் கொண்டாடப்படும் இப்பேர்ப்பட்ட பகவானுடைய லோகமாகிய வைகுண்டத்தில் இப்பேர்ப்பட்ட மகிமை பொருந்தியிருப்பது முற்றிலும் சம்பாவிதமே.

78. வைகுண்டத்தில் வசிக்கும் சிறிதும் துக்கமில்லாத பரமாநந்தமே ஸ்வரூபமாகக் கொண்ட முக்தனொருவன் எதை எதை அனுபவிக்க விரும்புகிறானோ, அந்த அபேக்ஷை எல்லாமே எவ்வகை ப்ரயத்தனமு மன்னியில் எண்ணியவுடனே ஏற்படுகிறது என்று வேதங்களும் முக்தியின் ஸ்வரூபத்தை முக்தர்களுக்கும் அறிவித்துக் கொடுக்கின்றன என்றால் இந்த செல்வத்தை விட அதிகமான செல்வம் வேறுயாது உண்டு. எதும் இல்லை.

79. ஸகல ஜீவர்களுக்கும் உத்தம குருவான ஸ்ரீமத்வாசாரியாராகிய ஸ்ரீ ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் இயற்றிய

பிரம்ம சூத்திர பாஷியத்தின் கம்பீரமான அர்த்தத்தை, அவரவர்களின் கல்வித் திறத்துக்குத் தகுந்தபடி, குருமூலமாய் அடிக்கடி சிரவணம் செய்தோ, அடிக்கடி வாயால் சொல்லியோ, அடிக்கடி மனதால் இன்னது சரி இன்னது சரியல்லவென்று விசாரம் செய்தோ; அதிகாரியாயிருப்பவர்கள், அவர்கள் தேவர்கள் முதற்கொண்டு மனுஷ்யர்கள் வரையிலுள்ளவர்களாயினும் சரியே இதனால் மகிழ்ந்த மோக்ஷத்தைத் தரும் ஸ்ரீ நாராயணருடைய அனுக்ரஹத்தால் மேற்சொல்லிய ஸர்வ ஸம்பத்துக்களடைந்த வைகுண்டத்தை எப்போதும் அடைகின்றனர்.

கவிகுலதிலகராயும் ஸ்ரீத்ரிவிக்ரம பண்டிதாசாரியாரின்
குமாரருமான ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
ஸ்ரீ மத்வ விஜய மகாகாவியத்தில் பதினோராவது
ஸர்க்கம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே.

(முன் 85ம் பக்கம் தொடர்ச்சி.)

இந்த விரிவான பரிசீலனையைக்கொண்டு வால்மீகியால் கூறப்பட்டிருக்கும் ராமாதிகளின் ஜனனக்கிரமமும் நக்ஷத்திரக்கிரமமும் பரதன் ஜேஷ்டன் என்பதை ஸாதிப்பதாய் ஆகாது என்று வியக்தமாய் ஏற்படுகிறது. இனி நாமகரணப்ரகரணத்தைப் பற்றி யோசிப்போம். வசிஷ்டர் கிரமமாய்செய்த நாமகரணப்ரகரணத்தையும் ஜனனப்ரகரணத்தை சொன்னமாதிரி வால்மீகி உக்திசௌகரியத்திற்காக சேர்த்து சொல்லப்பட்டதாய் நிச்சயிக்கலாம். ஒன்றிரண்டு ஸ்தலங்களில் பரதனின் பெயர் முன்னாடி சொல்லப்பட்டிருப்பதற்கு காரணம் பரதோ பக்தி பரித: என்று ராமரிடம் இணையற்ற பக்திமானென்பதால் என்று நிச்சயிக்கவேண்டியதாகும். ஒன்றிரண்டு இடங்களில் வால்மீகி லக்ஷ்மணனை பரதானுஜ: பரதனுக்கு தம்பி என அழைத்திருக்கிறாரே என்று சம்சயம் ஏற்படலாம். இவ்வாறு லக்ஷ்மணனைபரதானுஜன் என்று சில இடங்

களிலும், பரதாக்ரஜன், ராமானுஜன் என்று சில இடங்களிலும் வால்மீகி உபயோகித்திருப்பதால் எந்த இடத்தில் முக்யார்த்தத்தை கல்பிக்க வேண்டும் என்றும் எந்த இடத்தில் கௌணார்த்தத்தை கல்பிக்க வேண்டும் என்றும் நாம் நிச்சயம் செய்துகொள்ளவேண்டும்.

லக்ஷ்மணன் பரதனுக்கு தமையன் என்று பலவகை ஆதாரங்களால் ஏற்பட்டிருப்பதால், இதற்கு விரோதமாக லக்ஷ்மணனை பரதானுஜ: என்று சொல்லப்பட்டிருக்கும் சிலஇடங்களில், பரதானுஜ: என்பதற்கு அமுக்ய மான கௌணார்த்தத்தை கல்பித்து, பரத: அநுஜ: யஸ்ய என்று பஹுவ்ரீஹி, ஸமாஸம்செய்து பரதனை தம்பியாகக்கொண்டவனென்று அர்த்தம்கொடுத்து, விரோதத்தை பரிகாரம் செய்துகொள்ளவேண்டும்; அப்படிச்செய்யாவிடில் சதுர்முகனின் வரனைப்பெற்ற வால்மீகி மகா முனிவர், லக்ஷ்மணனை பல இடங்களில் பரதனுக்கு ஜ்யேஷ்டனென்றும் சில இடங்களில் தம்பி என்றும் சொன்ன விவஸ்தைகெட்ட பித்தன் என்று ஏற்படும். முக்யார்த்தம் சொல்ல பிரபலமான பாதகமிருந்தால் தான் அமுக்யமான கௌணார்த்தத்தை கல்பிக்கவேண்டும். பாதக மில்லாவிடில் அமுக்யமான கௌணார்த்தத்தை கல்பிக்கலாகாது. முக்யார்த்தத்தைத்தான் கொள்ளவேண்டும். லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனென்று ஏற்பட்டதால், அதை அனுஸரித்து பரதாக்ரஜன் என்பதற்கு (பரதஸ்ய அக்ரஜ: பரதாக்ரஜ:) பரதனுடைய தமையன் என்றும் ராமானுஜன் என்பதற்கு (ராமஸ்ய அநுஜ: ராமானுஜ:) ராமனுடைய தம்பி என்றும் தத்புருஷத்தில் ஸமாஸம் செய்வது முக்யார்த்தமாகும். சாமானியமாய் சுலோகங்களுக்கு முக்யார்த்தத்தைக்கொண்டு தான் அர்த்தம் செய்யப்படவேண்டும். அந்த அர்த்தத்தில்தான் சுகாசாரி யாளும் தன் அபிப்ராயத்தை அறிவித்திருக்கிறார்.

ஸ்ரீமத் பாகவதம் நவம ஸ்கந்தம் 8வது அத்யாயம் 86வது சுலோகத்தில் அறிவிப்பதாவது:— குர்வர்த்தே த்யக்த ராஜ்ய: வ்யசரதனு வனம் பத்மபத்ப்யாம் ப்ரியாயா: பாணிஸ்பர்சாக்ஷமாப்யாம் ம்ருஜித பதிருஜ: யோ ஹரீந்த்ராநுஜாப்யாம்| வைரூப்யாத் சூர்பணக்யா: ப்ரிய விரஹருஷாரோபித ப்ரூவிஜ்ரும்பத்ராஸ்தாப்தோ பத்தஸேது: கலதவ தஹன: கோஸலேந்த்ரோவதாந்ந:|| குருவான ஸ்ரீராமச்சந்திரரின் பொருட்டு ராஜ்யத்தை விட்டு ஒவ்வொரு வனத்திலும் சஞ்சாரம்செய்து கையால் தொடுதலையும் பொறுக்கமாளாத அவ்வளவு கோமலமான தாமரைக்கால்களுடனுள்ள சீதையால் எங்கும் நடக்கச்செய்து, மார்க்க சிரமத்தைப்போக்கி, ஹரீந்த்ரனை சுக்ரீவனோடும் அநுஜனை லக்ஷ்மணனோடும் சேர்ந்துபோய், காது மூக்கறுத்து விரூபம் செய்யப்பட்டதன் நிமித்தம் சீதையின் பிரிதல் ஏற்பட்டு, அந்த கோபத்தால் புருவத்தை

நெற்றியில் ஏற்றி நெறித்து கோபத்தை காட்டவும் அதற்கு பயந்த ஸமுத்ரராஜன் கொடுத்த இடத்தில் ஸேது பந்தனம் செய்து ராவணாதி அயோக்யர்களுக்கு காட்டுத்தீயைப்போலெரித்த கோஸல சக்ரவர்த்தி யான ஸ்ரீராமச்சந்திரன் என்னைக் காப்பாற்றட்டும் என்றார். இதில் லக்ஷ்மணனை ராமருக்கு அனுஜர் என்று முக்யார்த்தத்தைக்கொண்டு ஸ்ரீசுகர் அறிவித்திருப்பது குறிப்பிடத்தகுந்தது. இதற்கடுத்த 93வது சுலோகத்திலேயும் "ப்ராத்ரா அவனே க்ருபணவத் ப்ரியயா வியுக்த:" என்று முக்யார்த்தத்தில் லக்ஷ்மணன் ராமருக்கு ப்ராதா என்று உபயோகித்துள்ளார். இத்யாதி அநேக காரணங்களைக்கொண்டு ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் மட்டில் காணப்படுவதாயுள்ள பரதன் லக்ஷ்மணனுக்கு ஜ்யேஷ்டன் என்று அறிவிப்பதாய் தோன்றும் வெகு ஸ்வல்ப பிரமாணங்களும் அதை ஆதரிப்பதாய் இல்லை என்று சித்தமாகிறது.

ஆக லக்ஷ்மணன்தான் பரதனுக்கு ஜ்யேஷ்டன் என்று ஸ்ரீ பகவத் பாதாள் இயற்றிய ஸ்ரீமகாபாரத தாத்பரிய நிர்ணயத்திலும் ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய ஸங்கிரஹ ராமாயணத்திலும் ஸ்ரீவால்மீகி யின் ஸ்ரீமத் ராமாயணத்திலும் அறிவிக்கப்பட்டிருப்பதாய் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. இவைகளுக்கு வ்யாக்யானம் செய்த நம்மவர்கள் எல்லோரும் இவ்வாறே அபிப்ராயப்பட்டிருக்க ஸ்ரீபகவத்பாதாளின் விசேஷ பக்தரான ஸ்ரீவாதிராஜஸ்வாமிகள் மட்டில் பரதன் தான் லக்ஷ்மணனுக்கு ஜ்யேஷ்டன் என்று ஸ்ரீதாத்பர்ய நிர்ணயத்தின் அவருடைய வியாக்யானத்தில் சொல்லவில்லை என்றும் சொல்லியிருக்க முடியாது என்றும் வெகுவிஸ்தாரமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பரதன் ஜ்யேஷ்டன் என்பதற்கு ஸ்ரீதாத்பர்ய நிர்ணயத்திலேயும் ஸங்கிரஹ ராமாயணத்திலேயும் ஆதாரமில்லை என்று சொல்லப்பட்டது. ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தில் மட்டில் சொல்லப்பட்டிருப்பதாய் தோன்றும் பிரமாணங்களும் பரதன் ஜ்யேஷ்டன் என்பதை நிரூபிப்பதில்லை என்று வால்மீகியின் வாக்யங்களின் விரோதத்தைப் பரிகாரம் செய்து, நாம் எடுத்துச் சொன்ன விமரிசைகளுக்கு ப்ராசீனர்களுடையவும் நவீனர் களுடையவும் சம்மதியும் எடுத்துக் காட்டப்பட்டது. இதனால் லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே என்பதுதான் நம்மவர்களாலும் இதரர் களாலும் ஒப்புக்கொள்ளத் தகுந்ததேயாகும். சுகாசாரியாளின் அபிப் பிராயம் இதுவே ஆகும். அதனால் தான் ஸ்ரீமத்பாகவதத்தில் சூரிய வம்சாவளியைச் சொல்லும்பொழுது ஜ்யேஷ்டக்ரமத்தை அனுசரித்து ராமர் லக்ஷ்மணர் பரதன் சத்ருக்னர் என்றே அறிவித்துள்ளார். அதற்கு வியாக்யானம்செய்த ஸ்ரீ விஜயத்வஜதீர்த்தரும் லக்ஷ்மணாதிஷு என்று லக்ஷ்மணர் ஜ்யேஷ்டர் என்பதைத்தான் விவரித்திருக்கிறார். ஸ்ரீ

நாராயணபண்டிதாசாரியார் மத்வ விஜயத்திலேயும் "புஜகேசவரோபி புவனேச்வரப்ரிய: ஸமஜன்யதாரிதா ஜன்ம புவ்யபூத்" என்று லக்ஷ்மணன் ஜேஷ்டன் என்பதை அறிவித்துள்ளார். இதற்கு வியாக்யானம் செய்த பரமப்ராமாணிகரான சலாரி சேஷாசாரியாரும் சேஷாவதாரானந்தரம் என்று வியாக்யானம்செய்து லக்ஷ்மண்ன்தான் ஜேஷ்டன் என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். இவ்வாறு நம்மவர்களனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே என்ற பிரமேயம்தான் ஸ்ரீபகவத்பாதாளின் சம்மதமான மதம் என்று நம்மவர்கள் உறுதி கொள்வாராக.

ஸ்ரீ ஸீதாலக்ஷ்மணபரதசத்ருக்ன ஹனுமத் சமேத ஸ்ரீ ராமசந்திர: ப்ரீயதாம். ப்ரீதோ வரதோ பவது.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஸ்ரீ ஸத்யஸந்த ஸ்வாமிகளின் சரித்திரம்.

இப்பத்திரிகையில் இப்பால் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டுவரும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமங்களின் அதி அற்புதமாயுள்ள மத்வசித்தாந்தபரமான அநேக அர்த்தங்கள் இம்மகானால் தமது விஷ்ணு ஸஹஸ்ர நாம வியாக்யானத்தில் காட்டப்பட்டவைகள்தான். இவர் உத்திராதி மடத்தின் ஸமஸ்தாநாதிபதி. ஸ்ரீ ஸத்ய போத ஸ்வாமிகளின் சிஷ்யர். பூர்வாசிரமத்தில் அவருடைய மாப்பிள்ளையுமாவார். இவர் ஹவேரி ராமச்சந்திராசாரியார் என்று பிரசித்தரான பண்டிதராயிருந்தார். தினம் ஸ்நானான்ஹிகங்களை விசேஷமாய்ச்செய்துகொண்டு விரக்தராய் ஸ்ரீ மத்வசித்தாந்த கிரந்தங்களை சிஷ்யர்களுக்கு பாடப்ரவசனம் சொல்லி வந்து பெரும் தபஸ்வி என்று யாவராலும் கொண்டாடப்பட்டுவந்தார். ஸ்ரீஸத்யபோதஸ்வாமிகள் இவருடைய தபஸ்ஸைக்கண்டு சந்தோஷப்பட்டு, தமக்குப்பின் இவர்தான் தன் ஸமஸ்தானத்திலுள்ள ஸ்ரீ மூலராமரையும் சீதையையும் பூஜைசெய்ய அருகர் என்று கருதி தம்முடைய நிர்யாணகாலத்தில் ஸன்யாஸம் தந்தார். அச்சமயம் இவருக்கு இன்னம் வெகு ஸ்வல்பகாலம் தான் ஆயுள் பாக்கி இருப்பதை அறிந்தார். அதற்காக சாமானியமாய் எல்லோரும் குடிக்க உபயோகிக்கும் பாத்திரங்

களின் அளவு உள்ள சில தாம்பிர பஞ்ச பாத்திரங்களில் ஜலத்தை நிரப்பி தன்வந்திரி மந்திரம், ராம மந்திரம், கிருஷ்ண மந்திரம் முதலிய மகா மந்திரங்களை ஜபித்து "இந்த பாத்திரங்களிலுள்ள ஜலத்தை பானம் செய்யுங்கள்" என்று ஸ்ரீஸத்யஸந்தருக்கு ஸ்ரீ ஸத்யபோதர் கட்டளையிட்டார். ஸ்ரீ ஸத்யஸந்தரும் அப்படியே பத்து பஞ்ச பாத்திரங்களிலுள்ள ஜலத்தைகுடித்து அத்துடன் தனக்குப்போதும் என்றும்பாக்கிபாத்திரங்களிலுள்ள ஜலத்தை குடிக்க தன்னால் முடியவில்லை என்றும் அறிவித்தார். ஸ்ரீ ஸத்யபோதர் பாத்திரங்களை கணக்கிட்டு பத்து பஞ்சபாத்திரம் ஜலத்தை மட்டில் இவர் குடித்ததால் இவர் இன்னமும் பத்துவருஷம் தான் இருந்து ஸமஸ்தாநாதிபத்யம் செய்வார் என்று அறிவித்து பிருந்தாவனமேகினார். பிறகு ஸ்ரீ ஸத்யஸந்தர் உண்மையை அறிந்து அதிக ஜலத்தைக்குடிக்கவில்லையே என்று பச்சாதாபம் அடைந்தார். பகவத் ஸங்கல்பம் இவ்வளவுதான் என்று உறுதிகொண்டார். இந்த பத்து வருஷத்தில் பகவத் ப்ரீதிகரமான சாதனங்களை வெகு விசேஷமாய் செய்து முடிக்க பாடுபட்டார். முன் இருந்ததைவிட இவருடைய தபஸ் வெகுவாய் விருத்தியடைந்தது. இவருடைய குருவான ஸ்ரீஸத்யபோதர் வெகுகாலம் தேச ஸஞ்சாரம் செய்யாமல் இருந்ததால் இவர் தீர்த்தக்ஷேத்திராடனம் செய்ய புறப்பட்டார். ஸ்ரீ பாண்டுரங்கனின் க்ஷேத்திரமான பண்டாபுரத்திற்கு வந்து இவர் பாண்டுரங்களை ஆராதித்து வரவும், இவருடைய தவத்திற்கு மகிழ்ந்து பாண்டுரங்கன் பிரம்மசாரி ரூபத்துடன் திவ்விய தரிசனமளித்து தான் இன்னொன்று அறிவித்து அந்தர்தானமடைந்தார். கங்கா யாத்திரைக்காக இவர் கயைக்கு வந்திருந்த சமயம் கயாவாளிகள் இவருடைய ஸமஸ்தானத்தின் நவரத்னமண்டபம் தங்க பாத்திரங்கள் முதலிய அபாரமான சம்பத்தைக்கண்டு ஆச்சரியப்பட்டு இவரிடமிருந்து பெரும் தொகையை பரிக்க எண்ணங்கொண்டு, ஸ்ரீ விஷ்ணு பாதத்தின் கோயிலைப்பூட்டி அந்த தரிசனம் இவருக்கு இல்லாமல் செய்துவிட்டனர். மறுநாள் அருணோதயத்தில் இம்மகான் ஸ்நானம்செய்து ஸ்ரீ விஷ்ணுபாதக் கோயிலின் கதவு பக்கத்தில் நின்றுகொண்டு பகவத் த்யானம்செய்ய கதவு படீரென்று வெடித்து இவர் உட்செல்லவழி ஏற்பட்டது. இதை கயாவாளிகள் நேரில் பார்த்து இவருடைய தபோ மகிமையைக்கொண்டாடி ஏராளமான பணத்தைக்கொடுத்து முத்திரையைப் பெற்றனர். அந்த பெருந்தொகையை அவர்களுக்கு திருப்பிக்கொடுத்து பெரியோர்களிடம் சரியாய் நடந்துகொள்ளும்படி அவர்களுக்கு புத்திமதி கூறி காசிக்கு வந்துசேர்ந்தார். இவருடைய தபஸ்ஸைப்பற்றி விசேஷமான பிரசித்தி ஏற்பட்டுவிட்டதால் காசியிலும் இவருடன் ஆயிரக்கணக்கான

ஜனங்களும் சுற்றியிருந்தனர். கங்கா பூஜைசெய்ய பெரிய ஏற்பாடாயிருந்தது. ஸமஸ்த வைபவங்களுடன் பதினுபிரக்கணக்கான ஜனங்கள் சூழ, கங்கைக்கரைக்கு வந்து விதிபூர்வகமாய் பூஜைசெய்து அமூல்யமான ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் கங்கைக்கு ஸமர்ப்பிக்கபோகும் சமயம், கங்கை ஸ்திரீ ரூபங்கொண்டு ப்ரத்யக்ஷமாய் கங்கா ஜலத்தினின்றும் வெளிவந்து, சந்தோஷமாய் அவைகளை தன் கையால் பெற்று தன் ஜலத்தில் அந்தர்தானமடைந்தாள். அலங்காரப்ரியோ விஷ்ணு: அபிஷேகப்ரிய: சிவ: என்றபடி ஸ்ரீராமச்சந்திரனை புஷ்பாதிகளால் வெகுவாய் அலங்கரித்துதான் இவர் பூஜிப்பது வழக்கம். ஓர் ஊரில் இவர் எந்த புஷ்பமும் கிடைக்காமல் பூஜிக்கநேரிட்டதைக்கண்டு மனம் நொந்து பூஜை ஆரம்பிக்கும் சமயம், ஒரு பிராம்மணன் விரைவாய்வந்து ஏராளமான தாமரை மலர்களை கொண்டுவந்து கொடுக்கவும், அவைகளால் அலங்கரித்து ஸ்ரீ ஸ்வாமிகள் பூஜை செய்தார். பிறகு அந்த மலர்கள் லோக விலக்ஷணமாய் அதியற்புதமாய் இருந்ததைக்கொண்டு ஆச்சரியப்பட்டு அவைகளைக்கொணர்ந்த அந்தணரை விசாரிக்க, அவரை எங்கும் தேடியும், அவர் சீரேலென மறைந்துவிட்டதைக்கண்டு பகவான் தான் அந்த ரூபத்துடன் வந்ததாய் எல்லோரும் நிச்சயித்தனர். இவர் ராமேசுவர யாத்திரை முடித்துக்கொண்டு உடுபி வந்த சமயம் தம்முடைய ஸ்வாமி பெட்டியை பல்லக்கில் வைத்து கால்நடையாய் தம்முடைய யானை குதிரை முதலிய ஸமஸ்தான வைபவத்துடன் தெருவழியாய் நடந்துவரும் சமயம் உடுபி அஷ்டமடாதிபதிகள்சேர்ந்து இவ்வாறு இதரர்கள் வைபவத்துடன் வரலாகாதென்று தடுத்தார்கள். அதற்கு ஸ்ரீ ஸத்யஸந்த ஸ்வாமிகள் தம்முடன் இவர்கள் வாதாடி தம்மை ஜயிக்கலாம் என்றும், தாம் தோற்றுப்போனால் இவ்வளவு வைபவங்களையும் விட்டு வெளிச்செல்ல சித்தமாய் இருக்கிறதாயும் அறிவித்தார். அவ்வாறே வாதம் நடந்ததும் ஸ்ரீ ஸத்யஸந்தர்தான் ஜயம் பெற்றார். இவருடைய கல்வித்திறம் ஓங்கியது. உடுபியிலேயே எல்லோர் முன் அஷ்டமடாதிபதிகளும் தோல்வியடைந்தனர். இதனால் பெருத்த அவமானம் அடைந்ததாய் எண்ணி மிகவும் துக்கமடைந்த ஸோதே மடாதிபதி ஸ்ரீஸத்யஸந்தருக்கு சாபம்கொடுக்க எத்தனப்பட்டார். இதை தம்முடைய தபோமகிமையால் அறிந்த ஸ்ரீ ஸத்யஸந்தர் உடனே ஸோதே ஸ்வாமிகளிடம் வந்து நல்ல வார்த்தையாடி "மகானே! என் என்னை சபிக்க எண்ணங்கொள்கிறீர். நான் வந்த காரியம் ஆகிவிட்டது. ஸ்ரீகிருஷ்ணனை தரிசித்து ஜன்மசாபல்யம் செய்துகொண்டுவிட்டேன். இதோ சீக்கிரமே இவ்வூர்விட்டு பிரயாணமாகப்போகிறேன். என் ஆயுள் இன்னமும் 15 நாள் தான் இருக்கிறது. சுபாவமாகவே மரிக்கப்போகும் எனக்கு உங்கள் சாபம் என்ன செய்யும். ஆயினும் இந்த விஷயம் உங்களுக்கு தெரியாததலால் நான் சொல்லிவிட்டேன். பிறகு உங்கள் இஷ்டம்" என்று சொல்ல ஸோதே ஸ்வாமிகள் இவருடைய ஞான திருஷ்டியைக்கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். ஸ்ரீஸத்யஸந்தரும் ஸ்ரீ கிருஷ்ணரின் பாதத்தில் 12,000 ரூபாய் ஸமர்ப்பித்து அதை பர்யாய ஸ்வாமிகள் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார். சீக்கிரமே உடுபியிலிருந்து புறப்பட்டு மஹிஷி என்னும் க்ஷேத்திரம் வந்து துங்கபத்திரா நதிக்கரையில் சகம் 1716ம் வருத்தில் பிருந்தாவனமடைந்தார். அவருடைய தம்பியான ஸ்ரீகிருஷ்ணாசாரியாருக்கு ஸன்யாஸம் தந்து ஸ்ரீ ஸத்யவரர் என்று திவ்ய நாமகரணம் செய்தார். இந்த ஸ்ரீ ஸத்யஸந்தர் பிரஹ்லாதாம்சம் என்று எல்லோராலும் கருதப்பட்டிருக்கிறது இவர் முதலில் வியாஸராஜ மடத்தில் ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகளாயும், பின்பு ஸுமதீந்திர மடத்தில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளாயும், பின்பு உத்திராதிமடத்தில் இந்த ஸ்ரீ ஸத்யஸந்த ஸ்வாமிகளாயும் அவதரித்ததாய் பெரியோர்கள் தாராளமாய் சொல்வதுண்டு. ஸர்வக்ஞாசாரியாளின் இந்த மூன்று மடங்களும் மாத்வர்களனைவராலும் பூஜிக்கப்படவேண்டியதென்பதற்கு இம்மகானின் அவதாரமே சாக்ஷியாகும்.

செய்தித்திரட்டு.

திருக்கோயிலூர் பிருந்தாவனமடைந்திருக்கும் சாபானுக்ரஹ சக்திவாய்ந்த மகனீயரான ஸ்ரீரகூத்தமஸ்வாமிகளின் பரமானுக்ரஹத்தை முன்னிட்டு மேற்படி பிருந்தாவனத்தருகில் உள்ள ஸேவாசத்திரத்தில், பவவருஷம் ஆஷாடமாஸம் சுக்ல பக்ஷத்து துவாதசி (24—7—1934) முதற் கொண்டு பிரதி துவாதசியும் ஐந்து ரூபாய் திட்டச்செலவில் துவாதசிக் கட்டளை பிராம்மண சந்தர்பணை சுமார் 25 பேருக்கு நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு துவாதசிக் கட்டளையும் ஒவ்வொருவருடைய உபயமாக நடத்த மதராஸ், கோயமுத்தூர், சேலம், ஈரோடு, கரூர், ஆண்டான்கோயில், சிதம்பரம் முதலான பல ஊர்களிலுள்ள தார்மிகர்கள் முன் வந்திருக்கின்றனர். ஸ்ரீமான்களான ஆரணி சுப்புராவ், ஆக்யம் ஹனுமந்தராவ், ஆர். ஸ்ரீனிவாஸராவ்

பி. ஆர். ராகவேந்திரராவ் போன்ற 23 கட்டளைக்காரர்கள் ஸ்ரீரகூத்தம குருவின் ஆக்ஞையின் பேரில், அவருடைய துவாதசி ஹஸ்தோதகதர்மத்தை நடத்த ஏற்பட்டுவிட்டனர். ஒரு வருஷத்துக்கு சுமார் 25 துவாதசிகள் ஏற்படுவதன் நிமித்தம் கட்டளைக்காரர்கள் பாக்கியுள்ளது இரண்டேத்வாசிதான். இந்த இணையற்ற தர்மத்திற்கு மாத்வர்களில் பாக்ய சாலிகள் முன்வந்து இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டு கட்டளைத்துகை தலா ரூபாய் ஐந்தை அனுப்பி ஸ்ரீரகூத்தம குருவின் அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாக பிரார்த்திக்கப்படுவதாய் திருக்கோயிலூர் P. G. வெங்கட்டரமணாசாரியார் எழுதுகிறார்.

ஸ்ரீரங்கம் தெற்குச் சித்திர வீதியிலுள்ள ஸ்ரீரங்கபவனம் என்னும் சத்திரத்தில் ஸ்ரீமான்களான T. K. பாலசுப்பிரமணிய அய்யர் பிரசிடெண்டாகவும் தேசபூஷணம் R. K. பிரஸன்ன வெங்கடேசராவ் வைஸ் பிரசிடெண்டாகவுமுள்ள ஸ்ரீரங்கம் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் மதராஸ் வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் சார்பாக 17—10—37உ அன்று வித்வான் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளால் தற்கால ஹிந்து ஸநாதன தர்மமும் அதன் சம்ரக்ஷணையும் என்பதைப்பற்றி அழகாய் உபன்யாஸம் நடந்தது என்றும் பிராம்மண க்ஷவைசிய சூத்ர ஹிந்து சநாதன ஆஸ்திக மகாஜனங்களனைவரும் வரவேற்கப்பட்டனரென்றும் ஷை சங்கத்தாரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரம்ம ஸூத்திரம்.

கும்பகோணம் ஸ்ரீமான் M. ராமராவ் எழுதுவதாவது:—

(முன் 88ம் பக்கம் தொடர்ச்சி)

முதல் அத்யாயம்—இரண்டாம் பாதம்.

இம்முதலாவது அத்தியாயத்தின் 2ம் பதத்தில் எல்லாவிடங்களிலும் இருத்தல், எல்லாவற்றையும் அழித்தல் கர்மங்களின் பலனை அனுபவித்தல், போன்ற பல தர்மங்கள் விஷ்ணுவிடம் தான் உண்டு என்று சொல்லப்படுகிறது. இதையே லிங்காத்மக சப்தங்களின் ஸமன்வயம் என்று ஸர்ஸ்கிருதத்தில் சொல்கிறோம்.

இதில் மொத்தம் 7 அதிகரணங்களும் 32 சூத்திரங்களும் இருக்கின்றன.

முதல் அதிகரணம்.

இந்த அதிகரணத்திற்கு ஸர்வகதத்வ அதிகரணம் என்று பெயர். ஏனென்றால் ஐதரேய உபநிஷத்தில் சூரியனிடம் இருப்பதாகக் காணப்படும் எல்லாப்பிராணிகளின் தன்மையானது பகவானிடம் தான் உண்டு என்று, இந்த அதிகரணத்தில் சொல்லப்படுகிறது. இதில் எட்டு சூத்திரங்கள் அடங்கியுள்ள. இதற்கு முந்திய அதிகரணத்தில் மூன்றுவித உபாஸனைகளில் பகவான் எல்லாவிடங்களிலும் இருப்பவர் என்று உபாஸிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதே ஐதரேய உபநிஷத்தில் தஸ்ய ஏதஸ்ய அஸௌ ஆதித்யோ ரஸ: இங்கு பிரஸ்தாபிக்கப்பட்ட ஸம்வத்ஸர நாயகனான பகவானுக்கு எல்லாவற்றிற்கும் ஆதியாயும் நியாமகனாயுமிருக்கும் ஆதித்யன் ஸாரமாகவிருக்கிறான்—என்ற வாக்யத்தினால் ஆதித்யனான சூரியன் எல்லாவிடங்களிலுமிருப்பவன் என்று தோன்றுகிறது அந்த ஆதித்யன் யார் என நிச்சயிக்கவேண்டியிருப்பதால் இந்த அதிகரணத்திற்கு ஸர்வகதத்வம் என்னும் தர்மம் விஷயமாகும். அது யாருக்கு உண்டு இது சூரியனுக்கா அல்லது விஷ்ணுவுக்கா என்பது ஸந்தேகம். ஆதித்யன் என்ற பதம் இருப்பதால் சூரியனுக்கு உண்டு என்பது பூர்வபக்ஷம். விஷ்ணுவுக்குத்தான் உண்டு என்பது ஸித்தாந்தம்.

1. ஓம் ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாத் ஓம்.

(ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாத்) ஸர்வத்ர=அக்னி, வாயு, ஆகாசம், ஜலம், ஓஷதிகள், வனஸ்பதிகள், சந்திரன், நக்ஷத்திரம் முதலிய எல்லா பூதங்களிடமும் இருப்பவன், தத்=விஷ்ணு தான்; ஏனென்றால் ப்ரஸித்தோபதேசாத்=ஏதமேவ ப்ரம்மேத்யாசக்ஷதே—இவனைத்தான் பிரம்மம் என்று சொல்கின்றனர் என்றபடி விஷ்ணுவிடம் பிரசித்தமான ப்ரம்ம என்ற பதம் சொல்லப்பட்டிருக்கிறது. வாஸுதேவாத் பர: கோனு பிரம்மசப்தோதிதோ பவேத்=வாஸுதேவனான விஷ்ணுவைத் தவிர வேறு யார் தான் பிரம்மசப்தத்தால் வியவஹரிக்கப்படுவர். ஒருவருமில்லை என்று ஓர் ஸ்மிருதியிலும் கூறப்பட்டிருக்கிறது.

2. ஓம் விவக்ஷித குணோபபத்தேஶ்ச ஓம்

மற்றொரு யுக்தியாலும் எங்கும் நிறைந்தவன் விஷ்ணுதான் என்று இச்சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. விவக்ஷித குணோப

பத்தே: ச பகவானிடம் செல்வதற்குரிய அதாவது அந்த ட காணத்தின் முதலில் சொல்லப்பட்டபடி எங்கும் இருப்பவனிட ஸம்பூர்ணமாக கேட்கப்படாதவன், ஸம்பூர்ணமாக பார்க்கப்பட தவன் என்று பல குணங்கள் அங்கு சொல்லப்பட்டிருப்பதாலு ஸர்வகதன் விஷ்ணுவே.

3. ஓம் அனுபபத்தேஸ்து ந சாரீர: ஓம்

அந்த உபநிஷத்தில் ஆதித்யன் என்ற பதம் காணப்படுவதா லும், சக்ஷுர்மய, ச்ரோத்ரமய:, மனோமய: வாங்மய: என் பதங்கள் கண் காது மனஸ் வாக்கு முதலியவைகளால் குறிக்க படும் தேகத்தின் ஸம்பந்தமுள்ள ஜீவனைக் குறிப்பதாலும், ஸர்வ தன் சூரியனாகவாவது ஜீவனாகவாவது இருக்கட்டும் என் சொன்னால், அதற்கு சமாதானம் இந்த சூத்திரத்தினால் சொல்ல படுகிறது. (அனுபபத்தே: து, ந, சாரீர:) அனுபபத்தே: அந்த இடத்தில் எங்குமிருப்பவனான ஸர்வகதன் அனுவா யிருப்பவன் என்று கூறப்பட்டிருப்பதால் சூரியன் ஸர்வகத என்பது யுக்திவிருத்தமானதாலும், எல்லாப் பிராணிகளுக்குமே ஒரே விதமான சுகதுக்கங்கள் இல்லையாதலால் ஜீவன் ஸர்வகதன் (எங்கும் இருப்பவன்) என்பது யுக்தி விருத்தமானதாலும் சாரீர: சூரியனும் ஜீவனும் ந ஸர்வகதர்களாகமாட்டார்கள். அதாவது ஜீவன்தான் ஸர்வகதன் என்றால் அந்த ஜீவன் எல்லா விடங்களிலும் எல்லாரிடமும் இருக்கிறான் என்று ஏற்படுகிறது. அப்படியானால் எல்லாப்ராணிகளுக்கும் ஒரே விதமான சுகம் ஒரே விதமான துக்கம் இருக்கவேண்டும். ஆனால் நம் அனுபவத் திலோ ஒவ்வொருவனுக்குமுன் ஒவ்வொருவரிடமுள்ள சுகமோ துக்கமோ வேறாகவும் பலவிதமாகவும் இருக்கிறதை நாம் கண்ணாரக்காண்கிறோம். ஆகவே ஜீவன் ஸர்வகதன் என்பது அனுபவவிருத்தமாகிறது. விஷ்ணுதான் ஸர்வகதன் என்று ஸித்தம்.

(தொடரும்)

விசேஷ தினங்கள்.

28—11—37	சனிவாரம்	ஏகாதசி உப.
2—12—37	குருவாரம்	அமாவாசை. திலதர்ப்பணம்
8—12—37	புதவாரம்	சிரவணம். உப. விஷ்ணுப. உப.
14—12—37	மங்களவாரம்	ஏகாதசி. உப.
15—12—37	புதவாரம்	த்வாதசி. ஸாதனி. மணி 7-18க்குள் போஜனம்.
16—12—37	குருவாரம்	தனுர்மாஸம் முதற்பூஜை.
17—12—37	சுக்ரவாரம்	பௌர்ணமி, விஷ்ணுப. உப.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே துவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந் ர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங் ர் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித் க்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமி டம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி ரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மே ம் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்ச க்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவ காத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் ந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா —8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் லோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 பாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்ப தும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலி யைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப் படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ: 3. Regd. No. M. 2

டி. எஸ். ஆர்.
அண்டு
கம்பெனி,
கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனா திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸரி பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் திணுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,
அரைக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.

Regd. No. M. 2419



மாத்வமித்திரன்.
THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 10	ஈசுவர ஸம்வத்ஸரம்.	No. 5
ஸ்தகம் 10	மார்கசீர்ஷ மாஸம். (17-12-1937) சுக்ரவாரம்.	நெ. 5

நெ	பொருளடக்கம்.	பக்கம்.
1.	ஸ்ரீமகாபாரத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)	129
2.	வாயு பகவானின் மேன்மை	134
3.	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	138
4.	ஆசாரமாலை	141
5.	பிரம்ம ஸூத்திரம் (ஸ்ரீமான் M. ராமராவ்)	145
6.	யுதிஷ்டிராசுவ[illegible]சுவத்தின் வரலாறு	148
7	யக்ஷ பிரச்னம்	154
8.	விசேஷ தினங்கள்	160

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்

வெகு சொற்பம் தானிருக்கின்றன.

உடனே அவைகளைப்பெற

முந்துங்கள்.

21 DEC 193

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्त्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 — ஈசுவர ஸம்வத்ஸரம். மார்கசீர்ஷ மாஸம். — NO. 5

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீமே. வே. பாகவத ரங்கனுதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

முப்பதாவது அத்யாயம்.

(முன் 102ம் பக்கம் தொடர்ச்சி.)

இவ்வாறு உலூபி சொன்னதைக்கேட்ட அர்ஜுனன், சித்திராங்கதை பப்ருவாஹனன் இவர்களுடன்கூட சந்தோஷத்தை அடைந்தான். பிறகு அர்ஜுனன் அசுவமேதத்திற்கு வரும்படி சித்ராங்கதையையும் பப்ருவாஹனனையும் அழைத்து அவர்களால் பூஜிக்கப்பட்டவனுய் மணலூரிலிருந்து ப்ரயாணம் செய்தான்.

குதிரை த்வாரகையின் சமீபம் வந்தபொழுது ஸ்ரீ கிருஷ்ணருடைய பிள்ளைகளான ப்ரத்யும்னன் முதலானவர்கள் அர்ஜுனனை யுத்தத்திற்கு அழைத்து அந்த குதிரையை பலாத்காரமாய் கொண்டுபோயினர். ஸுபத்ரா தேவியை அர்ஜுனன் கொண்டுபோனதால் அவர்களுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியை நிவிருத்தி செய்துகொள்வதற்காக ப்ரத்யும்னுதிகள், ஸ்ரீகிருஷ்ணரிடமும் வஸுதேவனிடமும் உள்ள மரியாதையின்பேரில்

குதிரையைமட்டில் அபகரித்துச்சென்றுவிடவும், அர்ஜுனன் த்வாரகைக்குள்சென்று தன் மாமனை வசுதேவரிடம், "உம்முடைய பேரன்கள் என் சத்ருக்களைப்போல் என் குதிரையை அபகாரம் செய்திருக்கின்றனர்." என்று சொன்னான். அதன்மேல் வஸுதேவன், ப்ரத்யும்னாதி குமாரர்களை அதட்டிவிட்டு, யக்ஞாசுவத்தை விடுவித்துக்கொடுத்தார். பிறகு அர்ஜுனன் தன் தாய்மாமனை வஸுதேவனை நமஸ்கரித்து யக்ஞத்திற்கு எல்லா யாதவர்களையும் வந்துசேர அழைத்துவிட்டு ஹஸ்தினாபுரத்திற்கு திரும்பிப்போகும்பொழுது முன்னாடியே ஓர் தூதனை தர்மபுத்திரரிடம் அனுப்பினான்.

அர்ஜுனனுடைய துர்லக்ஷணம்.

தம்பிமார்களுடனும் ஸ்ரீகிருஷ்ணருடனும் சேர்ந்திருந்த தர்மபுத்திரர், அர்ஜுனன் வந்ததைக்கேட்டு சந்தோஷமடைந்து ஆனந்தக்கண்ணீர் நிறைந்த கண்களுள்ளவராய் தம்பியான அர்ஜுனனிடம் சிநேகங்கொண்டு இவ்வாறு பேசினார். "ஹே கிருஷ்ணா! அர்ஜுனனுடைய சரீரத்தில் எவ்வகை துர்லக்ஷணத்தையும் நான் காணவில்லை. அப்படியிருந்தும் பிரயாணம் புறப்பட்ட அர்ஜுனன் இப்பொழுது எவ்வகை துர்லக்ஷணத்தால் அநேக துக்கங்களை அடைந்தான்." என்றிவ்வாறு தர்மபுத்திரரால் பிரசினம் செய்யப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணர் இவ்வாறு சொன்னார். உன் தம்பியான அர்ஜுனனுடைய குதிகால் அதிகநீளம். ஆகவே இந்த துர்லக்ஷணத்தின் தோஷத்தால் அவன் அதிக துக்கத்தை அடைபவனானான். என்று சொல்லி அர்ஜுனனிடமுள்ள மற்ற துர்லக்ஷணங்களையும் சொல்லத் துவக்கியவுடன் ஸ்ரீ கிருஷ்ணரை தன் கண் பார்வையால் த்ரௌபதி தடுத்தாள். ஸ்ரீ கிருஷ்ணர் ஸத்யபாமை, பீமசேனர், த்ரௌபதி ஆகிய இந்த நால்வர்கள் தான் சரீரத்தின் எல்லா லக்ஷணங்களையும் அறிந்தவர்கள். இவைகளை அறிந்தவர்கள் இவர்களைத்தவிர ஐந்தாம்பேர் ஒருவருமில்லை. இந்த லக்ஷணவித்தை என்பது மிகவும் உத்தமமானது. வித்தையை கிரகிப்பதே சுவபாவமாயுள்ள தர்மபுத்திரர் இதை ஸ்ரீகிருஷ்ணர் சொல்லும்பொழுது இந்த லக்ஷண வித்தையை கற்க அபேக்ஷிப்பார் என்று அறிந்து, த்ரௌபதி அந்த வித்தையிலுள்ள லோப

புத்தியால் ஸ்ரீ கிருஷ்ணரை அதைச்சொல்லாமல் இருக்கும்படி தடுத்தாள். த்ரௌபதியிடமுள்ள கௌரவத்தால் ஸ்ரீகிருஷ்ணர் மேல் பேசவில்லை. வேறு கதையைச்சொல்லிக்கொண்டு இந்த லக்ஷணத்தின் ப்ரஸ்தாபம் செய்யவில்லை. வயிறு சிறுத்தும் விருஷணம் கொஞ்சம் பெருத்தும் வலக்கையைவிட இடக்கை சிறிது நீண்டும் ஆகிய இந்த துர்லக்ஷணங்கள் அர்ஜுனனிடம் அமைந்து இருக்கின்றன. இது ஸ்பஷ்டமாய் எல்லோருக்கும் காணப்படினும் ஸ்ரீகிருஷ்ணர் இதைச் சொல்லவில்லை. இந்த தோஷங்கள் அநாதிகாலமாய் நித்யமாய் இருப்பதால் அவனுடைய க்ஞானானந்தங்களை குறைக்கின்றன. எல்லா ஜீவராசிகளிலேயும் பீமசேனர் த்ரௌபதி இவ்விருவர்கள்தான் துர்லக்ஷணங்களில்லாதவர்கள். பூர்ணமான க்ஞானம் ஆனந்தம் சக்தி முதலியவைகளுக்கு அருகரானவர்கள். அநாதியான துக்கமில்லாமல் இருப்பதிலும் சுகத்தின் ஆதிக்கமிருப்பதிலும் ருக்மணி சத்யபாமை முதலான ரூபங்களுள்ள லக்ஷ்மீதேவியாருக்கு ஜீவஸமூகங்களைவிட விசேஷமான லக்ஷணம் இருந்துவருகிறது. லக்ஷ்மீதேவியைவிட மிகவும் முக்யமாயுள்ள ஸ்வாதந்திரியம் முதலான குண ஸமூகத்திற்கு உரிய நித்யமானதும் மேலானதுமான லக்ஷணம் ஸ்ரீ வேதவியாஸர் முதலான ரூபமுள்ள விஷ்ணுக்குத்தான் உண்டு. வேறொருவருக்கும் இல்லை., ஆகவே ஒருவர்தான் பூர்ணமான ஸத்குணங்கள் உள்ளவர்.

அசுவமேதத்தின் சிறப்பு.

அசுவத்துடன் அர்ஜுனன் யக்ஞசாலைக்குள் பிரவேசம் செய்யவும், ஸ்ரீகிருஷ்ணருடன்கூடிய, அவனுடைய அண்ணன் தம்பிமார்கள் அர்ஜுனனால் பூஜிக்கப்பட்டவர்களாய், சந்தோஷமடைந்து அர்ஜுனனை. ஆலிங்கனம் முதலானவைகளால் பூஜித்தனர். பிறகு ஸ்ரீ கிருஷ்ணரால் சம்ரக்ஷிக்கப்பட்டதும் யக்ஞத்திற்காகவந்த அநேக அரசர்களுடனும் பிராம்மண சிரேஷ்டர்களுடன் கூடியதும், ஸ்ரீ வேதவியாஸரால் விதிக்கப்பட்டதுமான அந்த அசுவமேத யக்ஞம் நன்கு பிரகாசித்தது. ஸ்ரீ வேதவியாஸர் ஸ்ரீ கிருஷ்ணர் ஆகிய இரண்டு கிருஷ்ணர்கள், ஸ்ரீ பரசுராமர் ஆக இந்த மூன்று ரூபங்களுள்ள பரம புருஷனுடன் கூடிய அந்த

யக்ஞம் ஜாக்ரத் அவஸ்தை, ஸ்வப்னவஸ்தை, ஸுஷுப்தி அவஸ்தைகளை ப்ரவிருத்திக்கும் விச்வன் தேஜஸன், ப்ராக்ஞன் இந்த மூன்று ரூபங்களுள்ள விஷ்ணுவுடன் கூடிய ஜகத்தைப் போல் பிரகாசித்தது. சதுர்முகன் செய்த அசுவமேதம் எப்படி இருந்ததோ, முன்பு சதக்ரது என்ற பெயரை சம்பாதித்துக் கொடுத்த மகேந்திரனின் அசுவமேதம் எப்படி இருந்ததோ, அவ்வாறே பாண்டவர்களின் அசுவமேத யக்ஞமும் ப்ரத்யக்ஷமாய் கண்ணிற்படும் பிரம்மா ருத்திரன் இந்திரன் முதலான தேவர்கள் வந்திருந்து அதிகமாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இந்த அசுவமேத யக்ஞசாலையில் இல்லாதிருந்தவன், தேவர்கள் கந்தர்வர்கள் ரிஷிகள், ஸ்வதர்மானுஷ்டானம் செய்யும் மனுஷ்யர்கள், நல்ல ராக்ஷஸர்கள் இவர்களில் ஒருவரும் இல்லை. தேவதா அலங்காரமுள்ள பத்னிமார்களுடன் கூடிய தேவர்கள் சேர்ந்திருந்த இந்த யக்ஞபூமி ஸ்வர்க்கம் போலவே விளங்கிற்று. இந்த யக்ஞசாலையிலேயே சந்தேகமுள்ள தத்வ விஷயங்களில் பரஸ்பரம் சர்ச்சை ஏற்பட்டபொழுது ஸ்ரீ பரசுராமரென்ன ஸ்ரீகிருஷ்ணரென்ன ஸ்ரீ வேதவியாஸர் என்ன இந்த ரூபங்களுள்ள ஹரியால் உபநிஷத் வாக்யங்களைக்காட்டி அந்த சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு நிர்ணயம் செய்யப்பட்டு வந்தன. உயர்தர கானம் செய்யும் கந்தர்வ சிரேஷ்டர்களுடன் கூடியதும், மேலான ஆட்டமாடும் திவ்ய அப்ஸரஸ்ஸு கூட்டங்களுடன் கூடியதும் எப்போதும் பிரம்ம வாதம் செய்யும் ப்ராம்மணர்களுடன் கூடியதும் தத்வ விவேசனம் செய்யும் தேவர்களென்ன ராஜர்களென்ன இவர்களின் கும்பல்களோடு கூடியதும் எல்லாவகை நல்ல யக்ஞங்களிலும் சிரேஷ்டமானதும் முக்யமானதுமான இந்த அசுவமேத யக்ஞம் மிகவும் விளங்கியது. திவ்யமான அலங்காரமுள்ளவர்களும் மலர்ந்த முகமலருள்ளவர்களுமான ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியின் பத்னிமார்களுடன் சேர்ந்த எல்லாதேவர்களின் பத்னிமார்களும் இந்த யக்ஞசாலையில் நடமாடிக்கொண்டிருந்தனர். இவர்கள் பகவானுடைய திவ்விய சரிதைகளால் சந்தோஷமடைந்தவர்களாய் அப்ஸரஸ்ஸுகளுடன் சேர்ந்து இந்த யக்ஞசாலையில் உட்கார்ந்தனர். க்ஞானிச்ரேஷ்டரான பீமசேனர் எல்லோர் இஷ்டத்தையும் தானம் செய்துவரும்பொழுது மோக்ஷம் இதைவிட மேலானதென்று அதில் ஆசைப்பட்ட எவனும் இந்த யக்ஞத்தில் இருக்கவில்லை. ஐசுவரியாதிகளில் அபேக்ஷையுள்ளவன் யாருமில்லை. க்ஞானத்தை விரும்புகிறவனும் இல்லை, போஜனத்தில் விருப்பமுள்ளவனும் இல்லை. எல்லோரும் வீண் ஆசைப்பட்டவர்களாய் ஆகவில்லை. பதினைந்து வருஷகாலம் நடைபெற்ற இந்த அசுவமேத யக்ஞத்தில் ஒவ்வொரு நாளிலும் மேலான லேஹ்யம் சோஷ்யம் முதலான ரஸங்களோடும் பக்ஷண விசேஷங்களோடும் கூடிய மகத்தான அன்ன பர்வதங்களும், பால் நெய் எப்போதும் நிறைந்துள்ளதாயும் தேன் முதலியவைகளால் நிறைந்ததாயுமுள்ள நதிகளும், பாயஸத்தின் மடுக்களும், தேவர்கள் முதலானவர்களுக்கு அருகமான கஸ்தூரி பச்சகற்பூரம் சம்பந்தமுள்ள சந்தனதிகளின் விசாலமான மடுக்களும், அப்படியே மை, சம்பஞ்சி, முதலான மஞ்சள் குங்குமாதி உத்தமமான திரவியங்களின் தங்க மாணிக்யமயமான கிணறுகளும், இஷ்டப்படி சாப்பிடவும் பானம் செய்யவும் அனுபவிக்கவும் உபயோகப்பட்டுக்கொண்டிருந்து, யக்ஞம் முடிந்தபிறகு ஆயிரக்கணக்காய் மீந்திருந்தது. பீமசேனரால் தயார் செய்விக்கப்பட்ட சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரஸம் கந்தம் இவைகள் எல்லா போகத்திற்கும் விஷயங்கள் ஸ்வர்க்கத்தில் எப்படியோ, அப்படியே இந்த யக்ஞத்திலும் மிகவும் மனோகரமாய் இருந்தது. ஸ்ரீகிருஷ்ணரால் நடத்திவைக்கப்பட்ட இந்த அசுவமேத யக்ஞத்தை எல்லா ஜனங்களும் பார்த்துவிட்டு முன்பு தசரத குமாரனான ஸ்ரீ ராமசந்திரன் சதுர்முகன் இந்திரன் இவர்கள் செய்த யக்ஞங்களைத்தவிர்த்து இதற்கு சமானமான யக்ஞம் நடந்ததில்லை என்று சொன்னார்கள். கேவலம் விஷ்ணுவை தேவதையாகக்கொண்டதும் ஐந்து அசுவமேதங்களின் ஸ்வரூபமுள்ளதும் உத்தமரீதியில் நடத்தப்பட்டதும் நாளுக்குநாள் விருத்தியாகும் குணங்களுள்ளதுமான இந்த அசுவமேத யக்ஞம் பதினைந்து வருஷம் சாதுக்களுக்கு ஆனந்தத்தை விளைவித்திருந்தது.

(தொடரும்)

வாயுபகவானின் மேன்மை.

நம்மவர்கள் எல்லா காரியங்களையுமே ஸ்ரீ முக்யப்ராணாந்தர்கதராயுள்ள விஷ்ணுவின் பெயரையே சொல்லி எல்லா காரியங்களையும் செய்துவருகிறோம். பகவானுக்கு முக்யப்ராணர்தான் முக்யமான அதிஷ்டானம் என்று உறுதி கொண்டிருக்கிறோம். முக்யப்ராணரை முக்ய குருவாக எண்ணியிருக்கிறோம். அவர் வழியாக உபாஸிப்பதால் தான் மோக்ஷம் வருமென்று உத்கோஷித்துக்கொண்டு அவருக்கு இணையற்ற மேன்மையைக் கொடுத்திருக்கிறோம். முக்யப்ராணருக்கு இருந்துவரும் இப்பேர்ப்பட்ட மகாமகிமைக்கு எமது சாஸ்திரங்களில் என்ன ஆதாரமிருக்கிறதென்பதை சிறிது இங்கு நிரூபிப்போம்.

1. சாந்தோக்ய உபநிஷத்தில் முதலாவது அத்யாயம் மூன்றாவது கண்டத்தில் சொல்லப்படுவதாவது:—

முக்யப்ராணர் சூரியனிடம் இருந்துகொண்டு உலகிற்கு தாபம் பிரகாசம் உதயம் அஸ்தமயம் முதலான காரியங்களை நடத்துகிறார். அக்னியின் செயல்களான சுடுதல் பிரகாசித்தல் முதலானவைகளுக்கு விறகு எப்படி அதிஷ்டானமாய் இருக்கிறதோ, அவ்வாறுதான் ஸ்ரீமுக்யப்ராணருக்கு சூர்யன் அதிஷ்டானம். சூரியனுக்கு இருந்துவரும் சுடுதல் பிரகாசித்தல் முதலான சக்தி சூரியனுடையதல்ல. என்று உபாஸித்தால் தான் உபாஸிப்பவனுடைய அக்ஞானமும் அதனால் ஏற்படும் பயமும் பரிகாரமடையும். சூரிய மண்டலத்திற்கு ஒவ்வொருநாளும் உதயம் அஸ்தமனம் இருப்பினும் சூரியனிடமிருந்துவரும் முக்யப்ராணருக்கு மட்டில் உதயமும் அஸ்தமனமும் இல்லை. ஆயினும் ஜனங்களின் க்ஷேமத்திற்காக உதயாதி காலங்களில் முக்யப்ராணர் தம்மிடமிருந்துவரும் ஜனார்த்தனரெனப்படும் விஷ்ணுமூர்த்தியை ஆராதித்துவருகிறார். சூரியமண்டலத்திலேயும் எல்லா பிராணிகளின் தேகத்திலேயும் இருந்துவரும் முக்யப்ராணர் ஒருவர்தான் அந்தந்த அதிஷ்டானங்களின் யோக்யதைக்குத்தகுந்தவாறு சரீரங்களிலும் சூரியமண்டலத்திலும் உஷ்ணத்தை சமமாய்ச்செய்துகொண்டு வருகிறார். இப்பேர்ப்பட்ட சக்தியை ஸ்ரீ ஹரிதான் ஸ்ரீ முக்யப்ராணரிடம் தந்திருக்கிறார். ஆகையால் உபாஸகனாயிருப்பவன் தன் சரீரத்திலிருப்பவரும் சூர்யமண்டலத்திலிருப்பவருமான முக்யப்ராணரின் அதிஷ்டானத்திலிருந்துவரும் உத்கீதனாகிய விஷ்ணுமூர்த்தியை உபாஸித்தால் அவனவனுடைய யோக்ய

தைக்குத்தகுந்தவாறு எல்லா அபீஷ்டங்களையும் மோக்ஷானந்தத்தையும் அடைகிறான். ஸ்வாதந்திரியம் படைத்தவன் விஷ்ணுவே ஆனதால் அந்த பகவான் ஸ்வ எனப்படுகிறான். அந்த ஸ்வ என்னும் ஹரியை எப்போதும் ரமணம் செய்வதால் அதாவது பஜனம் செய்வதால் முக்யப்ராணர் ஸ்வரன் என்று அழைக்கப்படுகிறார். முக்யப்ராணர் ஒவ்வொரு சரீரத்திலேயும் இருந்துகொண்டு சூரியனிடத்திலேயேயும் இருந்து ஒவ்வொருவருக்கும், "மாம்ப்ரதி மாம்ப்ரதி" என் பொருட்டு என் பொருட்டு என்ற நினைவுக்கு விஷயராய் இருப்பதால் முக்யப்ராணருக்கு "ப்ரத்யாஸ்வர:" என்று பெயர் இருந்து வருகிறது. பஞ்சப்ராணர்கள் மூன்று வகையார்கள். முக்யப்ராணர் முக்ய பஞ்சகராவார். கருடன் மத்ய பஞ்சகராவார். முக்யப்ராணரைத் தவிர்த்த அவருடைய பிள்ளைகளான மற்ற ப்ராணர்கள் அவம (கடைசி) பஞ்சகராவார். வேறு விதமாயும் பிரிவு உண்டு. ப்ராண அபானர்கள், சேஷ கருடர்கள், உதான சமானர்கள், ருத்திரேந்திரர்கள், இவர்களுக்கு உத்தமரும் சிரேஷ்டருமாய் இருப்பவர் வ்யானரெனப்படும் முக்யப்ராணர் தான். அந்த வ்யானரெனப்படும் முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் ஸர்வோத்தமனான ஸ்ரீ ஹரியின் உபாஸனையைச்செய்யவேண்டும். ப்ராணராகிய சேஷனிடம் இருந்துகொண்டு மேல்மூச்சு போவதையும் அபானராகிய கருடனிடம் இருந்துகொண்டு கீழ் மூச்சு போவதையும் ப்ரவிருத்தித்துக்கொண்டு, வ்யானராகியமுக்யப்ராணர் சுயம் அந்தப்ராண அபானர்களின் சந்திப்பை உண்டாக்குகிறவராய் இருக்கிறார். அந்த வ்யானராகிய முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் இருக்கும் விஷ்ணுதான் வாக் ரிக்கு ஸாமம் உத்கீதன் எனப்பெயர்கொண்டு, வாக் ரிக்கு ஸாமம் இவைகளை ப்ரவிருத்திக்கிறார். அந்த பகவானின் ப்ரேரணையை அனுஸரித்து அவருக்கு அதிஷ்டானராயிருந்துவரும் முக்யப்ராணர் மேல்மூச்சு கீழ் மூச்சுகளை அடக்குவதால், அக்னியைக்கடைவது, யுத்தத்தில் செல்வது, தனுஸ்ஸை இழுப்பது, பெரும்பளுவைத்தூக்குவது, முதலான பராக்கிரமமுள்ள காரியங்களை நடத்துகிறார். வ்யானாதி பஞ்ச ப்ராணர்களிடமும் உத்கீதனாகிய பரமாத்மா இருந்தபோதிலும் வ்யானராகிய முக்யப்ராணரின் மூலமாகவே பகவான் பராக்கிரமச் செயல்களை செய்விக்கிறார். ஆகவேதான் வ்யானராகிய முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் பகவத் உபாஸனையைச் செய்யவேண்டும். ஸ்ரீ ஹரி எங்கும் வியாபித்திருப்பினும் அவர் ஒருவர் தான். பலர் இல்லை. அவருடைய மகாத்மியம் ஒரே வகையானது. சிறிதும் குறையாது. சிறிதும் அதிகமாகாது. ஆயினும் செய்கைகளின் பேதத்தால் நாமங்கள் ரூபங்கள் தனித்தனியா

காணப்படுகின்றன. அந்த ரூபங்கள் எல்லாமே சேருவதாலும் பிரிவதாலும் ஸம்ஶ்லேஷ விச்லேஷ ரீதிப்படி ஒன்றுதான். பூர்ணமான ஐசுவரியாதி குணங்கள் பொருந்தினவைகள். பரமாத்மா ஸர்வ சக்தி படைத்தவனுதலால் சிறிதும் மாறுதலடையாமல் அதாவது விகாரமில்லாமல் ஸமஸ்தான விசேஷ காரியங்களையும் செய்விக்கிருர். உத், கீ, த என்ற மூன்று எழுத்துக்களிலுள்ள முக்யப்ராணர், ஸரஸ்வதி, சதுர்முகன் இவர்களின் அதிஷ்டானத்தில் ஸ்ரீஹரி இருக்கிருர் என்று உபாஸிப்பவர்கள் ஸமஸ்தமான வேதங்களில் சொல்லப்பட்டதான ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை அடைகின்றனர். முன் சொன்னபடி முக்யமாய் சூரியனிடமுள்ள முக்யப்ராணரின் அந்தர்கதரான விஷ்ணுதான் ஸர்வோத்தமன் என்ற அறிவுடன் ரிக் ஸாம உத்கீதங்களால் ஸ்தோத்திரம் செய்து உபாஸகர்கள் ஸமஸ்தமான இக பர சுகங்களை அடைகின்றனர்.

என்றிவ்வாறு தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் கேவலம் சூரியனைமட்டில் உபாஸிப்பது தகாது என்றும் சூர்ய அதிஷ்டானத்திலிருந்துவரும் ஸ்ரீ முக்யப்ராணரின் அந்தர்கதராகவே ஸ்ரீ நாராயணரை உபாஸித்து மோக்ஷத்தை விரும்புபவர்கள் உத்தாரமடையவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருப்பதை வாசகர்கள் கண்டு கொள்வார்களாக.

2. இது சம்பந்தமாய் சாந்தோக்ய உபநிஷத்து முதல் அத்யாயம் நான்காவது கண்டத்தில் ஒரு கதையும் சொல்லப்பட்டிருக்கிறது.

உத்கீதன் என்ற நாசமற்ற ஹரியை ஓம் என்றும் ப்ரணவத்தால் உபாஸிக்கவேண்டும். அந்த உபாஸனை முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் தான் செய்ய வேண்டும். இதர தேவதைகள் அநேகர் இருக்கும்பொழுது முக்ய ப்ராணரின் அதிஷ்டானத்தில் தான் பகவத் உபாஸனை ஏன் செய்யப்படவேண்டுமென்ருல் முக்ய ப்ராணரின் மகிமை இப்பேர்ப்பட்டது. மிருத்யுவாகிய துர்க்காதேவியின் பயம் நீங்க எல்லா தேவர்களும் ஒரு சமயம் விரும்பினர். அதற்காக ரிக் யஜுஸ் ஸாமம் முதலானவைகளின் அபிமானி தேவர்களின் அதிஷ்டானங்களில் இருந்து வரும் ஓம்கார வாச்யனுன உத்கீதனுகிய பரமாத்மாவைக் குறித்து அந்த வேதங்களைக்கொண்டு உபாஸித்தனர். அப்படியிருந்தும் அவர்களுக்கு மிருத்யுபயம் நீங்கவில்லை. தன்னிடமே ரமிப்பதால் விஷ்ணு ஸ்வரன் எனப்படுகிருன். ஸ்வதந்திரனுயிருப்பதாலும் ஸ்வரன் எனப்படுகிருர். ஸ்வரனுன அந்த பரமாத்மாவிடம் பக்தியுடன் ஈடுபட்டிருப்பதால் முக்யப்ராணருக்கும் ஸ்வரன் என்று பெயர். அப்போது

விஷ்ணுக்கு 'ஸ்வரேஸ்வரன்' என்று பெயர் ஏற்படுகிறது. ஆகவே ஸ்வராபிமானியாய் ஸ்வரன் எனப்படுகிறவரான முக்யப்ராணரின் அந்தர்கதராயுள்ள ஓம் எனப்படும் விஷ்ணுவை இந்த தேவர்கள் எல்லோரும் உபாஸித்த பின்புதான் விஷ்ணுவின் அனுக்ரஹம் ஏற்பட்டது. மிருத்யுவின் பயம் நீங்கியது. ஸ்வர்க்காதிகளில் அமரர் என்று ஜராமரணமில்லாதவர்களான நிலையை அடைந்து பிரம்மாவுடன் கடைசியாய் மோக்ஷ ஸுகத்தை அடையப்பெற்றனர்.

இதனுல் உபாஸகர்கள் கேவலம் ஓம் என்று உபாஸிப்பதால் பயனில்லை என்றும் முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் இருந்துவரும் ஓம்கார விஷ்ணுவை உபாஸித்தால்தான் பகவத் அனுக்ரஹம் ஏற்பட்டு க்ஷேமத்தை அடைவார்களென்றும் வாசகர்கள் அறியவேண்டும்.

3. அதே சாந்தோக்யத்தில் முதல் அத்யாயம் ஐந்தாவது கண்டத்தில் சொல்லப்படுவதாவது:—

"சூரிய அதிஷ்டானத்தில் முக்யப்ராணர் இருக்கிருர். முக்யப்ராணரின் அந்தர்யாமியாய் ப்ரணவரென்றும் உத்கீதரென்றும் சொல்பவரான விஷ்ணு இருக்கிருர். மேலானவராயும் ப்ரேரகராயும் ஸமஸ்த ஜனங்களுக்கும் கதியை அளிப்பவராயுமிருப்பதால் ப்ரணவரெனப்படும் ஹரி உத்தமர்களால் கானம் செய்யப்படுவதால் உத்கீதரென்று பெயர்கொண்டிருக்கிருர். அவர்தான் க்ஷராக்ஷர புருஷோத்தமன் உபாஸகனின் தேசத்திலேயும் இருக்கிருர். சூரியனிடமுள்ள முக்யப்ராணரின் அந்தர்கதரென்ற ஓம் என்ற விஷ்ணு மூர்த்தியை நான் உபாஸிப்பதால்தான் ஒரு பிள்ளையைப்பெற்றவனுய் மோக்ஷஸுகத்தை அடைகிறேன். பிள்ளையே! நீயும் சூரியனின் கிரணங்களிலுள்ள முக்யப்ராணரின் அதிஷ்டானத்திலிருந்துவரும் ஓம் நாமக ஹரியை உபாஸனை செய். அதனுல் அநேக பிள்ளைகளை அடையப்பெற்றவனுய் மோக்ஷாதி புருஷார்த்தங்களை அடைவாய்" என்று கௌஷீதகி ரிஷி என்பவர் தன் பிள்ளைக்கு உபதேசம் செய்ததாய் சொல்லப்பட்டிருக்கிறது. அக்னியிடமுள்ள முக்யப்ராணரின் அந்தர்கதரான ஹரியை உபாஸிப்பதால் ஸ்வராதிகளை மாறிச்சொல்வதால் உண்டான பாபம் நீங்கும். ஆகவே முக்யப்ராணரின் அதிஷ்டானத்தில் தான் பகவத் உபாஸனை செய்யப்படவேண்டியது அவசியம்.

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 116ம் பக்கம் தொடர்ச்சி.)

241. தரணீதர: (ஓம் தரணீதராய நம:) பூமியைத் தாங்குபவர். பூமியைத் தாங்கும் கோவர்த்தனம் முதலான பர்வதங்களை தரித்தவர்.

242. ஸுப்ரஸாத: (ஓம் ஸுப்ரஸாதாய நம:) முக்தியைத் தரும் அனுக்கிரஹமுள்ளவர். மிக்க சிறந்த அனுக்ரஹம் செய்பவர்.

243. ப்ரஸன்னாத்மா (ஓம் ப்ரஸன்னாத்மனே நம:) தெளிந்த மனமுள்ளவர்.

244. விச்வத்ருக் (ஓம் விச்வத்ருஷே நம:) ஜகத்தை ஹிம்சிப்பவர்.

245. விச்வபுக் (ஓம் விச்வபுஜே நம:) ஜகத்தை பக்ஷிப்பவர். ஜகத்தை ரக்ஷிப்பவர்.

246. விபு: (ஓம் விபவே நம:) பலவகையாய் உருவெடுப்பவர். வியாபித்தவர்.

247. ஸத்கர்த்தா (ஓம் ஸத்கர்த்ரே நம:) ஸத் புருஷர்களை பூஜிப்பவர். சங்கடம் முதலியவைகள் இல்லாதிருப்பவர். ஜகத்தை சிருஷ்டிப்பவர். ஸத்யமான ஜகத்தை சிருஷ்டிப்பவர். சரணமில்லாதவர்களான தைத்யாதிகளை ஹிம்சிப்பவர்.

248. ஸத்க்ருதி: (ஓம் ஸத்கிருதயே நம:) ஸத்யமான காரியங்களையுடையவர். மகா பதிவ்ரதையான க்ருதிதேவி என்னும் பெயருள்ள பாரியாளுடையவர்.

249. ஸாது: (ஓம் ஸாதவே நம:) இதராளுடைய காரியங்களை ஸாதிப்பவர். பக்தர்களின் எல்லாவகை காரியங்களையும் செய்து முடிப்பவர். நியாயமாக நடப்பவர்.

250. ஜன்ஹு: (ஓம் ஜன்ஹவே நம.) அயோக்யர்களை விட்டுவிடுபவர்.

251. நாராயண: (ஓம் நாராயணாய நம:) தோஷங்களுக்கு விருத்தமாயுள்ள குணங்களுக்கு ஆசிரயமாயிருப்பவர். தோஷங்களுக்கு ஆசிரயமாயில்லாதவர். க்ஞானத்திற்கு விஷயமாயிருப்பவர். முக்தர்களுக்கு ஆசிரயமாயிருப்பவர். வேதாதிகளால் சொல்லப்படுகிறவர். வேதங்களுக்கு ஆசிரயமானவர். மனுஷ்யர்களுக்கு ஜனனாதிகளைக்கொடுப்பவர். மனுஷ்ய சமூகங்களால் நமஸ்கரிக்கப்படுபவர். மனுஷ்ய சமூகங்களுக்கு ஆசிரயமாய் இருப்பவர். மனுஷ்யர்களில் ஸர்வோத்தமர். மனுஷ்யர்களுக்கு அதிபதியான முக்ய ப்ராணருக்கு பரம சினேகிதராய் அவருக்கு ஆசிரயமானவர். ஜலத்தை ஆசிரயமாயுள்ளவர். மனுஷ்யர்களுக்கிருந்துவரும் பிண்டாண்டத்திற்கு ஆசிரயமாய் இருப்பவர். நாரமாகிய ஆனந்தத்தால் பூர்ணர். நாணாகிய பிரம்மாவால் சிருஷ்டிக்கப்பட்ட பிரம்மாண்டத்திற்கு ஆசிரயமானவர்.

252. நர: (ஓம் நராய நம:) விகாரமில்லாதவர். விநாசமில்லாதவர். அழியாமல் இருப்பவர். எல்லாவற்றையும் நடத்துகிறவர்.

253. அஸங்க்யேய: (ஓம் அஸங்க்யேயாய நம:) அளவிடமுடியாத குணங்களுள்ளவர்.

254. அப்ரமேயாத்மா (ஓம் அப்ரமேயாத்மனே நம:) அறியமுடியாத ஸ்வரூபமான தேகங்களுள்ளவர். அறியமுடியாத ஸ்வபாவங்களுள்ளவர்.

255. விசிஷ்ட: (ஓம் விசிஷ்டாய நம:) சிஷ்டர்களான பிரம்மாதிகளை மேலானவர்களாய்ச் செய்தவர். எல்லோரையும் விட மேலானவர்.

256. சிஷ்டக்ருத் (ஓம் சிஷ்டக்ருதே நம:) சாமர்த்திய சாலிகள் எல்லோரும் செய்தும் செய்யமுடியாமல் பாக்கியுள்ள காரியத்தை எல்லாம் செவ்வனே ஸம்பூர்ணமாய்செய்து முடிப்பவர். சிஷ்டர்களை ரக்ஷிப்பவர். எல்லாவற்றையும் ஆக்ஞாபிப்பவர்

257. சுசி: (ஓம் சுசயே நம:) சுத்தராய் இருப்பவர். குற்றமில்லாதவர். இதராளால் பிரகாசம் செய்யப்பட வேண்டாதவர்.

258. ஸித்தார்த்த: (ஓம் ஸித்தார்த்தாய நம:) ஸித்தரும் பக்தர்கள் விரும்புவதைக் கொடுக்க பிரார்த்திக்கப்படுபவருமானவர். எல்லாம் பூர்ணமாய்ப் பெற்றவர். ஸித்தி பெற்றவர்களுக்கு பணமாய் இருப்பவர். ஜகத் சிருஷ்டி முதலிய ப்ரயோஜனமுள்ளவர். அயோக்யர்களை திருப்பும் சித்திபெற்றவர்.

259. ஸித்தஸங்கல்ப: (ஓம் ஸித்தஸங்கல்பாய நம:) பக்தர்கள் விரும்புவதை எல்லாம் கொடுப்பதென்னும் ஸங்கல்பத்தை நிறைவேறப்பெற்றவர். ஸங்கல்பத்தை எல்லாம் நினைத்தமாத்திரத்தில் அடையப்பெற்றவர்.

260. ஸித்தித: (ஓம் ஸித்திதாய நம:) யோக்யர்களுக்கு ஸித்தியைத் தருபவர். அயோக்யர்களின் சித்தியை நாசம் செய்பவர்.

261. ஸித்திஸாதன: (ஓம் ஸித்திஸாதனாய நம:) மோக்ஷமாகிய பலனை சாதித்துக்கொடுப்பவர்.

262. வ்ருஷாஹீ (ஓம் விருஷாஹிணே நம:) தர்மத்தினால் வியாபிப்பவர். பகலைப்போல் பிரகாசிக்கும் தர்மங்களைக் கொண்டவர்.

263. விருஷப: (ஓம் விருஷபாய நம:) வர்ஷிப்பவர். செய்த தர்மத்தால் பிரகாசிப்பவர்.

264. விஷ்ணு: (ஓம் விஷ்ணவே நம:) நதிகள் முதலியவைகளுக்கு விசேஷமான ப்ரவாஹத்தை உண்டாக்குகிறவர். நழுவதல் இல்லாதவர்.

265. விருஷபர்வா (ஓம் விருஷபர்வணே, நம:) புண்யத்திற்கு ஸாதனமாக அமாவாஸ்யை முதலான பர்வங்களையுடையவர். புண்யமான வர்ணாசிரம தர்மங்களை தம்மிடம் வருவதற்கு படியாகவுள்ளவர்.

266. விருஷோதர: (ஓம் விருஷோதராய நம:) புண்ய ஜலத்தால் ரமிப்பவர். கங்கா ஜலத்தை த்ரிவிக்ரம ரூபத்தால் பிரம்மாண்டத்திலுள்ள ஜனங்களுக்குக் கொடுப்பவர். வர்ஷிப்பவரும் தோஷமில்லாதவருமாயிருப்பவர், புஷ்டமான வயிறுள்ளவர். தர்மமயமான வயிற்றையுடையவர்.

267. வர்த்தன: (ஓம் வர்த்தனாய நம:) தன் பக்தர்களை விருத்திப்படுத்துகிறவர். விரும்பக்கூடிய பணமுள்ளவர்.

268. வர்த்தமான: (ஓம் வர்த்தமானாய நம:) எப்போதும் விருத்தியாகிறவர்.

269. விவிக்த: (ஓம் விவிக்தாய நம;) ஜகத்தைவிட வேறானவர்.

270. சுருதிஸாகர: (ஓம் சுருதிஸாகராய நம:) வேதமாகிய சமுத்திரத்தையுடையவர். வேதங்களுக்கு கடல்போல் இருப்பிடமானவர். வேதத்திற்கு ஸாரமாய் இருப்பவரும் கோவர்த்தனம் முதலான பர்வதங்களால் ரமிப்பவராயும் இருப்பவர்.

271. ஸுபுஜ: (ஓம் ஸுபுஜாய நம:) சிறந்த புஜங்களுள்ளவர். சுகமான போஜனமுள்ளவர்.

272 துர்தர: (ஓம் துர்தராய நம:) பிறரால் தாங்க முடியாதவர்.

273. வாக்மீ (ஓம் வாக்மினே நம:) வேத ரூபமான சிறந்த வாக்குடையவர்.

274. மகேந்த்ர: (ஓம் மகேந்த்ராய நம:) மகானாயும் இந்திரனாயும் இருப்பவர். இந்திரன் என்றால் பரமைசுவரியமுள்ளவர். விஷயங்களை துரத்துகிறவர். ஸமஸ்த போக விஷயங்களை அனுபவிக்கிறவர். ஸமஸ்தத்தையும் பார்ப்பவர். அபீஷ்டத்தைத் தருகிறவர். சத்ருக்களை பிளப்பவர். சத்ருக்களை துறத்துபவர். உணவுக்காக அதைத்தரும் ஜலம் வரவேண்டி மேகத்தை பிளப்பவர். உணவை விருஷ்டியை உண்டாக்குவதால் தருபவர். திருப்திக்கு காரணமான பயிர்களை மழை பெய்யச்செய்து வளர்த்துபவர். உணவை உண்டாக்க சாகுபடி செய்பவரால் நிலத்தை உழச்செய்பவர். இதனால் உணவுக்கு கெடுதல் இல்லாமல் ஸ்தாபிப்பவர். ஸோம ரஸத்தின்பொருட்டு யக்ஞம் செய்யுமிடத்திற்கு ஓடுபவர். ஸோமரஸத்தில் ரமிப்பவர். பிராணிகளின் தேகத்தில் பிரவேசித்து பிரகாசப்படுத்துகிறவர். அபரோக்ஷிகளால் பார்க்கப்பெறுபவர். சத்ருக்களை பயமுறுத்துகிறவர். யாக யக்ஞாதிகளைச் செய்பவர்களின் பயத்தை நிவிருத்திப்பவர்.

(தொடரும்)

ஆசாரமாலை.

(முன் 9வது வாலியம் 375ம் பக்கம் தொடர்ச்சி.)

மாத்யான்ஹிகத்தில் அந்தச் சுத்திக்காக ஜலத்தை மந்திரிக்கும் ஓம் ஆபு: புனந்து பிருதிவீம், பிருதிவீ பூதா புனாதுமாம் என்ற மந்திரத்தில் வேறொரு வகையாய் இந்த அர்த்தமே விவரிக்கப்படுகிறது.

ஆப: புனந்து ப்ருதிவீம் கையில் வைத்துக்கொண்டிருக்கும் இந்த ஜலத்தின் அபிமானி தேவர்கள், நான் உட்கார்ந்து ஸந்தியாவந்தன ரூபமாகிய நாராயணருடைய உபாஸனையைச் செய்யும் இடமாகிய இந்த பூமி, சுடுகாடு, பரச்சேரி மிலேச்ச தேசம் முதலிய துஷ்ட தேசமாய் இல்லாமல் திவ்ய தேசமாய் இருந்து பரிசுத்தமாய் இருப்பினும், இன்னமும் விசேஷமாய் அதிகப்படியாய் பரிசுத்தம் செய்யட்டும். ஜலாபிமானி தேவர்கள்மட்டுமல்ல. நாராயணருடைய மூர்த்திகளும் இக்காரியத்தை ஏற்றுக்கொண்டு பரிசுத்தம் செய்யட்டும். நான் உட்காரும் இந்த பூமியை மட்டுமல்ல. இந்த நாராயணனுடைய ஆராதனையைச் செய்யும் ப்ருதிவீ முதலான ஐந்து பூதங்களின் கார்யமான இந்த என் சரீரத்தையும் பரிசுத்தம் செய்யட்டும். ப்ருதிவீ பூதா புனாதுமாம் தர்ம சாஸ்திரங்களில் சுத்தமானதென்று சொல்லப்பட்டுள்ள இந்த பரிசுத்த பூமியில் நான் உட்கார்ந்திருப்பதால். இந்த பூமி என்னை விசேஷமாய் பரிசுத்தம் செய்யட்டும். இந்த பூமி மட்டிலுமல்ல, இந்த பூமியின் அந்தர்யாமியாய் இருந்து வருபவரும் அதனால் ப்ருதிவீ எனப்படுகிறவரும் ஸ்திரீ ரூபமுள்ளவருமான பகவான் நாராயணன் இந்த சரீரத்தில் அபிமானங்கொண்டு என்னையும் பரிசுத்தம் செய்யட்டும். புனந்து ப்ரம்மணஸ்பதி: ப்ரம்மமாகிய வேதத்திற்கு அதிபதியாயும் ப்ரம்மாவுக்கதிபதியாயும் உள்ள நாராயணன் இந்த ஜலத்தை பரிசுத்தம் செய்யட்டும். நாராயணன் மட்டிலுமல்ல,. வேதத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிறவர்களான விஷ்ணு முதற்கொண்டு இந்திரன் வரையிலுள்ள தேவர்கள் எல்லோரும் பரிசுத்தம் செய்யட்டும். மேலும் எனக்கு வேதத்தை உபதேசம் செய்யும் என் சற்குருவின் அந்தர்யாமியாய் இருப்பவர் பரிசுத்தம் செய்யட்டும். ப்ரம்ம பூதா புனாதுமாம் இவ்வாறு நாராயணனால் பரிசுத்தம் செய்யப்பட்ட ஜலம் என்னை பரிசுத்தம் செய்யட்டும். யதுச்சிஷ்டம் அபோஜ்யம் யத்வா துஸ்சரிதம் மம ஸர்வம் புனந்துமாம் ஆப: என்னை என் பரிசுத்தம் செய்யவேண்டுமென்றால் என் சரீரத்தினுள்ளே பலவகை அசுத்தமான காரியங்களைச்செய்து தோஷம் நிறைந்திருக்கிறது. உதாஹரணமாய் ஒரு சிலதுகளைச் சொல்லுகிறேன். காபிக்கடை முதலியுவைகளில் சூத்ராதிகளும், ஸமாராதனை முதலியவைகளில் ஸ்திரீகள் முதலியவர்களும் சாப்பிட்டு மீர்ந்ததை அந்த பதார்த்தங்களை உட்கொள்ள நாவின் ஆசையால் நான் சாப்பிட்டிருப்பேன். சாஸ்திரங்களில் சாப்பிடத்தகாததென்று சொல்லப்பட்டிருப்பதும் நீசர்களால் தயாரிக்கப்பட்டிருப்பதும் கேசம் நகம் புழு முதலியவைகளால் தூஷிக்கப்பட்டதுமான ஆகாரங்களை நான் புசித்திருப்பேன்.

கையாலும் காலாலும் வார்த்தையாலும் வயிற்றாலும் இந்திரியங்களாலும் சாபல்யத்தாலும் சாஸ்திர நிஷித்தமான துராசாரங்களை செய்திருப்பேன். இந்த எல்லா பாபங்களையும் இந்த பரிசுத்தமான ஜலம் நீக்கி என்னை பரிசுத்த மனதுடையவனாகச் செய்யட்டும். அஸதாம் ச ப்ரதிக்ரஹம் ஸ்வாஹா அயோக்யமான வஸ்துக்களைப் பெறுதல், அயோக்யர்களிடமிருந்து திரவியங்களைப் பெறுதல், தன் யோக்யதைக்குத்தகாத தான தானங்களைப் பெறுதல் முதலிய பாபங்களை இந்த ஜலம் என்னிடமிருந்து நீக்கி என்னை பரிசுத்தனாகச் செய்யட்டும். இந்த ஜலத்தை உட்கொண்டு என் முகாக்னியில் ஹோமம் செய்கிறேன். இது நன்றாய் ஹோமம் செய்ததாய் ஆகட்டும். என்றிவ்வாறு இந்த மந்திரத்தால் அந்தச்சுத்தி வேண்டப்படுகிறது.

ஆபோஹிஷ்டா மயோபுவ: என்ற மார்ஜன மந்திரம் மீண்டும் மனஸ் வாக்கு காயம் இவைகளின் பாபங்களை நீக்கச் சொல்லப்படுகிறது. முதல் மூன்று மந்திரங்களின் அழகிய அர்த்தம் முன்னால் விவரிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிறகு உள்ள மந்திரங்களின் அபிப்பிராயமாவது:—

4 ஓம் சம்னோ தேவீரபீஷ்டயே இப்பொழுது மீண்டும் மார்ஜனம் செய்துகொள்ளுகிறேன். ஹே நாராயணா! உன்னுடைய புருஷ ரூபங்களை விட ஸ்திரீ ரூபங்கள் என்னிடம் சீக்கிரம் கருணை கொள்ளும் என்று அபிப்பிராயத்துடன் தேவீ: க்ரீடாதி குண விசிஷ்டமான உன் ஸ்திரீ ரூபங்களை வேண்டுகிறேன். இந்த ஜலம் என் சரீரத்தில் பட்ட மாத்திரத்தில் எனக்கு ஸுகமும் ஸௌகரியமும் நான் அபேக்ஷிப்பவைகளும் ஏற்பட காரணமாகட்டும். ஆபோ பவந்து பீதயே என் வாழ்வுக்கு ஜலம் மிகவும் அவசியம். நான் அருந்தும் ஜலம் நான் அருந்தக்கூடியதாய் உட்சென்று ஆயுராரோக்கியத்திற்கு காரணமாய் உன்னுடைய அனுக்ரஹத்தால் ஏற்படட்டும். சம்யோ ரபிஸ்ரவந்து ந: உட்புறத்து சுகத்திற்கு மட்டிலுமல்ல. வெளிப்புறத்து சுகத்திற்காக மழையாக வர்ஷிக்கட்டும். 5 ஈசானா வார்யாணாம் க்ஷயந்திஸ்சர்ஷணீனாம் ஹே ஆப: ரக்ஷகனான நாராயணா! நீர் நாம் விரும்பத்தகுந்ததாயுள்ள க்ஞானம் பக்திமுதலான ஸாதனங்களையும் ஐசுவரியாதிகளையும் வாரியாகிய ஜலத்தால்உற்பவிக்கும் நெல் முதலிய பயிர்களையும் கொடுக்குந்தலைவர். மேலும் நாம் தடுக்க அருகமான பாபங்கள் முதலியவைகளையும் தடுக்க சமர்த்தரானவர். க்ஷயந்தீ: சர்ஷணீனாம் பிரஜைகள் உயிருடன் தாம் அவர்களிடம் வியாபித்து இருக்கிறீர். ஆகவே யாசாமி பேஷஜம் ப்ரஜைகள் இந்த ஸம்ஸார துக்கம் அடையாமலிருக்க அதற்கு தகுந்ததான மருந்தையும் முக்தியைத்தரும் க்ஞானமாகிற மருந்தையும் நீர் கொடுக்கும்படி உங்

களை வேண்டுகிறேன். 6 ஏன் உங்களை வேண்டுகிறேன் என்றால் மேஸோமோ அப்ராவீத் என் குருநாதனான வாயு பகவான் இவ்வாறு சொன்னார். அவர் ஸோமனெனப்படுகிறார். ஸோம என்பதில் ஸ உ மா என்ற எழுத்துக்கள் இருக்கின்றன. உ என்றால் உத்க்ருஷ்டமான மா பிரமாணங்களுடன் சேர்ந்தவர் என்று பொருள் படுகிறது. அவர் என்ன சொன்னார் என்றால் அப்ஸு அந்தர் விச்வானி பேஷஜா ரக்ஷகனான பகவானிடம் எல்லா மருந்துகளும் இருக்கின்றன. அக்னிம் ச விச்வ சம்புவம் ஜடமான ஜலத்தில் எல்லா உலகிற்கும் க்ஷேமத்தை தருபவராய் உலகைப் பிரவிருத்திப்பதால் அக்னி எனப்படுகிறவரான நாராயணன் இருந்து வருகிறான். என்று பகவான் ஜலத்தில் இருப்பதாயும் பகவானிடம் ஸம்ஸார துக்கத்தை பரிகரிக்கும் எல்லா மருந்துகளும் இருக்கின்றனவென்றும்சொன்னார். மேலும் 7 ஆப:பகவன் வருநம் தன்வே மம அதிருப்தமானதும் ஜ்யோக் ச சூர்யம் த்ருசே ஜோதிர்மயமானதுமான பேஷஜம் மருந்தை ஞானிகளால் அடையப்படுவதால் ஸூர்யன் எனப்படும் பகவானை பார்ப்பதற்காக வேண்டி ப்ரணீந்தேளுங்கள் என்று தாமே பகவத் கீதாதிகளில் மாமேகம் சரணம் வ்ராஜ என்று சொல்லியிருக்கிறீர். ஆகவே எனது குருவான வாயு பகவானும் ஸ்வாமியான நாராயணனும் இவ்வாறு உபாஸிக்கச்சொன்னதால் ஜலத்தை உபாஸிக்கிறேன். இந்த ஸம்ஸாரத்தில் துக்கத்திற்கு காரணமாயிருப்பவைகள் பாபங்கள் தான்: அந்த ஸமஸ்த பாபங்களையும் நிவிருத்தி செய்ய பகவன்! உம்மைத்தான் ப்ரார்த்திக்கிறேன். 8 இதமாப: ப்ரவஹத யத்கிஞ்ச துரிதம்மயி நான் தெரிந்தோ தெரியாமலோ செய்த ஸமஸ்த பாபங்களையும் ஜலமானது பெரிய வஸ்துக்களையும் வேறிடத்தில் அடித்துக்கொண்டுபோய் அதன் பாதை இல்லாமற் செய்வதுபோல் ஜலத்திலுள்ள பகவன் நீர் அடித்துக்கொண்டுபோய் அவைகளின் பாதை இல்லாமற் செய்து மோக்ஷ ஸுகம்பெற பரிசுத்தமாய்ச்செய்யும். யத்வாஹமபி துத்ரோஹ நான் புத்தி பூர்வமாய் கோப்ராம்மணாதிகளை ஹிம்ஸித்திருந்தாலும் சரி யத்வாசேப உதாந்ருதம் புத்திபூர்வமாய் திட்டியிருந்தாலும் சரி பொய் பேசியிருந்தாலும் சரி அதனால் உண்டான பாபங்களையும் அடித்துப்போய் என்னை பரிசுத்தம் செய்யும். 9 ஆபோ அத்ய அன்வசாரிஷம் ஜலாபிமானி தேவர்களே! ஜலத்தில் வஸிக்கும் நாராயணா! இன்று இப்பொழுது உம்மை மார்ஜனம் செய்துகொண்டு உம்மை சரணமடைந்திருக்கிறேன். ரஸேன ஸமகஸ்மஹி உம்மிடமுள்ள ரஸத்தின் ஸம்பந்தத்தைப் பெற்றிருக்கிறேன். ஆதலால் எனக்கு உங்கள் பரமானந்த ரஸத்தை என்னிடம் என் யோக்யதைக்கு

தகுந்தவாறு நிரப்பும் பயஸ்வான் ஆக்னே ஆகாஹி ஜலத்திலும் இருப்பவரே! மதுரமான ஜலம் க்ஷீரம் முதலியவைகளைக்கொண்டிருப்பவரே! அதனால் உலகை நடத்துகிறவரே! இச்சமயம் தங்களை உபாஸிக்கும் என்னிடம் வாரும். தம் மா ஸம்ஸ்ருஜ வர்ச்சஸா தங்களை சரணமடைந்த பக்தனான எனக்கு பிரம்ம தேஜஸ்ஸைக்கொடுத்து அத்துடன் சேர்த்துவைக்கப் பிரார்த்திக்கிறேன். ( ) ஸஸ்ருஷீ: ததப்ஸ: திவானந்தா சஸஸ்ருஷீ: ஹே நாராயணா! தம்மிடம் இருந்துவரும் ஆனந்த ரஸத்தை பக்தர்களிடம் பெருகச்செய்கிறவரே! இரவையும் பகலையும் பிரவிருத்திக்கச் செய்து அவைகளின் நியாமகராய் இருக்கிறீர் வரேண்ய க்ரதூஹமா தேவீ: அவஸே ஹுவே க்ரீடாதிகுண விசிஷ்டனாய் ஸ்திரீ ரூபமுள்ள நாராயணா! இந்த ஸந்தியோபாஸ்தி முதலானவைகளில், நீர்தான் ஸர்வோத்தமர். ஸர்வநியாமகர். உங்களிடமிருந்துதான் ஏல்லா அபீஷ்டங்களும் பெறவேண்டும். அதற்காக உங்களைத்தான் பஜனம் செய்யவேண்டும் என்ற இந்த என் திடமான புத்தியை என் ஆத்ம ரக்ஷணத்திற்காக என்னிடம் எப்போதும் நிலைத்திருக்கும்படி நான் தருவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு தாங்கள் அருள்புரிய பிரார்த்திக்கிறேன். காயத்ரியில் சொல்லப்பட்டுள்ள தங்கள் மூர்த்திகளை த்யானிகளைச்செய்ய இந்த மனோபாவம் அவசியமாதலால் இதை தாங்கள் அருள்புரிய ஜலத்தில் அந்தர்கதராயுள்ள தங்களை உட்புறத்தாலும் வெளிப்புறத்தாலும் ஸேவித்து பஜனம் செய்து தங்களை சரணமடைகிறேன் என்று அதி அற்புதமான அர்த்தங்களைக்கொண்ட மந்திரங்களால் மார்ஜனாதிகளைச் செய்துகொண்டு நாராயணனின் ஆராதனையைச் செய்கிறோம் என்று வாசகர்கள் நிச்சயம் செய்துகொள்ளவேண்டும்.

(தொடரும்)

பிரம்ம ஸூத்திரம்.

கும்பகோணம் ஸ்ரீமான் M. ராமராவ் எழுதுவதாவது:—

(முன் 128ம் பக்கத்தொடர்ச்சி)

4: ஓம் கர்ம கர்த்ரு வ்யபதேசாச்ச ஓம்.

மற்றொரு யுக்தியைக்கொண்டு ஸர்வகதன் ஜீவனாகமாட்டானென்று வேதவியாஸர் இச்சூத்திரத்தில் அறிவிக்கிறார். ஜகரேய

உபநிஷத்திலும் "ஆத்மானம் பரஸ்மை சம்ஸதி" ஜீவன் ஸர்வகதனை பரமாத்மாவை அயோக்யனுக்குச் சொல்கிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் இங்கு உபதேசிப்பவனான ஜீவன் கர்த்தாவாகிறான். உபதேசிக்கப்படும் பொருளாகிற ஸர்வகதனான பரமாத்மா இங்கு கர்மமாகிறது. இவ்வாறு ஜீவன் கர்த்தாவாகவும் ஸர்வகதன் கர்மமாகவும் ஐதரேயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீவனே ஸர்வகதனாய் இருக்கும் பக்ஷத்தில் ஜீவன் தன்னையே அயோக்யனுக்கு உபதேசிக்கிறான் என்று சொல்லி ஜீவனை கர்த்தாவாகவும் கர்மாவாகவும் சொல்லப்பட்டிருக்கவேண்டும். உபநிஷத்தில் அப்படி சொல்லப்படவில்லை.

கர்ம கர்த்ரு வ்யபதேசாத் ச ; ச மேலும், கர்ம கர்த்ருவ்யபதேசாத் ஸர்வகதனை கர்மாவாகவும் ஜீவனை கர்த்தாவாகவும் சொல்லியிருப்பதனால் ஜீவன் ஸர்வகதன் அல்ல. விஷ்ணுதான் ஸர்வகதன் என்று அறியவேண்டும்.

5. ஓம் சப்த விசேஷாத் ஓம்.

மேற்கண்ட உபநிஷத்தில் "ஏதமேவ ப்ரம்மேத்யாசக்ஷதே" இவனைத்தான் ப்ரம்மம் என்று சொல்லுகிறார்கள் என்று அறிவிக்கும் வாக்யத்தில் பிரம்மம் என்ற பதம் காணப்படுகிறது. ஆதலால் அது ஜீவனைத்தான் குறிக்கும் என்று ஆக்ஷேபித்தால், அதற்கு சமாதானம் இச்சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. சப்த விசேஷாத் அந்த பிரம்ம சப்தத்தோடு ஏவ தான் என்று உறுதிமொழி சேர்க்கப்பட்டிருப்பதால் ஜீவனைக்குறிக்காது விஷ்ணுவைத்தான் குறிக்கும்.

6. ஸ்மிருதேஸ்ச ஓம்.

ஸ்மிருதே:ச—ஸ்மிருதிகளில் பிரஸித்தமான பகவத்கீதாவில் அஹமாத்மா குடாகேச ஸர்வபூதா "சயஸ்தித:" நித்திரையை ஜெயித்தவனும் அழகிய கூந்தல்களையுடையவனுமான அர்ஜுனா! நான் எல்லாப்பிராணிகளினுடைய ஹிருதயத்திலும் அந்தர்யாமியாயிருக்கிறேன். என்றும் "காமாவிச்யசபூதானி தாராம்ய ஹமோஜஸா" நான் பூமியில் அவதரித்து எல்லாப்பிராணிகளையும்

என்னுடைய ஸாமார்த்தியத்தினால் தாங்குகிறேன் என்றும் சொல்லப்பட்டிருப்பதாலும் ஸர்வகதன் விஷ்ணுவே தவிர ஜீவனல்ல.

7. ஓம் அர்ப்ப கௌகஸ்த்வாத் தத்வ்யபதேசாத் நேதி சேன்ன நிசாய்யத்வாதேவம் வ்யோமவச்ச ஓம்.

முற்கூறப்பட்ட சில ஆக்ஷேபங்களுக்குச் சமாதானம் இச்சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. (அர்ப்பகௌகஸ்த்வாத், தத்வ்யபதேசாத், ந, இதிசேத், ந, நிசாய்யத்வாத், ஏவம், வ்யோமவத், ச) அர்ப்பகௌகஸ்த்வாத் ஸர்வகதன் என்பவன் எல்லாப் பிராணிகளின் ஹிருதய குகையாகிற ஸ்வல்பமான இடத்தில் இருப்பதாகச் சொல்வதாலும், தத்வ்யபதேசத் சக்ஷூர்மய: என்ற பதங்களால் ஜீவனே சொல்லப்படுவதாலும், ந அவன் விஷ்ணுவல்ல, இதிசேத் என்று சொன்னால் ந இல்லை. இங்கு ஸ்வல்பமான இடத்தில் விஷ்ணு இருக்கிறார் என்று சொல்வதால் யாதொரு பிரயோஜனமுமில்லையா அல்லது அது அவருக்கும் பொருந்ாதா என்றஇரண்டு கேள்விகள் கேட்கவேண்டியதவசியமாயிருக்கிறது முதற் பக்ஷத்தில் பிரயோஜனமுண்டு என்று ஸித்தாந்தம். அதாவது ஏவம் நிசாய்யத்வாத் பகவானை உபாஸிக்கும் விதங்களில் இம்மாதிரி உபாஸிப்பது அதாவது ஸ்வல்ப இடத்திலிருப்பவன் என்றும் சக்ஷூர்மயன் என்றும் உபாஸிப்பதும் ஒன்றாகும் என்று சூத்திரகாரர் சொல்கிறார். இரண்டாம் பக்ஷத்தில் அது விஷ்ணுவுக்குப் பொருந்தும் என்ற ஸமாதானத்தை வ்யோமவத்ச எப்படி எங்கும் வியாபித்திருக்கும் ஆகாயத்திற்கு கடபடாதி சிறிய வஸ்துக்களிலும் கூட வியாபித்திருக்கும் தன்மை பொருத்தமாயுள்ளதோ அப்படியே எங்கும் வியாபகரான விஷ்ணுவுக்கும் அற்பமான ஹிருதயத்துக்குள் வஸிக்கும் தன்மை பொறுத்தமானதே என்று கூறுகிறார்.

8. ஓம் ஸம்போகப்ராப்திரிதி சேன்ன வைசேஷ்யாத் ஓம்

முந்திய சூத்திரத்தில் கூறப்பட்டபடி விஷ்ணு ஆகாசத்தைப் போல் எங்கும் வியாபித்து எல்லாப் பிராணிகளின் சரீரங்களிலும்

இருக்கிறார் என்று ஒப்புக்கொண்டால், அந்தந்த ஜீவர்களுக்கும் பகவானுக்கும் ஒரே விதமான சுகம் ஏற்படவேண்டும். ஆனால் அம்மாதிரியில்லையே என்ற கேள்விக்குப் பதில் இந்த சூத்திரத்தினால் சொல்லப்படுகிறது. ஸம்போகப்ராப்தி: ஜீவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஸமமான சுகம் ஏற்படவேண்டும்; இதிசேத் என்று சொன்னால், ந இல்லை, ஏனென்றால் வைசேஷ்யாத் எவனைக் காட்டிலும் விஷ்ணுவுக்குத் தனித்த ஓர் ஸாமார்த்தியம் இருக்கிறது. அது யாதெனில் விஷ்ணு ஜீவனோடு கூட ஒரே சரீரத்தில் இருந்தபோதிலும் துக்கத்தை ஒதுக்கி சுகத்தை மாத்திரம் அனுபவிப்பதில் ஓர் ஸ்வாதந்திரியமும் எங்கும் தடைபடாத சக்தியும் உள்ளவர். நெருப்புக்கு இரையான ஓர் வீட்டிற்குள் இருவர் இருந்தபோதிலும் ஒருவனிடம் அக்னிஸ்தம்பம் செய்யும் விசேஷ ஸாமார்த்தியம் இருந்ததால், அந்த நெருப்பின் பாதை எப்படி அவனுக்கு ஏற்படாதோ அம்மாதிரியே என்று அறியவும். வந்த ஆபத்தைப் போக்கடித்துக் கொள்ளும் ஸாமர்த்தியம் விஷ்ணுவிடம் இருந்தபோதிலும் ஆபத்து ஏற்பட்டது, ஏற்பட்டதுதானே என்றால், விஷ்ணு ஸர்வக்ஞனதால் முதலிலேயே அது ஏற்படாமல் தடுத்துக்கொள்ள அறிவும் அவனிடம் இருக்கிறது. இவ்வர்த்தத்தையே கருட புராணத்தில் ஓர் சுலோகம் அறிவிக்கிறது. "ஸர்வக்ஞத்வால்பக்ஞதாபேதாத் ஸர்வசக்தியல்பக்தித:, ஸ்வாதந்த்ர்ய பாரதந்த்ராப்யாம் ஸம்போகோ நேச ஜீவயோ: விஷ்ணு ஸர்வக்ஞன் ஜீவனோ அற்பக்ஞன் விஷ்ணு ஸர்வசக்தி வாய்ந்தவன். ஜீவனோ அற்ப சக்தி படைத்தவன். விஷ்ணு ஸ்வதந்திரன். ஜீவனோ பரதந்திரன்; ஆகையால் விஷ்ணுவுக்கும் ஜீவனுக்கும் ஸமமான சுகம் ஏற்படாது.

(தொடரும்)

யுதிஷ்டிராசுவமேதம் அசுவத்தின் வரலாறு.

ஸ்ரீமகாபாரததாத்பர்ணய நிர்ணயத்தில் ஸ்ரீபகவத் பாதாள் யுதிஷ்டிரர் செய்த அசுவமேதத்தின் சிறப்பை வெகுசிலாக்யமாய்

அறிவித்திருப்பதை மற்றொரு பக்கத்தில் காணலாம். இதன் காரணம் எமது ப்ராசீன நூல்களில் இது சம்பந்தமாய் அநேக மாகாத்மியங்கள் கூறப்பட்டிருக்கின்றன. மகாபாரதத்தில் அசுவமேதபர்வம் என்ற ஓர் அலாதியான பர்வமே இதை எடுத்து கூறுகிறது. ஸ்ரீவேதவியாஸரின் சிஷ்யரான ஜைமனி மகரிஷி ஜனமேஜய ராஜனுக்கு கூறியதாயுள்ள ஜைமனி பாரதம் என்னும் புராணமே குறிப்பாய் இந்த அசுவமேதம் சம்பந்தமான அநேக அற்புத சம்பவங்களை விளக்குகின்றன. அர்ஜுனன் அசுவமேதாச்வத்தை பூப்ரதக்ஷிணம் செய்து கொண்டு வந்ததாய் சொல்லியிருப்பதை விஸ்தரித்து, அர்ஜுனன் அவ்வாறு அசுவத்தை பூப்ரதக்ஷிணம் செய்வித்து கொண்டுவரும்பொழுது, ஆங்காங்கு அவன் அனுபவித்த சங்கடங்களும் ஸ்ரீகிருஷ்ணர் அவனுக்கு செய்த பரமோபகாரமும் ஸ்ரீகிருஷ்ண பக்தர்கள் ஆங்காங்கு நடந்துகொண்டதுமான பல அற்புத சம்பவங்கள் இந்த ஜைமனி பாரதத்தில்வெகு விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

முதலில் இந்த அசுவமேதத்தின் அசுவமே வெகு சிரமப்பட்டு பீமஸேனரால் தான் கொண்டு வரப்பட்டதாய் தெரிகிறது. ஜைமனி பாரதத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:—

யுதிஷ்டிரன் தன் க்ஞாதி ஜனங்களைக் கொன்ற பாபம் நீங்க உபாயத்தைச் சொல்ல ஸ்ரீ வேதவியாஸரை பிரசினம் செய்ய, அதற்கு அசுவமேத யக்ஞத்தைச் செய்யும்படி சொல்லி அதன் விதியையும் அவர் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார். அசுவமேதத்தில் இருபதினாயிரம் பிராம்மணர்கள் ரித்விக்குகளாய் இருக்க வேண்டுமென்றும் யக்ஞத்தின் ஆரம்பத்திலும் அந்தத்திலும் ஒவ்வொருவருக்கும் யானை 1. குதிரை 1. ரதம் 1. பசுக்கள் 1000. தங்கம் 1பாரம் (20மணு) கொடுக்கப்படவேண்டும் என்றும், குதிரை மூத்திரத்தையோ லத்தியையோ போடும் ஒவ்வொரு இடத்திலேயும் ஆயிரம் பசுக்கள் கொடுக்கப்படவேண்டும் என்றும் குதிரை ஒரே சுத்த வெள்ளையாய் பசும்பால் சந்திரன் குந்த புஷ்பம் இவைகளின் வர்ணமாயும், வால் மஞ்சள் வர்ணமாயும், காது மேகவர்ணமாயும், பால்ய வயதுள்ளதாகவும் எங்கும் தங்கு தடையின்றி வேகமாய் ஓடக்கூடியதாயும் இருக்கவேண்டுமென்றும்,

இவ்வாறு தேவேந்திரன் 100 அசுவமேதத்தை செய்திருக்கிறானென்றும் சொன்னார். இந்த தக்ஷிணா சிலவுகளுக்கும் மற்ற யக்ஞத்தின் சிலவுகளுக்கும் தன்னிடம் போதுமான திரவியமில்லையென்று தர்மபுத்திரர் வருந்தப்பட்டவும், மருத்ராஜன் செய்த யக்ஞத்தில் பிராம்மணர்களுக்கு தக்ஷிணையாகக்கொடுத்து அவர்கள் தூக்கிக்கொண்டு போக முடியாமல் விட்டுவிட்டுப்போன திரவியம் ஹிமயமலையில் இன்னமும் கிடக்கிறது என்றும், அதைக்கொண்டு இவ்வாறு பல அசுவமேதங்கள் நடத்தப்படலாமென்றும் அறிவித்தார். இத்தகைய குதிரை வேண்டுமே என்று தர்மபுத்திரர் வருத்தப்பட, யௌவனாச்வன் என்ற ராஜனின் பத்ராவதி என்னும் நகரில் இவ்வகை லக்ஷணமுள்ள குதிரை இருக்கிறதென்றும் எப்போதும் அதன் சுற்றி பத்து அக்ஷௌஹிணீ சைனியம் காவல் காத்து வருகிறதென்றும் அறிவித்தார். பீமசேனர் தான் ஒருவரே சென்று யௌவனாச்வனை வென்று குதிரையை அபகரித்து வருவதாய் சொல்லியும், யுதிஷ்டிரர் பீமசேனரை ஏகாகியாய் அனுப்ப பிரியப்படாதிருக்க, கர்ணனுடைய பிள்ளையான விருஷகேதுவும், கடோத்கசனின் குமாரனான மேகவர்ணனும் பீமசேனரின் பின்னாடி புறப்பட்டு, பத்ராவதி நகரின் வெளிப்புறமுள்ள குளத்தில் தண்ணீர் அருந்த அந்தக் குதிரை கொண்டுவரப்படுமென்று எதிர்பார்த்து அதன் சமீபத்திலுள்ள மலையில் காத்திருந்தனர். ஏராளமான யானைகள் குதிரைகள் வந்து ஜலம் அருந்திய பின் சத்ரசாமராதி வைபவங்களுடனும் ஸமஸ்த வாத்ய கோஷங்களுடனும் மகத்தான சைனியங்களின் நடுவில் வெகு பந்தோபஸ்தாய் அந்தக் குதிரை தண்ணீர் அருந்த அந்த ஸரோவரத்திற்கு மாத்யான்ஹ காலத்தில் கொண்டு வரப்படவும், கடோத்கசனின் குமாரன் மேகவர்ணன் சரேலென்று ஆகாயத்தில் மறைந்து ராக்ஷஸமாயையையுண்டாக்கி எங்குமொரே இருள் கவியச்செய்து காற்றும் மழையும் மின்னலும் பலமாய் வீசச்செய்து, எல்லாச் சைனியங்களையும் சிதறி அடித்து குதிரையைத்தூக்கி ஆகாயத்தில் பறந்து தன் மாயையை எடுத்துவிட்டான். உடனே ஸேனாநாயகர்கள், குதிரை ராக்ஷஸனால் ஆகாயத்தில் கொண்டுபோகப்படுவதை நேரில் கண்டு யுவனாச்வனிடம் அறிவித்தனர். யுவனாச்-

வன் முதலில் அனுப்பிய பதினாயிரம் வீரர்களும் கர்ண புத்ரனான விருஷகேதுவால் விசித்ர யுத்தம் செய்து கொல்லப்பட்டு போக, பிறகு சுயம் மகா சைனியங்களுடன் இம்மூவர்களுடன் யுத்தம் செய்ய வந்துசேர்ந்தான். உடனே பீமசேனர் கதையைத தூக்கிக்கொண்டு சுயம் யுத்தம் செய்ய புறப்படவும் கர்ண குமாரனான விருஷகேது அவரை நமஸ்கரித்து மூவுலகும் திரண்டு வந்தாலும் தாம் ஜெயிப்பீர் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் குமாரனான எனக்கு யுத்தம் செய்ய தாம் அவகாசம் கொடுத்துதான் தீர வேண்டும். இந்த யுத்தஸேனையாகிய பெண் யுவாவான என்னைத்தான் உற்று நோக்குகிறாள். என் ஸங்கமத்தைத்தான் எதிர்பார்க்கிறாள். அவள் மார்பை என் ஆயுதங்களாகிற நகங்களால் நான் பிளக்க விளம்புகிறாள். மாமனாரான தங்களைப் பார்த்தால் அவள் எதிரில் நிற்காமல் பின் திரும்புவாள் என்று அழகாய் பேசி தான் யுத்தம் செய்ய ஆசைப்படவும், பீமசேனர் கர்ண புத்திரனை யுத்தத்திற்கனுப்பவும், அவன் பீமசேனரை நமஸ்கரித்து ப்ரதக்ஷிணம் செய்து யுவனாச்வனுடன் யுத்தத்திற்கு வந்து சேர, யுவனாச்வன் கிருஷ்ண பக்தன் என்பதை அவன் பேச்சால் கண்டு கொண்டான். மகாபராக்கிரமசாலியான யுவனாச்வனுக்கு தன் முழு சாமார்த்தியத்தையும் காட்ட விரும்பினான். பலவகை அஸ்திரங்களாலும் ஆயுதங்களாலும் யுத்தம் செய்து பலதடவை தனுஸ்ஸூதம் முதலியவை இல்லாமற் செய்தான். யுவனாச்வனும் இதற்கு சரியாய் விசித்ர யுத்தம் செய்து பல்லம் என்ற பாணம் போட்டு விருஷகேதுவை மகாமூர்ச்சை அடையச் செய்தான். இதைக் கண்டு பீமசேனர் மகாதுக்கமடைந்து அடங்காங் கோபத்துடன் கதையைத் தூக்கிக்கொண்டு யுவனாச்வனின் ஸைனியத்தை நாசமாக்க அவனுடைய குமாரனான ஸுவேகன் பீமசேனருடன் கதாயுத்தம் செய்து தன் பராக்கிரமத்தைக் காட்டி வந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் மூர்ச்சை தெளிந்து விருஷகேது க்ரூரமான ஐந்து பாணங்களால் யுவனாச்வனை பலமாகப்ரகாரம் செய்ய, யுவனாச்வன் பிரக்ஞையற்று பூமியில் விழுந்தான். உடனே கர்ணனுடைய புத்ரனான விருஷகேது கிருஷ்ண பக்தனான யுவனாச்வனிடம் கருணை கொண்டு ஓடிவந்து அருகில்

உட்கார்ந்து தன்மேல் வஸ்திரத்தால் காற்றைக் கொடுத்து ஆச்வாசம் செய்வித்து, ஸ்ரீகிருஷ்ணாராதனம் செய்தன் புண்யத்தை தான் தத்தம் செய்வதாயும் அதனால் இந்த அரசன் பிழைக்க வேண்டுமென்றும் ஸ்ரீகிருஷ்ணரை பிரார்த்தித்து வந்தான். அரசனும் மூர்ச்சை தெளிந்து தன் வாழ்வில் உள்ளன்புடன் அக்கரை கொண்டிருந்த விருஷகேதுவைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டு தன் பிராணனையும் ராஜ்யத்தையும் அவனுக்கு அளித்திருப்பதாய் சொல்லி, பீமசேனரிடம் நேரில் சென்று தனக்கு ப்ராணதானம் செய்த கர்ணபுத்திரனுடன் இனி யுத்தம் செய்வது தகாதென்றும், தன் சரீரம் பெண்டு பிள்ளைகள் ராஜ்யம் எல்லாமே ஸ்ரீகிருஷ்ணருக்கு அர்பணம் செய்திருப்பதாயும் அவரிடம் வசமாக்க பீமசேனர் அருள்புரிய வேண்டுமென்றும் பிரார்த்தித்து அவ்வாறு தாமே நேரில் இருந்து இக்குதிரையைக் கொடுத்து அசுவமேதத்தை நடத்துவதாயும் ஒப்புக்கொண்டார். இம்மூவரையும் நகரத்திற்குள் ஊர்வலமாய் அழைத்துபோய் தன் அரண்மனையில் ஸகலமரியாதைகளையும் நடத்தினர். தன் ராஜ்யத்திலுள்ள ஒவ்வொருவரும் அவன் சண்டாளனாயினும் சரியே, பதிதனாய் இருப்பினும் சரியே, தன்னுடன் ஹஸ்தினாபுரம் வந்து ஸ்ரீகிருஷ்ணரை தரிசனம் செய்து செல்லவேண்டுமென்றும், இல்லாவிடில் அவனுடைய சிரச்சேதம் செய்யப்படுமென்றும் ஆக்ஞையிட்டார். நகரத்திலுள்ளவர்களனைவரும் ஸ்ரீகிருஷ்ண தரிசனம் கிடைக்கப்போவதைப் பற்றி மிகவும் குதூஹலமடைந்து, ஒரே பெரும் திரளாகப் புறப்பட்டனர். அக்காலத்திலும் இக்காலத்திலுள்ள பலர்களைப்போல் நாஸ்திகர்கள் இல்லாமலிருக்கவில்லை. ஸுதேவன் என்றவன் மிகவும் வயது சென்ற தன் தாயிடம் அரசனின் உத்திரவை அறிவித்து ஸ்ரீகிருஷ்ணரையும் யுதிஷ்டிரனின் அசுவமேதத்தையும் பார்க்க ஹஸ்தினாவதி வரும்படி அழைத்தான். அதற்கு அந்த அம்மாள் "மகனே! என்னை இதற்கு அழைக்காதே. நான் வரவே மாட்டேன். தெய்வமாவது தர்மமாவது" எல்லாம் கதையாய் இருக்கிறது. நான் இதுவரை கேட்டதே இல்லை. என் புருஷனும் சரியே என் தந்தையும் சரியே இதுவரை தர்மமென்று எதையும் செய்

ததேயில்லை. உனக்கு யார் இதைச்சொன்னது. வேதத்தில் சொல்வதெல்லாம் கேவலம் அர்த்தவாதம், மிகைப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது. பிராம்மணர்களெல்லாம் மோசக்காரர்கள். பணத்தைப் பரிக்க பலவாறு சொல்கிறார்கள். தர்மமென்றால் பணச்சிலவுதான். எங்கள் வம்சத்தில் தர்மம் எதுவும் செய்வது வழக்கமில்லை. செய்தாலும் நமக்கு சங்கடங்கள் தான் ஏற்படும். இதுவரை செய்யாதிருந்து இனி எந்த புது வழக்கத்தையும் நான் செய்யமாட்டேன் என்று அடமாய் மறுத்து விடவும், ஸுதேவன் அரசனிடம் வந்து இதைச் சொல்லி இனி என்ன செய்வதென்று கேட்டான். அரசன் அவளை வரவழைத்து "தர்மஸ்வரூபிகளான தர்மபுத்திரரையும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையும் பார்க்க அசுவமேதத்திற்காக எல்லோரும் போகின்றனர். நானும் எல்லோருடன் போகிறேன். அங்கு உத்தமஸ்திரீகளான துரௌபதி ருக்மணி முதலியவர்களைப் பார்க்கலாம். ஸாதுக்களைப் பார்ப்பதால் ஸமஸ்த பாபங்களும் தொலையும்" என்று அரசன் சொன்னான். அதற்கு அந்த கிழவி, அரசனே! நீ சிறுவனாயிருப்
ல் உலக நீதியை நீ இன்னமும் சரியாய் அறியவில்லை இவ்வாறு எல்லோருடன் போய் பணத்தை பாழாக்கிக் கொள்கிறாய். எனக்கு அவ்வாறு இஷ்டமில்லை. கோதுமை பயிர்கள் அறுவாகும் நிலைமையில் இருக்கிறது. வீட்டில் பால் தயிர் வெண்ணை முதலியவைகளை என் வேலைக்காரர்கள் சரியாய் பந்தோப்ஸ்து செய்யமாட்டார்கள். பணங்களெல்லாம் சிலவாகிவிடும் எனக்கு கிருஷ்ண தரிசனம் என்ன வேண்டியிருக்கிறது. கிருஷ்ணராவது தர்மபுத்திரராவது அவர்களால் எனக்கு ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. எல்லோரும் அவரவர்கள் காரியத்திலேயே கண்ணுள்ளவர்கள். நானும் அப்படியேத்தான் என் காரியத்திலே கருத்துள்ளவள். எனக்கு என் பணமே பெரிது. அதன் சிலவில் எனக்கு சிறிதும் இஷ்டமில்லை, என்று சொல்லவும், அரசன் துர்புத்தி பிடித்த இக் கொண்டு கிழத்தை கயிற்றால் கட்டிக் கொணர்ந்து பலாத்காரமாய் புண்யத்தை அடையச் செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்து "பீமா! உலகின் போக்கை கவனித்தீர்களா! என்ன வயதானால் என்ன. நற்புத்தி என்பது ஜன்மாந்தர ஸுக்ருதத்தால் தான் ஏற்படுகிறது. பற்கள் உதிருகின்றன.

தலைமயிர் நரைக்கிறது. சரீரம் குன்றி விடுகிறது. ஆனால் பணத்திலும் பிராணனிலும் ஆசை மட்டில் அச்சமயம் தளிர்கிறது. என்று சொல்லிக்கொண்டு, எல்லோருடன் மகாசந்தோஷமாய் ஹஸ்தினாவதி வந்து சேர்ந்தார். அசுவமேதாச்வத்துடனும் தன் பாரியாளான ப்ரூவதி முதலானவர்களுடனும் நேரில் யுவனாச்வன் வந்ததை அறிந்த தர்மபுத்திரர் மிகவும் சந்தோஷப்பட்டு, ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனன் முதலியவர்களுடன் எதிர்கொண்டு போய், மிகுந்த மரியாதை செய்து ஊருக்கு அழைத்துக்கொண்டு போய், உபசரிக்க, யுவனாச்வன் தர்ம புத்திரருக்கு மிகுந்த நண்பனான். ஸ்ரீகிருஷ்ணரிடம் ஸர்வ ஸம்பத்தையும் ஸமர்ப்பணம் செய்து மகா பக்த சிரோமணியானான். அர்ஜுனனுடன் அசுவமேதாச்வத்தின் பின்னடி காவலாய் போய் அரசர்களை ஜயித்து வந்து அசுவமேதத்தை கூட இருந்து சிறப்பாய் நடத்திவைத்தான்.

யக்ஷ பிரசினம்

இப்பால் வினாக்களை இடுவதிலும் அவைகளுக்கு விடைகளை அளிப்பதிலும் பொது ஜனங்களில் பெரும்பான்மையோர்மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் கொண்டிருப்பதுமல்லாமல் பத்திரிகைகளிலும் நாவல்களிலும் இவை வெளியாவது சகஜமாய்ப் போய்விட்டது. இத்தகைய பிரசினோத்தரங்கள் புத்தி விசாலமடைவதற்கும் அதன் விஷயங்கள் பசுமரத்தாணிபோல் மனதிற் பதிவதற்கும் காரணமாகிறதென்றும் அநேக நற்பயன்களை எமது ஒரு நண்பர் அறிவிக்கவும், இம்மாதிரியான பிரசினோத்தரங்கள் எமது சாஸ்திரங்கள் புதியதல்லவென்றும் ஸர்வக்ஞரான ஸ்ரீ வேதவியாஸரால் நூற்றுக்கணக்கான தர்ம சூக்ஷ்மங்கள் வெகு ருசிகரமான பிரசினோத்தர மூலமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் நாம் எடுத்துச்சொல்ல நேரிட்டது. இவைகள் எமது மித்திரன் வாசகர்களுக்கும் உபயோகப்படும்படி முதலில் யக்ஷ பிரசினம் அறிவிக்கப்படுகிறது. மேற்பார்வைக்கு யக்ஷன் கேட்ட கேள்வியும் அதற்கு யுதிஷ்டிரர் சொன்ன பதிலும் வெகு சாமான்யமாய் இருப்பதாய் தெரிய வருகிறது. அவ்வாறேதான் பல மொழி பெயர்ப்புகளும் பிரசாரத்திலிருக்கின்றன. தர்ம தேவதையான யக்ஷனுக்கும் தர்மபுத்திரரான யுதிஷ்டிரருக்கும் நடந்த சம்பாஷணை இத்தகைய வெகு பல்பஜமான விஷயங்களைப் பொருந்திருக்காது என்று யாவரும் ஊகிக்கலாம். சம்பாஷிக்க முடியாமலோ மனமில்லாமலோ அறிவாளிகளான பீமசேனர் அர்ஜுனன் நகுலன் சகதேவன் இவர்கள் யக்ஷனின் ஆக்ஞையை மீறி, அவன் வசித்திருந்த குளத்தின் ஜலத்தை அருந்தி, அவனுடைய கோபத்திற்கு பாத்திரர்களாகி, உயிர் போனவர்போல் மகா மூர்ச்சையடைந்து கரையில் விழுந்தனர் என்றால் அந்த சம்பாஷணையின் பெருமை என்னவென்று சொல்வது, ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் அறிவித்தபடி ஸ்ரீ மத்வசித்தாந்த ப்ரமேயங்களை அறிவித்தபடி ஸமஸ்த சாஸ்திரக் களஞ்சியமான மகாபாரதத்தில் ஓர் முக்யமான பகுதியாகிய இந்த யக்ஷ பிரசினத்தில் ஸாமான்ய தர்மங்கள் அறிவித்திருப்பதுடன் எமது சித்தாந்த பரமாயுள்ள அநேக அற்புத பிரமேயங்களும் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவென்பதை வாசகர்கள் கண்டுகொள்ள இது இங்கு பிரசுரிக்கப்படுகிறது. மகாபாரதம் வன பர்வத்தில் சொல்லியிருப்பதாவது:—

1. சூரியனை உதிக்கச் செய்கிறவன் யார்? பிரம்மம். (நாராயணன்)

2 சூரியனைக் காட்டுபவைகள் யார்? வேதங்கள். (சூரியனிடமிருந்து வரும் நாராயணனை வேதங்கள் அறிவிக்கின்றன.)

3. சூரியனை அஸ்தமிக்கச் செய்கிறவன் யார்? தர்மம் (உலகை தரிப்பவரான தர்மம் எனப்படும் நாராயணர்.)

4. சூரியன் எதில் நிலையடைந்திருக்கிறான். ஸத்யத்தில் (ஸத்யரான உத்தமக்ஞானானந்தமுடைய விஷ்ணுவில்)

5. ஒருவன் சுரோத்ரியனாவது எதனால்? சிரவணத்தால் (ஸத்சாஸ்திரங்களை சிரவண மனனாதிகளைச் செய்வதால்)

6. மகத்வத்தை எப்படி அடைகிறான்? தபஸ்ஸால் (மகத்தான பிரம்மத்தை அடைவது தபஸ்ஸாகிய த்யானத்தால்)

7. ஒருவர் இருவர் ஆவது எப்படி? தைரியத்தால் (உலகத்தின் தாரகனான ஹரி த்யானம் செய்யும் ஒவ்வொருவனுடன் எப்போதும் கூட இருந்து வெளிப்பார்வைக்கு அவன் ஒருவனாய் தோன்றினும் உண்மையில் இருவர்களாகவே ஆகிறான்)

8. ஒருவன் புத்திமானாவது எப்படி? வ்ருத்தரை சேவிப்பதால் (வ்ருத்தரான வாயுபகவானை ஸேவிப்பதால்)

9. ப்ராம்மணர்களுக்கு தேவத்வம் எது? சாஸ்திரப்படிப்பு (சாஸ்திரப்யாஸம் தேவர்களின் சரீரத்தை பிராம்மணர்களுக்கு சம்பாதித்துக் கொடுக்கிறது)

10. அவர்களின் தர்மம் எது? தபஸ்தான் என்று சாதுக்கள் அனுஷ்டித்திருக்கின்றனர்.

11. அவர்களுக்கு மனுஷ்யபாவம் எது? மரணம் (மரணத்தை சம்பாதித்துக் கொடுக்கும் அஹங்காரம் மமகாரம் தான்)

12. அவர்களின் துராசாரம் எது? மௌனத்தை விட்டிருத்தல். (அதிகவார்த்தைகளை ஆடாமல் ச்ருதிஸ்ம்ருதி ப்ரமாணங்களை ஒட்டி சுருக்கமாய் பேசுவதை விட்டொழித்தல் துராசாரமாகும்)

13. க்ஷத்திரியர்களுக்கு தேவத்வம எது? போர்முனையில் தைரியமாயிருத்தல்.

14. அவர்களுக்கு தர்மம் எது? யக்ஞம்.

15. அவர்களுக்கு மனுஷ்யத்வம் எது? யுத்தத்தில் பயந்து ஓடுவது (மரணத்தை விளைவிப்பதாகும்)

16. அவர்களின் துராசாரம் எது? அடைக்கலம் புகுந்தவர்களைக் காட்டிக் கொடுப்பது அயோக்யர்களின் ஆசாரமாகும்.

17. யக்ஞஸம்பந்தமான ஸாமம் எது? வாயு (யக்ஞத்தை அறிவிக்கும் ஸாமவேதத்தின் அபிமானி வாயுபகவான்)

18. யக்ஞ சம்பந்தமான யஜுர் வேதம் எது? மனஸ் (யக்ஞத்தை அறிவிக்கும் யஜுர்வேதத்தின் பாகத்திற்கு மனோபிமானியான ருத்திரன் அபிமானி)

19. யக்ஞத்தை முக்யமாய் நாடுபவள் யார்? ரிக்கு (யக்ஞ நாமகனான விஷ்ணுவை முக்யமாய் நாடுபவள் ரிக்வேதத்தின் அபிமானியான மகாலக்ஷ்மி)

20. யக்ஞத்திற்கு எது இருந்தே தீரவேண்டும்? ரிக்வேதம் (ரிக்கின் அபிமானியான மகாலக்ஷ்மியைவிட்டு விஷ்ணு இருக்க மாட்டார். எதிலேயும் இருவர்களும் சேர்ந்தே இருப்பார்கள்)

21. மேலிருந்து விழும் வஸ்துக்களில் எது சிறந்தது? மழை (மேலானவர்களான குருமார்களிடமிருந்து கீழ்தர ஜனங்களுக்கு சொற்பொழிவு செய்யப்படுவதில் தனக்கு க்ஞானோபதேசம் செய்த குருவிடமிருக்கும் வாஸுதேவ ரூபம்தான் உபாஸிக்க இருந்தது.)

22. நடும்பொருள்களில் எது சிறந்தது? விதை. (சிஷ்யர்களில் நடப்படும் பீஜமாகிய க்ஞானத்தைத் தருபவரான அவர்களிடமுள்ள ஸங்கர்ஷண ரூபம் உபாஸிக்கச் சிறந்தது)

23. நிலைபெற்றவைகளில் எது சிறந்தது? கோக்கள். (க்ஞானத்தை நிலைநிற்கச் செய்யும் கோக்களான வித்தையின் அபிமானியான பிரத்யும்ன ரூபம் உபாஸிக்கச் சிறந்தது)

24. ப்ரஸவத்தில் வந்தவைகளில் எது சிறந்தது? பிள்ளை. (ப்ரஸவமாகிய க்ஞானத்தைச்சொல்லக் கேட்பவர்களில் தன் சொந்த பிள்ளை சிறந்தவன் என்றால். அவனிடம் அந்தர்யாமியாயுள்ள அநிருத்த ரூபம் உபாஸிக்கச்சிறந்தது. சிஷ்யாதிகளைவிட தன் சொந்த பிள்ளை கேட்பதைச்சொல்லி அவனிடம் அந்தர்யாமியாயிருக்கும் அநிருத்தனை ஸேவிப்பது மேல் என்று தாத்பர்யம்)

25. திடமான இந்திரியங்களால் விஷயங்களை அனுபவித்தும், புத்திமான் என்று உலகத்தாரால் மதிக்கப்பெற்றும், எல்லாப்பிராணிகளுக்கும் ஸம்மதனுயிருந்தும், தான் உயிருள்ளவனென்று யார் எண்ணுவதில்லை? தேவதை, அதிதி, ப்ருத்யன், பித்ருக்கள், தன் சரீரம் ஆகிய இந்த ஐவர்களுக்கும் உதவாதவன் (சாஸ்திரமறிந்திருந்தும் தேவதையான முக்ய ப்ராணர், அதிதி, ப்ருத்யர்களாகிய இந்திரியாபிமானி தேவர்கள், பெற்றோர்களிடமுள்ள பகவத் ரூபங்கள் இவர்களின் சேவைக்காக விஷய ஸுகத்தினின்றும் பஞ்சேந்திரியங்களை திருப்பாதவன் உயிருடன் இருந்தும் உயிர் போனவனுகவே எண்ணுவான்)

26. பூமியைவிட (குருவான) பளுவான வஸ்து எது? தாய் (அவள் அந்தர்யாமியான வாஸுதேவன்)

27. ஆகாயத்தைவிட உயர்ந்த பொருள் எது? தந்தை. (அவனிடம் அந்தர்யாமியாயுள்ள ஸங்கர்ஷணர்)

28. காற்றைவிட வேகமாயுள்ளது எது? மனஸ் (அதனிடமுள்ள ப்ரத்யும்ன ரூபம்)

29. புற்களைவிட அதிகமானது எது? சிந்தை (எல்லாவிடங்களிலும் புற்களைப்போல் அதிகமாய் உண்டாகிறது)

30. தூங்கிக்கொண்டிருந்தும் கண்களை திறந்திருப்பது எது? மீன் (யோக நித்ரை செய்தும் கண்களை திறந்திருப்பவர் மத்ஸ்ய ரூபி பகவான்)

31. ஜனனமாகியும் எது சலிப்பதில்லை? முட்டை. (பிரம்மாண்டமாகிய முட்டை ஜனனமடைந்தும் ஸ்வதந்திரமாய் சலிப்பதில்லை)

32. ஹிருதயம் எதற்கு இல்லை? கல்லுக்கு. (மனதை ஜயித்து நிஸ்சலனானவனுக்கு ஹிருதயமாகிற ஆசை இல்லை)

33. வேகமாய் விருத்தியாவது எது? ஆறு. (ஆறுபோல் பெருகும் இந்திரியங்கள் விஷயங்களிலுள்ள ஆசையின் வேகத்தால் விருத்தியடைகின்றன)

34. ப்ரயாணத்தில் நண்பன் யார்? பணம் (வீட்டை விட்டு வெளியே பிரயாணம் செய்வதாகிய குருகுல வாஸத்தில் பிரம்மசாரிக்கு அவனுடன் படிக்கும் ஸஹாத்யாயிடம் அந்தர்கதனாயுள்ள விஷ்ணு. உபாஸிக்கத் தகுந்தவன்)

35. வீட்டில் நண்பன் யார்? பாரியை (வீட்டில் வசிக்கும் கிருகஸ்தாஸ்ரமிக்கு தன்பாரியாளிடம் அந்தர்கதராயிருக்கும் விஷ்ணு) நண்பனாய் உபாஸிக்கத் தகுந்தவனாவான்.)

36. வியாதிஸ்தனுக்கு நண்பன் யார்? வைத்தியன் (வைத்தியனிடமுள்ள தன்வந்தரியான ஹரி உபாஸிக்கத் தகுந்தவன்)

37. இறக்கப் போகிறவனுக்கு நண்பன் யார்? தானம் (இறக்கப்போகிறவனான மனுஷ்யனுக்கு நண்பன் அபயத்தை அளிப்பதாயுள்ள க்ஞானோபதேசம்)

38. எல்லாப்ராணிகளுடையவும் அதிதி யார்? அக்னி (வைச்வதேவத்தில் ஆராதிக்கப்படும் அக்னி)

39. ஸநாதன தர்மம் எது? மோக்ஷதர்மம் (லாபகரமானவரும் நித்யமுக்தருமான தர்ம ஸ்வரூபர் ஹரி)

40. அமிர்தம் எது? பசும்பால். ஸோமம் (ஸோமனான சந்திரனால் அபிமானிக்கப்படும் பசும்பால்)

41. உலகை வியாபித்திருப்பது எது? வாயு (சராசர உலகமெல்லாம் வாயு பகவானாகிற முக்யப்ராணருக்கு அதீனமானது)

42. ஒண்டியாய் நடமாடுபவன் யார்? சூரியன் (சூரியாந்தர்கதனான நாராயணன் தான் ஒண்டியாய் சகாயமின்றி சஞ்சரிக்கிறான்)

43. ஒருதரம், பிறந்து மறுபடியும் பிறப்பவன் யார்? சந்திரன். (ஒவ்வொரு கல்பத்திலும் அடுத்தடுத்து பிறப்பவர் சந்திராந்தர்கத தன்வந்தரி)

44. குளிருக்கு பரிகாரம் எது? அக்னி (ஹிமமாகிய அக்ஞானத்திற்கு பரிகாரம் க்ஞானமாகிய அக்னி)

45. மகத்தான பலனைத் தருவது எது? பூமி (ஸத்ஸாதனம் செய்ய இடம் தருவதால் பூமி அநந்தமான பலன்களைத் தருகிறது.)

46. எதனால் தான் தர்மம் உண்டாகிறது? தீக்ஷையால் அவரவர்களுக்குரிய வர்ணாசிரமோசிதமான காரியங்களில் தீக்ஷை கொண்டிருப்பது ஹரியை அடைய முக்ய ஸாதனமாயுள்ள தர்மம்)

47. எதனால் தான் கீர்த்தி ஏற்படுகிறது? தானத்தால். (கீர்த்தி ஏற்படுவது ஞானத்தால் தான்)

48. எதனால் தான் ஸ்வர்கமடைதல் ஏற்படுகிறது? ஸத்யத்தால் (மோக்ஷத்திற்கு ஸாதனம் ஸத்யமே)

49. எதனால் தான் ஸுகம் உண்டாகிறது. சீலத்தால் (ஸமஸ்தப்ராணிகளிடம் த்ரோஹம் செய்யாமலிருப்பது தான் ஸுகத்திற்கு ஸாதனம்)

50. மனுஷ்யனுடைய ஆத்மா யார்? புத்ரன். (மனுஷ்யனுக்கு ஆத்மா நியமனம் செய்பவன் நரகத்தைப் போக்குபவராகிய ஹரி)

51. மனுஷ்யனுக்கு தெய்வத்தால் உண்டாக்கப்பட்ட நண்பன் யார்? பாரியை (ஹிருதயத்தில் போஷிக்கப்படுவதால் பாரியை எனப்படும் ஹரிதான்)

52. மனுஷ்யனுடைய சரீரத்துக்கு ஜீவனம் எப்படி? மழையால் (ருத்திரனின் ரக்ஷகனான பிரம்மாவுக்கும் ஜீவனமாயிருப்பவரான பர்ஜன்யரெனப்படும் விஷ்ணுவால்)

53. மனுஷ்ய சரீரத்திற்கு கதி எது? தானம் (சிஷ்யர்களுக்கு உபதேசிக்கப்படுவதால் தானமெனப்படும் விஷ்ணு தான் அந்தந்த அதிகாரிகளுக்கு கதி)

54. தான்யமானவைகளில் எது சிறந்தது? நிபுணனாயிருத்தல் (மோக்ஷத்தைத் தருபவைகளில் சிறந்தது தன் வர்ணாசிரமாசிதமான காரியங்களில் நிபுணனாயிருத்தல்)

55. செல்வத்தில் சிறந்தது எது? காதால் கேட்பது. (சிரவணம் செய்ததை ஆவிருத்தி செய்வது சிறந்த செல்வம்)

56. லாபத்தில் சிறந்தது எது? ஆரோக்யம். (காமக்ரோதாதிகள் இல்லாமலிருப்பது ஆரோக்யமாகும்)

57. சுகத்தை தருபவைகளில் எது மேலானது? திருப்தி (யதிருச்சையாய் கிடைத்ததில் திருப்திதான் சுககரமானவைகளில் சிறந்தது)

58. உலகில் எந்த தர்மம் சிறந்தது? ஸாதுக்களுக்கு உபகாரம் செய்வது (ஸ்ரீஹரி மனுஷ்யனுக்கு நிபாபானுகனென்று பிறருக்கு உபதேசம் செய்வதாகிய தர்மம் சிறந்தது.

59. எந்த தர்மம் எப்போதும் பலனைத் தரும்? வைதிகதர்மம் (யக்ஞம் அத்யயனம் தானம் இம்மூன்றும் எப்போதும் பலனைத் தருபவை)

60. அடக்கப் பட்டாலும் யார் வருத்தப்படுவதில்லை மனஸ். (மனஸ் நிக்ரஹிக்கப்பட்டாலும் வருத்த முண்டாவதில்லை

61. யாருடன் சம்பந்தம் செய்வது கெடுவதில்லை? ஸாதுக்களுடன் (ஸாதுக்களுடன் சந்திப்பு வைப்பது சுச்வரான பல அளிப்பதில்லை)

62. எதை விட்டால் உலகத்தாருக்கு பிரியனாகிறான் அபிமானத்தை (நான் சுதந்திரன் இது என்னால் செய்யப்பட்டது என்ற எண்ணத்தை விட்டால் ஹரிக்கு பிரியனாகிறான்)

63. எதை விட்டால் துக்கமில்லை? கோபத்தை (ஸாதுக்களிடம் கோபம் செய்வதை விட்டால் மோக்ஷஸுகமுண்டு)

64. எதை விட்டால் பாக்யவான் ஆகிறான்? காமத்தை (தனக்கு விருத்தமான ஆசையை விடவேண்டும்.)

65 எதை விட்டால் ஸுகசாலியாகிறான்? லோபத்தை (ஸத்பாத்ரர்களிடம் லோப புத்தியை விட்டு யதேச்சமாய் தானம் செய்வதால் எப்போதும் சுகசாலியாயிருப்பான்) (தொடரும்

விசேஷ தினங்கள்.

28—12—37	மங்களவாரம்	ஏகாதசி உப.
1— 1—38	சனிவாரம்	திலதர்ப்பணம், விஷ்ணுப. உப. ஹனுமத் ஜயந்தி.
4— 1—38	மங்களவாரம்	சிரவணம் உப. விஷ்ணுப. உப.
6— 1—38	குருவாரம்	தனூர் வியதிபாதம்.
12— 1—38	புதவாரம்	ஏகாதசி உப.
13— 1—38	குருவாரம்	முக்கோடித்வாதசி, ஸ்ரீரகூத்தமஸ்வாமிகள் புண்யதினம் தனூர் மாஸ பூர்த்.
14— 1—38	சுக்ரவாரம்	உத்தராயண புண்யகாலம் பகல் மணி [12-25 வரை.
16— 1—38	பானுவாரம்	பௌர்ணமி, விஷ்ணுப. உப.

208169

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி ஸ்ரீராம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் ... தீர்ந்து விடுமாறிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 1-8—0 தபாற்கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் ...ன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பது ... புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

...வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ...மத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

...க்தாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆ...த்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் ...புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தொகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.